# வலைவீச் புராணம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 514

# வலைவீசு புராணம்

பதிப்பாசிரியர்

**புலவர் வீ. சொக்கலிங்கம்,**

தமிழ்த்துறை (ஓய்வு)

*சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.*

*தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்*

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

2008 ] [விலை: ரூ. 80-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : வலைவீசு புராணம் |
| பதிப்பாசிரியர் | : புலவர் வீ. சொக்கலிங்கம் |
| வெளியிடுபவர் | : இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 514 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதற்பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2008 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 172 |
| படிகள் | : 250 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும்<br>ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : லேமினேசன் அட்டை |
| பொருள் | : புராணம் |
| விலை | : ரூ. 80-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் பயன்பட்டுக் கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக் கருவூலமாகவும் பன்மொழி நூற்களஞ்சியமாகவும் பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது.

இந்நூலகத்தைத் தமிழகத்தினர் மட்டுமின்றிப் பிற மாநிலத்தவரும் பிறநாட்டினரும் பயன்படுத்தி வருகின்றனர். தமிழகத்தில் உள்ளோர் முன்னிலும் கூடுதலான அளவில் தற்போது இந்நூலகத்தைப் பார்வையிட்டும் பயன்படுத்தியும் வரும் மேம்பாடும் நிகழ்ந்து வருகிறது.

நமது நூலகத்தில் சற்றேறக்குறைய ஐம்பதாயிரம் பன்மொழிச் சுவடிகள் பாங்குறக் காக்கப்பட்டு வருகின்றன. இச்சுவடிகளிலிருந்து இதுவரை 505 நூல்கள் வெளியிடப் பட்டுள்ளன. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நூலகத்தில் தமிழ்த்துறையில் பண்டிதராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற புலவர். வீ. சொக்கலிங்கம் அவர்கள் இந்நூலகத்தில் நாற்பது நூல்களுக்குமேல் பதிப்பித்த பெருமைக்கும் பெற்றிக்கும் உரியவர். இவ்வரிசையில் இவர் தற்போது வலைவீசு புராணம் எனும் சுவடியை (சுவடி எண். 299/டி-515) பதிப்பித்துள்ளார். இது முதலில் 1975ஆம் ஆண்டு இந்நூலக பருவ இதழில் கட்டுரையாக வெளிவந்தது. தற்போது நூலாக பருவ இதழில் கட்டுரையாக வெளிவந்தது. தற்போது நூலாக வெளியிடப்படுகிறது. கூடல் மாநகரில்

சொக்கநாதர் புரிந்த 64 திருவிளையாடல்களில், திருவாலவா யுடையார் திருவிளையாடலில் 22-வது திருவிளையாட லாகவும், பரஞ்சோதி முனிவருடைய திருவிளையாடலில் 57-வது படலமாகவும் வரும் வலைவீசு புராணம் இச்சுவடியில் கூறப்படுகிறது. புராணம் என்ற சொல் பண்டை வரலாறு என்று பொருள்தரும். புராணக் கதைகள் நல்ல நீதிகளைக் கூறி மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் கூறப்படுவன. வலைவீசு புராணமாகிய இந்நூல் ஆசிரியர் காங்கேயன் என அறியமுடிகிறது.

இந்நூலில் "பசு மண்கலம் முன்பு நீராலே ஈடுபட்டு தீயினாலே சூடுபட்டுப் பின்பு நீரை முகந்திருந்த தன்மை போல" போன்ற இனிய பல மொழிகள் எடுத்தாளப் பட்டுள்ளன. இந்நூலை பதிப்பித்த திரு. வீ. சொக்கலிங்கம் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், இந்நூல் கணினி அச்சில வெளிவர கணினி பிரிவில் பணியாற்றியவர்களுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எம். எஸ். சண்முகம், இ. ஆ. ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
**சரசுவதி மகால் நூலகம்.**

தஞ்சாவூர்,
27-9-2008.

தமிழ் வாழ்க

# முன்னுரை

**வாயானை மனத்தானை மனத்துள்நின்ற**
**கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான்றன்னைத்**
**தூயானைத் தூவெள்ளை யேற்றான்தன்னைச்**
**சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்துநின்றென்**
**தாயானைத் தவமாய தன்மையானைத்**
**தலையாய தேவாதி தேவர்க்கென்றும்**
**சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச்**
**சிவனடியே சிந்திக்கப் பெற்றேனானே ! -அப்பர்.**

தலையன்பிற் கட்டுண்டு, ஆலவாயழகர், அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் **அன்னை**யாம் வந்தியவள் தரும்பிட்டுப் பிட்டுண்டு, அன்னை அங்கயற்கண்ணியொடும் மதுரையில் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். அவ்வழகிய சொக்கர், அடியார்கள் பொருட்டுக் கூடலம்பதியில் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்தார்.

அத்திருவிளையாடல்கள் தமிழிலும், வடமொழியிலும் நூல்களாக எழுந்தன. ஸ்காந்தத்தில், அகத்திய சங்கிதையில் உள்ள ஆலாசிய மகாத்மியம், உத்தர மகா புராணத்தின் பகுதியாகிய சார சமுச்சயம், நீபாரணிய மகாத்மியம் (அ) கதம்பவன புராணம், அட்டமிப் பிரதட்சிண மகாத்மியம், சுந்தரபாண்டியம், சிவலீலார்ணவம் முதலியன வடமொழியிலும், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் (பழைய திருவிளையாடல்(அ) வேம்பத்தூரார் திருவிளையாடல்), கடம்பவன புராணம், சுந்தரபாண்டியம் (தமிழ்), (பரஞ்சோதியார்) திருவிளையாடற் புராணம், அட்டமிப் பிரதட்சிண மான்மியம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, திருவிளையாடற் பயகரமாலை முதலியன தமிழிலும் எழுந்தன. இவற்றுள் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் மிகச் சிறந்ததாக அறிஞர்களால் கருதப்படுகின்றது.

அவ்வறுபத்து நான்கிலும் வலைவீசிய திருவிளையாடல், திருவாலவாயுடையார் திருவிளையாடலில் 22-வது திருவிளையாடலாகவும், பரஞ்சோதியாருடையதில் 57-வது படலமாகவும் பாடப்பட்டுள்ளது.

## கதைச்சுருக்கம்

மாதிருக்கும்பாதியன், கைலையில் வீற்றிருக்குங்கால், குழல்வாய் மொழியம்மை எழுந்து, பணிந்து, அவர்தம் அணிகலன்களின் விளக்கம் வினவினாள். அதற்குப் பதிலளித்த பின்னர், மேலும் கேட்க, தலைமாலை அணிந்த வரலாறும் கூறினார். ஞானகோசப் பொருளை வினவிய உமைக்கு, உற்றவர்க்குற்றவன், அலைகடல் வடவைக்குள்ளிருந்து, ஞானகோசத்தினை ஞானாம்பிகை கைக்கொடுத்து உபதேசிக்குங்கால், அறுமுகவன் வண்டுருக்கொண்டு, அம்மையின் கூந்தலில் அமர்ந்து, கேட்டிருந்ததால் முனிந்த முக்கட்கடவுள்,முருகனை மகரமாகுமாறு சபித்தார்.

பின்னர் அங்கயற்கண்ணி, "சத்தி பெரிதோ? சிவம் பெரிதோ?" எனக்கேட்க, "சிவமே பெரிது" எனக் கூறக் கேட்ட பராசக்தி, "சத்தியே பெரிது" எனவும், ஆதிநாதன் அவள் கையிலிருந்த கோசத்தை வாங்கிக் கடலில் எறிந்தார். அதனை மகரம் விழுங்கியது.

பண்ணிசைப்பரமர், பார்வதி தேவியைப் பரதவர் மகளாகெனச் சபித்தார். கருணாம்பிகை, குழவியாகிக் கடலில் மிதந்து செல்ல, பரதவர் கோமான் 'அதியரையன்', அதனை எடுத்துத் தன் மனைவி வருணவல்லி கைக்கொடுத்து, வளர்த்து வந்தான்.

மகரம், கடலைக் கலக்கித் தொல்லை கொடுத்து வந்தது. அதனால் பரதவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லாது வருந்தினர். மனம் வருந்திய அதியரையன், "இம்மகரத்தைப் பிடித்துத் துயர்தீர்ப்பார்க்கு, என் புதல்வி, 'திரைசேர் மடந்தை'யைத் தருவேன்" என்றறிவித்தான். அதுபோது, அதிரவீசியாடுவார்,

பரதவன்வேடம் புனைந்து வந்து, அலைகடலில் வலைவீசி, மகரத்தைப் பிடித்து, அதியரையன் மகளை மணந்தார்.

## திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்

இதன்கண், வலைவீசிய திருவிளையாடலில், எம்பெருமான் உமாபரமேசுவரியாருக்கு ஆகமங்களை உபதேசித்ததாகவும்; அதனைத் திரும்பச் சொல்லும்படிக் கேட்டபோது, 'மறந்தேன்' என்றதனால், பரதவர் மகளாகும்படிச் சபித்ததாகவும்; தானே வந்து மணப்பதாகச் சாபவிமோசனம் அளித்ததாகவும்; உடன் கோபித்த விநாயகர் ஆண்டுள்ள சுவடிகளைக் கடலில் எறிந்ததாகவும்; அறுமுகவேள், ஆலவாயர் கையிருந்த ஆகமத்தை வாங்கிக் கிழித்ததாகவும்; அதனால் விநாயகரைச் சபிக்க மாட்டாமல், முருகக்கடவுளை மூங்கையனாகப் பிறக்கும்படி சபித்ததாகவும்; அதுவேளை, கணநாதனை உள்ளே விட்டதற்காக திருநந்திதேவரை, மகர மீனாகும்படிச் சபித்ததாகவும், பின்னர், சிவன் மகரத்தைப் பிடித்துப் பரதவர் மகளை மணந்து, திருவுத்தரகோச மங்கை என்னும் ஊரில் எம்பெருமாட்டிக்கு ஆகமங்களை உபதேசித்துத் தனது பேருருக்காட்டி, ஆகம கோசங்களை அங்கேயேவைத்து மதுரை புக்கதாகவும் கூறப்படுகின்றன.

## பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்

இதன் கண், வலைவீசிய படலத்தில், நற்றமிழிறைவன் வேத மறைப்பொருளைப் பகருங்கால், அகிலாண்ட நாயகி கவனக் குறைவுடனும் அச்சத்துடனும் கேட்டதால், அவளைப் பரதவர் மகளாமாறு சபித்ததாகவும்; தான் வந்து மணப்பதாகச் சாப நீங்க மருளியதாகவும்; பிள்ளையார், கீழிருந்த சுவடிகளைக் கடலில் எறிந்ததாகவும்; குமாரக்கடவுள், மெய்யர்க்கு மெய்யன் கையிருந்த கோசத்தை வாங்கிக் கடலில் எறிய உடன் முனிந்த அழகார்மேனியன், அவரை மூங்கையனாகும்படிச் சபித்ததாகவும்; பிள்ளையாரையும் கந்தக் கடவுளையும் உள்ளே அனுமதித்ததற்காகத் திருநந்தி தேவரை, மகரமாகும்படிச்

சபித்ததாகவும்; பிறகு சொக்கர், மகரத்தைப் பிடித்து பரதவர் மகளை மணந்து, உத்தரகோசமங்கையில் வேத விழுப்பொருளை சோமசுந்தரக்கடவுள், சோமசுந்தரிக்கு உபதேசித்து, மதுரையை அடைந்ததாகவும் பேசப்படுகின்றன.

இவ்வாறு கூறப்படுகின்ற வரலாறுகளுள் உள்ள மாறுபாடுகளைக் காணலாம்.

பாட்டுக்குருகுஞ் செந்தமிழ்ச் சொக்கர், கூடன்மா நகரில் புரிந்த 64 திருவிளையாடல்களில், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்து, 22-வதாகவும், 24 செய்யுட்களாகவும், பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணத்து 57-வதாகவும், 64 செய்யுட்களாகவும் பாடப்பட்ட வலைவீசிய திருவிளையாடலை மட்டும் புராணமாகப் பாடியவர் 'காங்கேயன்' என்பது 7-ம் செய்யுளால் அறியக்கிடக்கின்றது.

## நூல்

இந்நூல், எமது மகால் சுவடி எண். 299/டி. 515 கொண்டது. காலவசப்பட்டு மிகச்சிதிலமாக உள்ள இச்சுவடி, மிகவும் ஒடிந்தும் முறிந்தும் பூச்சியரித்தும், காட்சி தருகின்றது. புதிதாகப் பாக்கள் எழுதுவது எளிது, ஆனால் பழைய சுவடியில் உள்ள பாடல்களை அப்படியே அதன் தகுதி குறையாமல், அதன் ஆசிரியர் என்ன கருத்துப்பட எழுதினாரோ என்பதனை உணர்ந்து, விடுபட்ட இடங்களைப் பிழையின்றி நிறைவு செய்வதென்பது, அத்துணை எளிதல்ல. இதனை, முன் அனுபவமுள்ளவர்கள் அறிவர். சான்றாக:- "கோங்கினுடனே" எனத்தொடங்கும் 149-ம் எண்ணுள்ள செய்யுளின் வினைமுடிபு சரியில்லை. 145 முதல் 152 வரை உள்ள செய்யுட்கள் உள்ள ஏடுகள், ஒடிந்தும் சிதைந்தும் இருப்பதால், அவைகளைச் சரிப்படுத்த மிகவும் முயற்சி தேவைப்பட்டது.

159-ம் பாடலின் பின்னுள்ள உரைநடைப் பகுதியில் 'இருத்தலால்' என்ற சொல் 'இருக்கலால்' என்று எழுதப் பட்டிருக்கிறது. இவ்வாறு பல சொற்கள் தனது உருவில், சற்று

மாறுபட்டும், முற்றிலும் மாறுபட்டும் இருத்தலால், இவை, இதனைப் படியெடுத்தவரின் செயல் என்று எண்ண இடமுளது.

விருத்தமும், அகவலும், இடையிடையே உரைநடையும் விரவி வரப்பட்ட இந்நூலில், ஒருசில அகவல்களை அறுசீர் விருத்தம்போல் பாடியுள்ளார். இவை, 'விருத்த - அகவல்' போலும். 86-ம் பாட்டின் உரைநடையில் உடற் கூற்று வகை, 96 தத்துவத்துடன் கூறப்பட்டுள்ளது. இழியுடலின் தன்மையும் இதன்கண் பேசப்படுகின்றது. உடல் வளர வளர ஏற்படும் தீமைகளைக் குறிப்பிடுகின்றது.

'பசுமண்கலம் முன்பு நீராலே ஈடுபட்டு, தீயினாலே சூடு பட்டுப் பின்பு நீரை முகந்திருந்த தன்மைப் போல' (பக்கம் 51) முதலாகப் பல பழமொழிகள் சிறப்பாக உள்ளன.

அதே உரைநடையில், "காமிகத் துரோகமும், குருத்துரோகமும் தீரும்படிக் கன்மபூமியிலே போய்க் கன்மம் அனுபவித்து வரக்கடவை" என்று புழுகுநெய்ச் சொக்கராம் காலகாலன், கூடலழகியைச் சபித்தது நயமாக உளது. இதுபோன்று பல இடங்கள் உள்ளன.

63 நாயன்மார்களில் ஒருவராகிய அதிபத்தநாயனார் வரலாறு கூறி, அதியரையன் பிறந்த பரதவர் குலத்தினை மேம்படுத்திக் கூறுகின்றார். (பக்.17) இவ்வாறு பல செய்திகள் பேசப்படுகின்றன.

இலக்கணப் பிழைகளும் வேறு பிழைகளும் காணப்படு கின்றன. இதன்கண்ணுள்ள சொற்சிதைவுகளாலும், சொல் உருமாற்றங்களாலும், இது மூலச்சுவடியின் 'படியாக' இருக்கலாமோ என எண்ண இடமளிக்கிறது.

## நூல்கள் எழக் காரணம்

உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்தொறும் ஒளிந்து நிற்கின்ற ஒருவன் உண்டென்கின்ற கொள்கையினை

உடையவர்களாய ஆத்திகர்கள் தமக்கே மறை, அங்கம், ஆகமம், புராணம், இதிகாசம், காவியம், இலக்கணம், சிற்றிலக்கியம், பேரிலக்கியம் முதலாய நூல்கள் பயன்பட எழுந்தன. அவைகள், பெறுதற்கரிய மானிடப்பிறவியினைப் பெற்றவர்க்கு, உயர்ந்தோரான் எடுத்து ஓதப்பெற்ற உறுதிப் பொருள்களாய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் தரவல்லன. மக்கள் மாக்களாக உழலாது, மக்களாக வாழவேண்டுமென்றே அவைகள் பல நீதிகளை உள்ளடக்கிக்கொண்டு தோன்றின. மனிதர்கள், தாம் நல்வழி நடக்கவும், பிறருக்குத் தீங்கிழைக்காது, பிறரையும் நல்வழி வாழவைக்கவும் எழுந்தன அந்நூல்கள்.

## புராணம்

'புராணம்' என்ற சொல்லுக்குப் பண்டைவரலாறு என்று பொருள். இது, 'கலைஞானம்' அறுபத்து நான்கிலொன்று. அது உலகத்தின் தோற்றம், உலகக்கேடு, பாரம்பரியம், மந்வந்தரம், பரம்பரைக்கதை ஆகிய இவ்வைந்து இலக்கணங்களையுமுடையது. இத்தகு சிறப்பு வாய்ந்த புராணங்கள், நல்ல நீதிகளைக் கதைகள் வாயிலாக எடுத்தோதி மக்களை நல்வழிப்படுத்துவன.

## வலைவீசு புராணம்

மதுரையில், செந்தமிழ்க்கினிய சொக்கர் புரிந்த திருவிளையாடல்கள் அறுபத்து நான்கிலொன்று வலைவீசிய திருவிளையாடல். அந்த ஒரு திருவிளையாடலை மட்டும் இங்கு புராணமாகப் பாடியுள்ளார். ஏனைய 63-ம் புராணமாகப் பாடப்பட்டுள்ளனவா; பாடப்பட்டு அவைகள் கிடைத்தற்கரிதாகி விட்டனவா என்பது புலனாகவில்லை. பாடப்பட்டனவாகக் காணப்படின், அவைகள் எமது மகாலைச் சேருமாயின் பயன்தரும்.

## ஆசிரியர்

இதனைப்பாடியவர் **காங்கேயன்** என்று அறியக்கிடக்கிறது. இதர செய்திகள் இன்மையால், இவர் ஒட்டக்கூத்தரால் 'நாலாயிரக்கோவை' பாடப்பெற்று, 12-ம் நூற்றாண்டில் 'புதுவை' என்னும் ஊரில் வாழ்ந்த "காங்கேயன்" என்ற

வள்ளலோ, அன்றி, துறவியாகச் செங்கற்பட்டில் இருந்து, 'உரிச்சொல் நிகண்டி' னை இயற்றிப் 14-ம் நூற்றாண்டில் வாழ்ந்த "காங்கேயன்" என்ற வேளாளப் புலவரோ; (அன்றி, 10 தொகுதிகள் மட்டுமே உள்ள 'உரிச்சொல் வெண்பா' பாடிய "காங்கேயன்" என்ற புலவரோ) அன்றி வேறு காங்கேயனோ, ஆய்வுக்குரியது.

## காலம்

காலம் முதலானவைகள் ஏதும் கணக்கிடக் கூடவில்லை. பிற்பகுதி உள்பட இச்சுவடி, மிகவும், பூச்சி அரித்தும், ஒடிந்தும் காணப்படுவதால், ஏட்டின் நிலைமை கருதி, இந்நூல் 14-ம் நூற்றாண்டாகலாம் எனக்கூற இடமுளது.

## சுவடி

இது, எமது மகால் M. 299/D. 515 என்ற எண்களைத் தாங்கியுள்ளது.

## பிறசெய்தி

இச்சுவடியின் பின் பகுதியில், "குமாரக்கடவுள் அகத்தியருக்கு உபதேசித்த சருக்கம்" (20 செய்யுட்கள்) எழுதப்பட்டுள்ளது.

"அரனருளிப் போயினபின் முருகரெய்தி
அருந்தவமுன் புரிகிரியில் அகத்தியற்கு
வருமறையின் மூலவெழுத் தாகிவோங்கு
மால்பிரமற் கரிவரிதாய் மன்னுகின்ற -" எனத்தொடங்கி

-யின்றெளிதை யந்தனக்குச் செவ்வேள்தந்த
வியல்பினால் யானுரைத்தே னிதற்குமேலும்
வென்றிபுனை சூர்தடிந்த தம்பிரானார்
விடைகொடுத்த படியேயான் விளம்பலுற்றேன்.

*உபதேசச் சருக்கம் முற்றும்.*

என முடிக்கும் பகுதி, இந்நூலில் இடம்பெறவில்லை.

## நன்றி

நீண்டகாலமாக எமது மகால் பருவ இதழில் தொடர்ந்து வெளிவந்த இந்நூலை, ஆய்ந்து வெளியிட அனுமதி தந்த, எமது நூலக நிருவாகக்குழு அங்கத்தினர் அனைவருக்கும் முதற்கண் நன்றி கூறி, இதனை அச்சேற்றித்தந்த, திருவரங்கம் ஸ்ரீ வாணி விலாச அச்சகத்தாருக்கும் எனது நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வேண்டுகோள்

காலத்தினால் சிதைந்துள்ள இந்நூலைக் கூடியமட்டில் செப்பம் செய்து, பதிப்பித்துள்ளேன். இதனைப் பெற்றுப் பயனை எய்தும் பெரியோர்கள், இதன்கண்ணுள்ள குறைபாடுகளைத் தெரிவிப்பார்களாயின், இனிவரும் பதிப்புகள் சிறப்பாக அமைய ஏதுவாகும். அத்துடன், இதன் வேறு பிரதிகள் சுவடிகளாக வைத்திருப்போர், அவற்றை எமது மகாலுக்கு அனுப்பினால், பெரிதும் உதவியாக இருக்கும்.

பொதுவாக எம்மொழிச் சுவடியாயினும் தம்மிடமுள்ளவைகளை எமது மகாலுக்குத் தந்து, அவைகள் மக்களுக்குப் பயன்பட உதவுவார்களாயின், அவர்களது பெயர்கள் நிலைத்திருக்கும் பெரும் பேற்றினை எய்துவர்.

எல்லாவற்றிற்கும் மேலாய்த் தோன்றாய்த்துணையாய் நின்ற, மீனாட்சி சுந்தரேசன் பொற்பாத கமலங்களை வணங்கி, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

**புலவர். வீ. சொக்கலிங்கம்,**
*தமிழாசிரியன்,*
**சரசுவதி மகால் நூலகம்.**

தஞ்சாவூர்,
*17-5-87.*

உ

தமிழ் வாழ்க.

# வலைவீசு புராணம் ★

## காப்பு

இருண்மலந் தீரநற் போத மெய்தவுந்
தருபல முத்தமிழ்ச் சாரதிப் பெண்ணும்
மருவு பேறது முற்று மருளெனக்
குருபரன் பாதமுட் கொண்டு போற்றுவாம். (1)

அரும்பைவைக் குஞ்சடை நின்மல னாரந்த வாண்பனையைக்
குரும்பைவைக் கும்படிப் பாடவல் லார்கொற்கை வேந்தன்மனம்
திரும்பவைக் குஞ்சொற் றிருஞான சம்பந்தன் செந்தமிழ்நூல்
விரும்பவைக் குங்கொடு போய்விண்ணு ளோர்க்கு மிகும்பதத்தே ! (2)

வலங்கொள் சிவலிங்கம் மண்மேல்வைப் பிற்றுப்
பொலங்கொள் முடிகளிற்றைப் போற்றி - இலங்கேசன்
கற்பித்த பூசை(தனைக் காக்கின்) சிரம்வருந்தி
நிற்கப் பிறவா னிலத்து. (3)

குமரக்கடவுளேதுணை.

(செருவளர் கோட்டு நீடு) செங்கைமூழ் சகத்திலேறி
உருவளர் கோட்டு வாகை யானைமா முகனை (ப் போற்றிக்)
(குருவ)ளர் கோட்டுத் தீக்கை கொண்டுல குய்யக் கொண்ட
ஒருவளர் கோட்டு வேழத் திருப்பதம் உள்ளம் வைப்பாம். (4)

ஒற்றை மருப்பு மிருபுயமும் ஒளிசேர் நயன மொருமூன்றும்
கொற்ற வலங்கற் புயநான்கும் கோலக் கரங்க ளோரைந்தும்
வெற்றி புனைந்த மதவாறும் விளங்கக் குன்றிற் பிடிவருந்தப்
பெற்ற களிற்றின் திருநாமம் பேசப் பாசப் பிறப்பறுமே ! (5)

★ சுவடி எண். 299

அன்றிப் பெயர்மால் வரையுருவ
வடரும் மதமா உடலுருவ
வென்றிச் சூரன் மார்புருவ
மேவு மடியார் வினையுருவ
மன்றக் கடம்பன் றொடைவாகை
வடிவேல் வாங்கும் பெருமானை
இன்றிப் புராணம் நிறைவேற
விசைக்குஞ் சதங்கைப் பதம்பணிவாம். (6)

தேங்கிய கங்கை சூடுஞ் சிவனொரு படகி லேறி
வாங்கிய வுததி தன்னில் வலைவீசு புராணஞ் சொன்ன
காங்கயன் றன்னை யாளுங் காங்கேயன் கந்த சுவாமி
பாங்குடன் மகர மாய பணிவிடை போற்றி ! போற்றி !! (7)

**அவையடக்கம்**

வெயிற்பா லெரியைப் பாவித்து
வெளிமின் மினிதான் மின்னுவபோல்
மயிற்பா லினத்தைப் பாவித்து
வராக[1] மகிழ்ந்து நடிப்பனபோல்
குயிற்பால் மொழியைப் பாவித்துக்
குடிஞை யிருந்து குழறுவபோல்
இயற்பா வலரைப் பாவித்து
யானுங் கவிதை யியம்பலுற்றேன். (8)

## வாழ்த்து

**வேறு**

வாழ்க நாற்பத்து ளாயிர மாதவர்
வாழ்க நீறுட னேவள ராகமம்
வாழ்க வஞ்செழுத் தான மறைப்பொருள்
வாழ்க (மண்ணில்) மறையொரு நான்குமே ! (9)

---

*1. முள்ளம்பன்றி.*

## புராணச்சுருக்கம்

மடவாள்தன் பாகங் கொண்டு
விண்ணுமண் ணுலகு முய்ய
கடல்விட முண்ட நாதன்
கைலையி லிருந்த வாறும்,
மருள்விழி உமையாள் நங்கை
யதிசயித் தெழுந்தி ருந்து
வரியர வணிந்த நாதன்
மலரடி பணிந்த வாறும்,
பொன்புது வாடை சாந்தம்
புனையாது புனைந்த தெல்லாம்
அன்புடன் புனைந்த வாறும்,
அருள்செயு மென்ற வாறும்,
வினவிய மடவா ளுக்கு
மேனியி லணிந்த தெல்லாஞ்
சினமிகு மழுவாள் ஐயன்
தெளிவுற வுரைத்த வாறும்,
மலர்மாலை புனைந்தி டாமல்
வளம்பட நகையா நின்ற
தலைமாலை புனைந்த வண்ணம்
சாற்றுமென் றுரைத்த வாறும்,
மருக்கமழ் குழலா ளுக்கு
மாலையன் சென்னி மாலை
கருத்துடன் சாற்ற வேண்டுங்
(காரணங்) கூறு மாறும்,
திருத்தகு மிருவர் மாளத்
தேவரீ ரிலைய மன்றி
யிருக்குமப் பெருமை தன்னை
யியம்பிடு மென்ற வாறும்,
அப்பொரு ளுரைக்குங் காலை
யலைகடல் வடவைக் குள்ளே
அப்புட னிருந்து ரைக்க
வேண்டுமென் றுரைத்த வாறும்,

வடவையி லிருந்து கோச
ஞானநல் வசனந் தன்னைச்
சடையர னெழுதி மங்கை
தன்கையில் கொடுத்த வாறும்,
அறுமுகக் கடவுள் கோ(ல)
அறுபத மாகி யம்மை
செறிமலர்க் குழலின் மீது
திருந்தக்கேட் டிருந்த வாறும்,
அகிலமா மடந்தை கூந்தல்
அறுமுக வண்டை நோக்கி
(ம)கரமாய்த் திரிநீ யென்று
வள்ளலார் முனிந்த வாறும்,
தெரிவைதான் அரனை நோக்கிச்
(சிவசத்தி) யெனுமி ரண்டிற்
பெருமைதா னுடைய தேது
பேசுமென் றுரைத்த வாறும்,
சித்த(மு மகிழ்ந்)து சத்தி !
சிவம்பெரி தென்னக் கேட்டு
சத்திதா னாத லாலே
தையல்கோ பித்த வாறும்,
மலைமகள் செங்கை கோசம்
வாங்கிவா ருதியிற் போடக்
கொலைபுனை மகர மந்தக்
கோசத்தை விழுங்கு மாறும்,
வள்ளலார் முனிந்து மங்கை
பரதவன் றனக்கு நீபோய்ப்
பிள்ளையாய்ப் பிறக்க வென்று
பேதையைச் சபித்த வாறும், [1]
உமையொரு குழவி யாக
உததியில் மிதந்து செல்லச்
சமரவேல் மகர ராசன்
றுயர்பின் சென்ற வாறும்,

---

*1. இதன்பின் தெரிவைதா னரனை நோக்க என்ற வரி மிகையாயுள்ளது.*

பழுதிலாத் தவஞ்செய் கின்ற
பரதவர் பெருமா னந்தக்
குழவியை எடுத்து வீட்டில்
கொண்டுபோய் வளர்த்த வாறும்,
மகரமத் துறையிற் றோன்றி
வலைபட விறக்கா வண்ணம்
சிகரமா மேரு வென்னச்
செருச்செய்து திரிந்த வாறும்,
பரதவர் மகரந் தன்னைப்
படுத்தவர்க் கியான்ப யந்த
கோதையை வதுவை செய்து
கொடுப்பனென் றுரைத்த வாறும்,
அணிமலர் சடையார் வேடம்
சாற்றியம் டிவிமேல் வந்து
மணிவலை வீசி யந்த
மகரத்தை பிடித்த வாறும்,
மறியுலாங் கரத்தா ரந்த
மங்கையை மணந்த வாறும்,
அறிவிலாச் சிறியேன் நாயேன்
அறிந்தவா றியம்ப லுற்றேன். (10)

## வேறு

கலைவீசும் சிறுபிறையும் கடுக்கையுநுண் டுளையெயிற்றுக்
கொலைவீசும் விடவரவும் கொக்கிறகு மொளிவீச
அலைவீசும் புனற்சடையார் அலைகடலிற் படவேறி
வலைவீசு திருக்கதையை மண்மீது வகுத்துரைப்பாம். (11)

## வேறு

உரகமும் மதியுஞ் சூடும்
ஒருவர்தம் பாகங் கொண்ட
மரகத மனைய மேனி
மலைமக ளுமையாள் நங்கை

கரதரு வேன்வ ழங்கிக்
கடலர சாளு மன்றிப்
பரதவர் மரபில் வந்த
பரிசுநா னியம்ப லுற்றேன். (12)

## *செந்தமிழ்நாட்டுச் சிறப்பு*

### வேறு

இமைய மயிலுமை யம்மை
எமையா ளுடையா ரிடப்பாகஞ்
சமைய முதலாய் நின்ற
சத்துவத் தத்துவா தீதத்
திருந்திய செஞ்சடை முடியார்
திருமார் புவடு வாகப்
பெருந்தவஞ் செய்மடப் பாவை
பிறைநா றுஞ்சீ ரடிமான்
முன்னொரு கைக்கரி முகனை
யீன்ற முகிழ்முலைப் பூவைப்
பன்னிரு கைப்பெரு மானைப்
பயின்றெடுத் தபசுங் கிள்ளை. (13)

### வேறு

தேவையிது வென்றுன்னிச் சிவசத்தி யாய்நின்று
மூவுலகு மீன்றென்றும் முதிரா முலைப்பூவைத்
தீயுமாய்ப் புனலுமாய்ச் செகமான ஒருவர்க்குத்
தாயுமாம் மகளுமாம் தாரமுமாம் தனியன்னம்
நிறம்பவளத் தார்சடையார் நெல்லிருநா[1] ழிகையுங்கொண்
டறமற்ற சூடகக்கை பாடகக்கா லாரணங்கு
உறவினுடன் தமையிழந்து கருகுமன்பர் அறியாத[2]
மறிவுடன் வந்தூறு மானந்தப் பெருவெள்ளம்
மஞ்சுபுனலுடன் கருவியடைய மறந்தவர் விழிநீர்

---

1. வையற்ற நெல் என்றுளது. 2. அறியாதவ என்றுளது.

மஞ்சனமாகக் குளித்து மனமருந்து மாலைமருந்து
விரையொலிநீர் திரையடைந்து விண்ணும் மண்ணும்
பரந்தெழுநாள் பரமனுடன் தோணி தனிலினி
திருந்த மங்கை மாநகரி சூழ்ந்த
செந்தமிழ் நாடுதனிற் சிறப்புநா னியம்பலுற்றேன். (14)

**வேறு**

வாளை யுகளத்[1] தடம்பொலிய
வளர்தாள் பூக மடல்வீழ்ந்து
பாளை யலையத் தடத்தின்மலர்ப்
பங்கே ருகத்தின் சொரியரும்பு
வேளை நிகர்க்குங்[2] குலமறையோர்
வேள்விச் சடங்கின் வியந்தளிப்ப
காள விழியா ரேந்துபொரி
மானுங் கவல்செந் தமிழ்நாடு. (15)

**வேறு**

புயல்தழுவுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
குயிலினமும் பல்லவப்பூங் கொம்பினமுங் கொலைக்கமுகும்
வண்டினங்க ளொருநான்கும் மலர்க்கமுநீ ரோடைகளும்
கண்டலும்பொற் கேதகையும் கலாபமட மயிலினமும்
சென்னலுங்கம் புள்ளினமும் செங்கால்வெண் குருகினமும்
கன்னலும்பைங் கதலிகளும் கயலினமும் வராலினமும்
சாதமும் போதகமும் தத்தையுமென் பூவைகளும்
யோதிபமும்[3] போதமையும் உழவருழத் தியரிருப்பும்
மள்ளரேர்ப் பாட்டொலியும் மத்தொலியுந் திரையொலியும்
கள்ளவிழிக் கடைசியர்கள் கழனி(நடு) பாட்டொலியும்
உடைந்தடைக்கும் புனலொலியும் உடைப்படைக்கும் திரளொலியும்
தடந்துறையில் புனலாடுந் தளரியலார் வளையொலியும்
கரதலங்கள் குவியவிரு கண்ணில்வந்து புனல்ததும்ப
அரகரவென் றடியவர்கள் அரற்றுகின்ற திருவொலியும்

---

*1. தடம் பொலின என்றுளது, 2. நிகழுங் என்றுளது, 3. யோதிமமும் எனல் பொருந்தும்.*

செங்கனகக் கிரியிலியல் சேலெழுதுந் தென்னவர்க்குச்
சங்குமுத்துப் பரதவர்கள் குளிக்கின்ற தனியொலியும்
மாறனியற் றென்னவர்கோன் வந்துசிங்கா தனத்திருப்பக்
கூறைபுனைந் தரனார்தாம் குதிரையிடும் பேரொலியும்
ஆறணியுஞ் சடைமுடியார் ஆகமெங்குந் தழும்பாக
மாறன்முனிந் தடிப்பிக்க மண்சுமந்த மாநதியும்[1]
வணிச்சுற்ற பரனார்தாம் வளைகூறும் பேரொலியும்
பணிச்சுத்தப் பாணனுக்குப் பலகையிடுந் திருவொலியும்
நெருங்கிளநீர் தாழைகளும் நிலவுலவுஞ் செண்பகமும்
மருங்குவளர் பூஞ்செருந்தும் மாலதியும் பாதிரியும்
பிச்சிமுல்லை குருக்கத்தி பிறங்கலரி செவ்வந்தி
பச்சைக் கொழுந்திருவே பட்டிகைமட் டார்வகுளம்
மாதளைதா தளைகொன்றை மந்தாரம் சிந்தூரம்[2]
போதவிழ்மல் லிகைகாந்தம் புன்னைவன்னி குன்றாத்தி
கருமுகைநந் தியாவட்டம் காகணமும் கூவிளமும்
மருவுமலர்க் (கரந்தைதும்பை) மலர்க்குறிஞ்சி யிருவாச்சி
கொட்டை நறுந்தரக்கி கொங்குசிறு செண்பகமும்
பட்டலரிக் கட்டவிழ்ந்து பரந்தெழுநந் தாவனமும்
சலஞ்சலமும் வலம்புரியும் சங்கினமுந் தாராவும்
துலங்குமுகில் மீனனென்னச் சோலையிற்பாய் வாளைகளும்
கடல்முத்த மொருமூன்றும் கண்படைத்த கழைமுத்தும்
தடவெற்பில் வேய்முத்தும் தான்பொருந்த மாநதியும்
தேனிதழி யும்பிறையும் சினவரவும் வெள்ளெருக்கும்
(ஆனி)பங்க னுக்குருகி மண்சுமந்த (மாமுடியும்)
பாய்புனலும் பருவெப்பும் பஞ்சவன மேனிக்கூறுந்
தீயுமியற் றமிழறியுந் தென்மதுரை மாநகரும்
இருவாசை கேடறுகி யியற்றமிழுக் கியல்பாகப்
பரிவுடன்கை மாப்பளிக்குப் பலகையிடும் முனிவெற்பும்
வேதஞ்செந் தமிழ்செய்த மெய்ப்புலவன் திருநகரும்
மாதுபங்க னுக்குருகும் வாசகப்பா வலன்பதியும்
ஆதிதிரு விளையாட்டங் கறுபதுட னொருநான்கும்

*1. இத்துடன் மாறுபடுந் திருவொளியும் என்ற சீர்கள் மிகையாயுள.*
*2. சித்தாரம் என்றுளது.*

சோதிமணிக் கோபுரமும் தோரணமும் வாரணமும்
மாளிகையு மாடரங்கும் மண்டபமும் போதிகையும்
சூளிகையுந் தெற்றிகளும் துலங்குமணிச் சாளரமும்
ஆதுலரைக் கைகாட்டி அழைப்பவர்போற் றிசையெங்கும்
தீதகல நின்றசைசெம் பொன்னெடுந்து கிற்கொடியும்
மயிலென்ன கிளியென்ன மானென்னத் தேனென்ன
குயிலென்ன மொழிபடைத்த கொங்கைமட மங்கையரும்
செஞ்சடையோ னின்றாடுந் திருவெள்ளி யம்பலமும்
பஞ்சாமுதங் [1] கானென்று பைந்தென்றற் சீறுதொறும்
மறைநான்குங் குலநான்கும் வண்டமிழ்நூல் ஒருமூன்றும்
அறநாலெட் டதுவளர்த்த அம்மைதிருப் பிறந்தகமும்
இறைநின்று சேவிப்ப இருந்தசங்கப் புலவர்களும்
மறையவர்கள் வேள்விகளும் மாடகையா ழிசையொலியும்
பாட்டொலியுங் கூத்தொலியும் பணிமொழியார் சிலம்பொலியும்
நாட்டமொரு மூன்றுடையார் நகர்வலஞ்செய் விழவொலியும்
பத்தர்களுஞ் சித்தர்களும் படர்சடைமா முனிவர்களும்
மெய்த்தவரும் ஞானிகளும் யோகிகளும் வெண்ணீறும்
தவநெறியும் எட்டெழுத்தும் சத்தியமும் அஞ்செழுத்தும்
சிவநெறியும் சிறந்தோங்குந் திருநாடு தமிழ்நாடு. (16)

**வேறு**

துளைவெயி லிசையெழு மடமாதர் மொழிநாடு
சுழல்தோகை நடமாட வழிபாடு திருநாடு
விளையாடல் இயல்மாலை இளையோர்கள் புனைநாடு
விரிவேணி யிறைநாளும் இயல்நாடர் புரிநாடு
களையாத வெழில்நீல மொடுபானல் களைநாடு
கரவீரம் அகிலாரம் மகிழ்வேரி கமழ்நாடு
வளைவீசு திரைநீடு கடலூடு படவேறி
(ம)றைதேடு மிருபாதர் வலைவீசு திருநாடு. (17)

---

1. *இச்சீர் தெளிவிலது.*

**வேறு**

பண்பயில் நீல வண்டுகள் வாச
அம்புய மீது கண்டுயில் நாடு
பைம்பொழில் மீது வெண்குயில் கூவ
அஞ்சுக மூடு கொஞ்சி(டு) நாடு
வெண்பிறை மேவு செஞ்சடை நாதர்
தண்டமி ழாய நின்றிடு நாடு
வென்றிவில் மாறன் முன்சடை யீசர்
வெம்பரி யேறி வந்திடு நாடு
வண்புய லூடு சென்றிடு வேயை
வஞ்சியர் தோள்கள் வென்றிடு நாடு
வண்டணி யோதி மங்கையர் போல
வண்டின ஓதி மம்பயில் நாடு
செண்பக ஞாழல் சந்தகில் தாழை
திண்குலை வாழை நின்(ற)சை நாடு
செஞ்சிலை மான ஐங்கணை மாதர்
கொண்டுரு வாகி வந்தருள் நாடு (18)

பெண்புனை பாகர் மண்கவர் கூடை
(பண்பொடு கொண்டு வந்தருள் நாடு)
(பண்ணவர் வாழ்த்தும் பெண்மணி வந்தி
புண்ணியம் செய்து போற்றிடும் நாடு)
தண்கமு கூடு சென்றுகள் வாளை
தங்கிய பாளை கொண்டெழு நாடு
(திண்குலை வாழை நண்ணிய வேளை
வெம்பசி யாற்றத் தாழ்ந்திடு நாடு)
(பண்ணவன் பாண பத்திரர்க் காக
விறகொடு வந்து வென்றவர் நாடு)
பின்புமவ் வீசர் அன்பின ரேவு
தந்திரி யாகி வந்தருள் நாடு.
செண்பக மாறன் சந்தகி லாரன்
செந்தமிழ் தேர்ந்த சிந்தைகொள் நாடு
சம்புவின் மேனி புண்படு மாறு
கண்டவர் நாடு! செந்தமிழ் நாடு !! (19)

**வேறு**

மஞ்சுறத் தவழ்சோலை மண்டபத் தினில்நாளும்
வண்டுகைத்த சொல்மாதர் செஞ்சொல்கற் றிடுநாடு
மந்தரப் புயமார னின்பமுற் றரசாள
மந்தமுத் தசைதேர்வில் பணித்தருள் நாடு
வெஞ்சினக் கொலையானை குன்றுப் பெறவாளி
யொன்றுவிட் டுமைபாகர் நின்றமெய்த் திருநாடு
விஞ்சவெற் பனலான குங்குமக் கனமாதர்
மைந்தரைக் குழல்மாலை கொண்டுகட் டிடுநாடு
செஞ்சிறைச் செறிநீல வண்டுகைக் கிளையோடு
தெனதெனத் தெனதான வென்றிசைத் திடுநாடு
தென்றலுற் றசைபாளை சிந்திடக் கமுகூடு
சென்றிடக் கயல்தாவு செந்தமிழ் நாடு [1] (20)

**வேறு**

சக்கர பாணி யத்தன்முன் வேத
மெய்த்தமி ழாய வித்திடு நாடு
சச்சரி வீணை கைக்கிளை தாளம்
மத்தரி ஓசை மிக்கெழு நாடு
பைக்கொலை யாரம் மெய்க்கணி யீசர்
சித்திர சாரி ஒத்திடு நாடு
பத்தச மாற னற்குர வார
மெய்க்கணி பூத மொய்த்தெழு நாடு
மைக்கயல் மாதர் பொய்க்குமெய் யான
மற்புய மாதர் விற்பயில் நாடு
வட்டம வேலை யிற்புனல் பாரில்
வற்றிட வேலை யிட்டவர் நாடு
பொய்க்குலை வாழை முற்றிய கோல
நற்றுளிர் தாள மொத்தசை நாடு
முக்கணு லாவு முத்தமும் வேலை
முத்தமும் மேவு முத்தமிழ் நாடு ! (21)

---

*1. இப்பாடலில் 3 அடிகளே உள்ளன. ஓரடி இல்லை.*

## வெண்பா

இந்து புனைந்த சடையோ னிடப்பா(க)ம்
வந்து பிறந்த வளநாடே - செந்தமிழ்நூல்
வல்லா னதியரையன் வாய்த்தவியற் பாவலற்கு
நல்லான் பரதவர்கோன் நாடு (22)

வண்டணியுங் கூந்தல் மரகதப்பங் கானதொரு
தண்டரளம் வாங்குந் தமிழ்நாடே - எண்டிசையோ
ரோதும் புகழா னுததி யரசாளும்
நாதன் பரதவர்கோன் நாடு. (23)

## *விருத்தம்*

குன்றி லசையுங் கழைமுத்துங்
குளிர்வா ருதியின் விளைமுத்தும்
வென்றி லசையும் மொருமூன்றும்
விளைவேய் முத்தும் விளைநாடு
மன்ற லசையும் குழல்மாதர்
மருங்கு லசைய மனமசையத்
தென்ற லசையுந் திருநாடு
திகழ்தண் பொருனைத் திருநாடு ! (24)

பூவில் வருவான் முடிதேடப்
புள்ளின் வருவான் அடிதேடச்
சேவில் வருவான் முடிசூட்டிச்
செங்கோ லோச்சுந் திருநாடு
மேவி யிளைஞ ருயிர்வாங்கும்
விழியில் நிழலும் விரையளிசேர்
காவி ம(ல)ரும் அறியாமல்
களையும் களையார் கடைசியர்கள்!(25)

**வேறு**

பள்ளியம் பலத்தில் கொண்ட
பாமரற்கு வேத சாரந்
தெள்ளியம் பனுவல் பாடுஞ்
செந்தமிழ் புலவர் நாடு
புள்ளியம் புலித்தோல் சாற்றிப்
பொற்றொடி திருத்தாள் மாறி
வெள்ளியம் பலத்தி லீசன்
வியனட மாடு நாடு ! (26)

**வேறு**

வீரவா ளைங்கர மாருதப் புரவி(யை)
விற்கக் க(டியநற் றுரகத்தில் வந்தநாடு
வாரமாங் கொடைக்கை மங்கை(யாள்) பரதவர்
மரபி(னி)ல் வந்துமை பிறந்த நாடு
தீரவா யிரம்வலம் புரிமொண்டு (கொண்டு)வெண்
டிரைமுகத் தெற்றி(ே)ய சிந்திய முத்துந்
தார(கை) (யுந்தி)ன கரனுஞ்(சுக் கிரனுஞ்)சந்
திரனு(மே) பொருவுதண் டமிழ்த்திரு நாடு. (27)

**வேறு**

மதுரைவண் டமிழ்மாறன் தன்னெதிர் வாதவூரர்
குதிரைகொண் டிடம்பொய்த்துநற் கோவணங் கொண்டநாடு
கதிர்விடுந் திருத்தாள்மாறிக் கழலுடன் சிலம்பும்பாம்பு
மதிரநின் றரனார்வெள்ளி யம்பலத் தாடுநாடு. (28)

***வகுப்பு***

தாதகி மாதகி தாதளை மாதளை
சண்பக வஞ்சித ழைத்திடுமூர்
போதவிழ் பாடல மேடவிழ் கூவிளை
புன்னைசெ ருந்திநி றைந்திடுமூர்

மாதர்கை வண்டு மதன்கர வண்டு
மலர்ச்சிறை வண்டும யங்கிடுமூர்
கேதகை வன்னி கரந்தை நரந்தை
கிளர்ந்தெழு பூகம்வி ளங்கிடுமூர்
சீதம திக்குடை வேளைவ ரிக்குயில்
திண்பொழி லேறிய ழைத்திடுமூர்
ஆதிய மெங்குமி ருந்துதி ருந்திழை
யொண்ணுத லார்நடை கற்றிடுமூர்
ஆதிவெண் ணீறிடு மன்பர்கண் ணீர்விட
அரிவளை குவளைகண் ணீர்விடுமூர்
நாதனி டத்திலி ருந்துல கம்பெறு
நன்னுதல் மங்கைபி றந்திடுமூர் (29)

**உரை**

இவ்வண்ண மொத்திருந்துள்ள திருபாண்டிய மண்டலத்தொரு திலகமாய் விளங்காநின்ற மங்கைப்பதி என்னவொத்திருந்ததுவோ வெனில்:

**உரையென்றது**

சந்தனம், கற்பகம், பொற்பாரிசாதம், சரளம், வகுளம், குந்தம், திலம், ஆலம், மந்தாரம், சிந்தூரம், கன்னிகாரம், வரையாரம், வஞ்சுளம், பூஞ்செருத்தி, மீசுபூகம், குட்சம், ஆரம், கரவீரம், குரவம், தாழை, குலவுலவு, பாடலம், செண்பகம், குறிஞ்சி, மடலவிழும் மலற்(ை)கதை, ஆம்பல், பாநாகம், மாதுளம், பூஞ்செந்தில், மாவீரம், வருக்கை யென்று சொல்லுகின்ற விருட்சங்களாற் சூழப்பட்டுச் சந்திரன் ஊர்தியான விமானமும், ஆதித்தன் ஊர்தியான இரதமும், மகாமேரு பருவதமென்று வலஞ் செய்யத்தக்க கோபுரங்களின் பிரகாசத்தால் மிக விளங்கி உருகும் அன்பர்கள் கண்(ணீரா)றும், இலகு புனற்கண்ணாறும் இரவுபகலாய் எழுகதிர் விளையும் இயல் மங்கை.

## வகுப்பு

ஒளிவளர் மென்குழல் வனிதையர் மைந்தர்க
ளுயிர்பட வஞ்சன விழிவிடுமூர்.
ஒலியெழு தெண்டிரை மருவவ லம்புரி
யுயர்மடு வின்கரை யுலவிடுமூர்
தெளிதரு தண்புனல் தனிலுகள் செங்கயல்
திரள்கமு கின்குலை சிதறிடுமூர்
தெனதென தெனதென வெனவன வண்டுகள்
தின.சதொறு நின்றுட ரிசைதருமூர்
களிமயில் பொங்கிட நடமிடு மென்பெடை
கசிவொடு தன்சிறை விசிறிடுமூர்
கழையது சிந்திய மணிகளை மந்திக
ளிரையென வன்பொடு கருதிடுமூர்
இளமதி தங்கிய (சடை)முடி யந்தண
ரெழில்வலை கொண்டலை கடல்புகுமூர்
இமையவ ரைந்தரு மலர்கொடு செஞ்சடை
இறை(ய)வர் பதந்தொழு தருள்பெறுமூர்
வளைபுரு வஞ்சிலை விழிகளை யென்றிகல்
மதன்மட மங்கைய ரடிதொழுமூர்
வருணகு லந்திகழ் பரதவர் மங்கையை
வதுவைசெய் தன்றரன் மருவிடுமூர் ! (30)

## *விருத்தம்*

இருநிதி யாற்செந் தமிழா லியற்றிடுந்
தொழிற்படைக் கலத்தாற் [1]
றிருமட மாதும் பாரதியும் மதகிரித்
தெரிவையும் மருவிடம் போலும்
அருள்புனை வாமப் பச்சைபோ யரனுக்
கழகழிந் தெ(தா)ருநிற மாக
மருவளர் தாமப் பரதவர் மரபில்
வந்துமை பிறந்தருள் மங்கை. (31)

---

*1. சீர் குறைகின்றது,*

**வேறு**

பூசல் விழியு மிருகுழையும்
புரியுங் குழலுஞ் செவ்வாயும்
(பேசும் மொ)ழியுந் திருநகையும்
பெரிய தோளும் சி(று)மருங்கும்
ஆசை யுதவுங் கடிதடமும்
அடியுங் கரமும் அணிநுதலும்
வா(ச) முலையுங் காட்டுதலால்
மங்கை போலும் மங்கைநகர் ! (32)

**வேறு**

சதிரம்வில் லாழி யாக
விடுதழற் புகையுந் தாமக்
கதிர்முலை மடவார் கூந்தற்
காரகிற் புனையு மன்பர்
மதிபுனை சடையார் தம்மை
வந்திக்கும் புகையும் வாடைப்
புதியபொற் கொடியு மஞ்சு
மின்னும்போற் பொலியும் மங்கை ! (33)

**வேறு**

தா(வு) மருவி வரையாவர்
தழையு (மாவர்) பொழிலாவர்
மேவ வரிய (வி)சும்(பாவர்)
விளங்குந் தனிப்பா தலமாவர்
நாவி கமழும் வனமா(வர்)
(ந)ன்னீர் தரங்கத் தடமாவர்
(வாவு)ந் (தி)ரைவா ருதியாவர்
வன்பால் மங்கை மங்கையர்கள். (34)

தாதுற் றொளிரு மிருங்கமலந்
தன்னிற் கன்னற் றடங்கண்ணா
லோதத் தகும்வெண் டரளமணியுங்
குற்ற தொத்த முன்னிடுங்

காதற் பெருக விளையோர்கள்
 களிவண் டுறையு நறுங்கூந்தல்
மாதற் குதவுங் கையுறைபோல்
 வயங்குந் தெய்வ மங்கைநகர். (35)

ஆலைப் பழனத் தெழும்படப்பை
 அகற்றி முனியென் றதிர்ந்திளமாஞ்
சோலை செழும்பல் லவக்கொம்பில்
 கிடந்த தோற்றம் சுரர்வாழ
வேலைக் கடல்நஞ் சுண்டவர்தாம்
 மேனி யனலாய் விளங்(குகின்ற)
(மா)லைப் பொழுதிற் றயங்குபிறை
 யெனவே விளங்கும் மங்கைநகர். (36)

## உரை

வாணனென்று [1] பேருடைய அவுணன், தன் ஆயிரம் கைகளாலும் ஆயிரம் சிவலிங்கம் நாடோறும் பிரிதிட்டித்துப் போதுகின்ற காலத்து, ஒருநாள், ஆயிரம் இடத்திலே ஆயிரம் சிவலிங்கம் அருச்சிக்கின்ற அவ்வளவில், மங்கைப்பதியில் ஒரு சிவலிங்கம் அருச்சிக்கத் தான விசேடத்தையும், கால விசேடத்தையும், முகூர்த்த விசேடத்தையும் பற்ற, ஆயிரம் சிவலிங்கமும் அவ்வவ்விடத்தில் இராமல் சேர்ந்து திரண்டு ஒரு சுரூபமாக ஆயிரம் முகமும் தோன்றும்வகை ஏகலிங்கமாகி எழுந்தளியிருக்கின்ற திருநகர்.

## அதுவன்றியும்

இமையவல்லி தம்பிரானை வணங்கித் "தம்பிரானே! வேத புராண சாத்திரங்களெல்லாம் தேவரீருக்கு ஏகபாதமென்றும், திரிமூர்த்திகளுக்குத் தேவரீரென்றும் சொல்லாநின்றனவாதலால் ஏகபாத திரிமூர்த்தியான சுரூபமானபடிக் காணவேணு" மென்று விண்ணப்பம் செய்யத் தம்பிரான் ஏகபாத திரிமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கின்ற திருநகர்.

---

1. பிரகலாதனின் மகன் விரேசனன். விரேசனனின் மகன் பலி. பலியின் மகன் பாணன். எனவே வாணன் பிரகலாதனின் கொள்ளுப்பேரன். மேலும் வாணன் சிவபெருமானுடைய கோட்டைக் காவலன்.

## அன்றியும்

காசிவப்பிரசாபதி பூசாகாலத்தில் வணங்கித் தம்பிரானே! திரிநேத்திரமும், திருமுகமண்டலமும் அடியேன் காணவேண்டும் என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரான் மூலலிங்கமாகி எழுந்தருளியிருக்கின்ற திருநகர்.

## அன்றியும்

அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புரூருவன், சற்கரன்,[1] கார்த்திகேவீரன்[2] என்று சொல்லுகின்ற சக்கரவர்த்திகள் அறுவரினும், புரூருவன் என்கின்ற சக்கரவர்த்தி நவரெத்தினங் களால் ஒரு மாலை கோர்த்து ஒருமுகமாக வகுத்துக் கொண்டு வந்து திருமுடியிலே அந்தமுகமாயிருக்கும்படிச் சாற்றி, அவை நேர் நில்லாமல் ஒதுங்கக்கண்டு, சக்கரவர்த்தி வணங்கித் தம்பிரானே! இம்மாலைகள் திருமேனியைச் சூழ்ந்து நேர் நிற்கும்படி திருமேனி தாரைப்பட்டிருக்கவேண்டும் என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரான் தாரைலிங்கமாகி எழுந்தருளி யிருக்கின்ற திருநகர்.

ஒன்றா யிரண்டாய் ஒருபாத மும்மூர்த்தி களாயொரு முகமாய்
நின்றான் தாரை லிங்கமாய் நாத னிருக்குந் தென்மங்கை. (37)

## *விருத்தம்*

ஆதி யிலிங்க மொன்றுடனே
தோன்று மிலிங்க மாயிரமாம்
பாத வனச மலரொன்றாய்ப்
பணைத்த வுருவ மூன்றாகிச்
சோதி வதன லிங்கமதாய்த்
தொகுத்த தாரை லிங்கமதாய்
மாதோ டிறைவ னினிதிருந்து
வாழுந் தெய்வ மங்கைநகர். (38)

---

***1, 2. சகரன், கார்த்திகேயன் போலும்.***

கற்றார் கலியு மனைத்துயிருத்
தொல்லைப் புவியு மால்வரையும்
பெற்றாள் தன்னை மகளாகப்
பெற்ற பரதவன் பிறந்தவூர்
பற்றார் புரங்கள் நீறாகப்
(பவளத்) திருவாய் மலர்ந்தருளிச்
செற்றார் வந்து வலைவீசித்
திருவை மணந்த தென்மங்கை. (39)

## *வெண்பா*

அங்கமிலா மாமதவே ளைங்கணையும் வார்சிலையும்
மங்கைநல்லார் கொண்டுலவும் மங்கையே - கங்கைநதி
சிந்துதிரை சேர்சடையார் தெய்வ வலைவீசி
வந்ததிரை சேர்மடந்தை வாழ்வு. (40)

## **உரை**

இவ்வண்ணமே விளங்காநின்ற மங்கைமா நகருக்கு அதிபதியாகிய காசிவப் பிரசாபதி புத்திரன், திரியம்பகன் என்னும் நாம உபதேசமும், அதியரையன் என்கிற பட்டமும் உடையனாகி, பராசர பிரமரிஷி நிமித்தமாகி வேதவியாசனைத் தனக்குப் புத்திரனாகவும் மச்சகந்தி அவதரித்த பரதவர் வமிசத்துக்கொரு திலகமாய் வந்தவதரிக்கத்தக்க புண்ணியவானாகி, பரதவர் வமிசம் விளங்கத் **திருநாகைப்பட்டணத்து** வந்து அவதரித்துக் காரோணவதியரையனென்று பட்டமும், அதிபத்தனென்று[1] நாமதேயமும் உடையாராகித் திருநீறும், திருவேடமும்[2], திருநீறும்[3] கந்தையும் அல்லது வேறொன்றும் பூசுதல், புனைதல், சாற்றுதல் செய்யாராகி நாடொறும், மீன் படுக்கும் அளவில், பட்டதில் பெரிய மீனொன்று சிவனுக்கென்று மீண்டும் சமுத்திரத்திலே விட்டுப் பூசித்து, நீக்கியுள்ள மீன்களை விற்றுவந்து, அந்த முதல்கொண்டு சிவபூசை, குருபூசை,

*1. 63 நாயன்மார்களில் ஒருவர் (பெரியபுராணம்), 2. உருத்திராக்கம் என்னும் திருவேடம் போலும், 3. இரட்டித்தே இருக்கின்றது.*

மயேசுவரபூசை, பிராமண போசனம், அதிதி போசனம் நடத்தி, இவ்வண்ணமே சிவபூசை, குருபூசை, மயேசுவரபூசை நடத்துகின்ற தன்மையைத் தம்பிரான் திருவுள்ளத் தடைத்தருளி, அவரது பத்தியை சோதிப்பதற்காக, ஒருநாள் வீசிய அவ்வலையில் ஒரு மீனும் படாதபடி விலக்கியருள, உதையகாலம் தொடங்கி அத்தமன காலமளவும் தம்முடைய வலையில் ஒரு மீனும் படாதபடியாலே மிகவும் வருந்தி சிவபூசையும் குருபூசையும் மயேச்சுர பூசையும் முட்டுப்பட்டுவிட்டது. இனி இடுகின்ற வலையில் மீன் படாவிட்டால் தோணியுடனே முட்டி உயிரைவிடக்கடவோம்!, என்று உறுதிகொண்டு வலையிடும் அளவில், மற்றொரு மீனும் படாமல் கண்கள் மாணிக்கமும் செதில்கள் எல்லாம் வயிரமுமாக அனேகம் பொன்னால் செய்யப்பட்டதும், மரகத ஒளியுடையது மானதொரு மீன் வந்து படக்கண்டு, மிகவும் மகிழ்ந்து "பொன்னாலும் இரத்தினங்களாலும் வாலும், பீலியும் இருப்பதொரு மீன்வந்து பூசிக்கப் பெற்றோமே!" யென்று அம்மீனைச் சமுத்திரத்தில் விடக்கண்டு, தம்பிரான் தம்பிராட்டி யுடனே இடபத்தில் எழுந்தருளித் தோன்றிச் சிவபதங் கொடுத்தருளச் சிவலோகம் பெற்றருளின அதிபத்த[1] நாயனாரைப் போலச் சிவபக்தனாகி பிருதிவியில் ஆன்மாக்கள் செய்த புண்ணியம் ஒரு வடிவாகிப் பரதவர் வமிசத்தில் வந்தவரித்தாற்போல இவ்வரசுகள் நடத்துகின்ற அதியரையன், மனைவி வருணவல்லியைப் பார்த்து "வாராய் வருணவல்லி! பூலோகத்தில் பிறந்த அதனால் பிரயோசனம் ஆவது புத்திரரைப் பெற்று அவர் வரல் பார்த்துண்டாகிய அழகினைக் காண்பதுகாண் கண்ணாவது; குழலினும் யாழினும் இனிதாயிருக்கின்ற குதலை மொழியைக் கேட்பதுகாண் செவியாவது; கார்த்தல், கைத்தல், தித்தித்தல், துவர்த்தல், புளித்தல், உவர்த்தல் என்று சொல்லுகின்ற அறுசுவை ஊணிலும் கலத்தினின்றும் சோற்றை நிலத்திலிட்டும், நிலத்தினின்றும் சோற்றைக் கலத்திலிட்டும், வாயினின்றும் சோற்றைக் கலத்தில் உமிழ்ந்தும், மீண்டும் வாயில் கையால் அளைந்துண்ண உடனுண்பதுகாண் உணவாவது; குழவி மண்ணுணு முடம்பை மணங்கொள்வதுகாண் மூக்காவது; பாலும்

---

*1. திருத்தொண்டர் புராணத்துக் காண்க,*

எண்ணெயும் மணக்கின்ற உடம்பைப் பரிசிப்பதுகாண் உடம்பாவது. இவ்வண்ணம் பஞ்ச இந்திரியங்களால் பலன் கொண்டு பின்பு பிராணவியோகம் கொண்ட காலத்துப் புத்திரனாலே உதக்கிரியை[1] பெறலாவதுகாண் வீடுபெறலாவது. ஆதலால் நமக்கொரு புத்திர உற்பத்தி வேண்டும். நான் தவம் செய்யப்போகா நின்றேன்" என்று சம்மதித்து எழுந்திருந்து போய் ஏகபாதமூர்த்தி எழுந்தருளியிருக்கின்ற தம்பிரான் திருக்கோயில் புகுந்து வணங்கி, யாது விண்ணப்பம் செய்தானோவெனில்:

**அகவல்**

தோன்றா ஒன்றாய்த் தொழத்தகு மிரண்டாய்
மூன்றாய்ப் பணைத்த முதலே முடிவே !
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
மாலினுக் கரிதாய் வளர்ந்தமெய்க் கனலே !
போதகம் போலப் புனைந்தசொற் பிதற்றுங்
காதலுக் கெட்டாக் கருணா லயனே !
சித்தக் கமலக் கலக்கந் தெளிவார்
பத்தித் தளையிற் படுஞ்சுட ரொளியே !
இப்படி யிருக்கும் என்னொரு வருக்கும்
செப்புதற் கரிய சிந்தா மணியே !
பெண்ணே ஆணே பிறப்பினுக் கெல்லாம்
கண்ணே மணியே கருப்பிணி மருந்தே !
பாரும் விசும்பும் பறந்திடந் தவர்க்குத்
தூருந் தலையுந் தோன்றாச் சுடரே !
கரவண வடிவேற் கந்தனைத் தந்த
சரவணை யுதரத் தையல்பங் கினனே !
வளைந்தெழு கோட்டு வாரணம் தந்த
இளம்பிடி பாகத் திருக்குமே னியனே !
சொல்லும் பொருளு மானமெய்த் துணையே !
சொல்லும் பொருளுங் கடந்தநற் சுகமே !
மறவார் நினைவார் மனத்துணை மணியே !
பிறவா திறவா தெழும்பெரும் பொருளே !

---

1. *நீர்க்கடன்.*

நன்றே தீதே நானா ரெனத்தான்
ஒன்றா யொன்று மில்லா வொளியே !
அருள்புனை விசைய னடித்தவே ணியனே!
திரிபுர மெரியச் சிரித்தசே வகனே !
குருவே யுரையே குறியே நெறியே !
உருவே யருவே வொளியே வெளியே !
பதியே பசுவே பாசமே பரனே !
மதியே விதியே யென்பார்க் கரனே !
சுதனாய் வந்த சிவனே யடியேற்கு
மதலை தனைத்தந் தருளென் றானே ! (41)

## விருத்தம்

கூரும் வயிர முதுமரத்தைக்
கொடிய நெடிய யீர்வாளால்
ஈரும் மவர்போல் மகவாசை
யீரா நின்ற தென்னெஞ்சம்
தீரும் வகையொன் றருள்புரிவாய்
சினவா ளரவுஞ் சிறுபிறையும்
நீரும் குரவும் புனைமவுலி
நிமலா நீயே துணையென்றான் ! (42)

**உரை**

இவ்வண்ணமே தம்பிரானிடம் விண்ணப்பம் செய்து விடைகொண்டு திருக்குளத்திலிரங்கித் தீர்த்தமாடிச் சுத்தனாகிச் சென்று சமுத்திரக்கரையில் வந்து, மங்கைநகர் சிறந்தோங்க வந்து, பரதவர் வேந்தன் சங்கரனை அடிவணங்கித் தவவேடம் புனைகின்றான்.

## விருத்தம்

மலைமகள்தன் மகளாக வாருதியில் மிதந்துவரக்
கொலைமதவெங் கரியுரித்தார் குலைகடலில் வலைவீசக்
கலைபயிலும் பரதவர்தங் குலம்விளங்கக் காசினியில்
தலைமைபெறப் பரதவர்கோன் தவவேடம் புனைகின்றானே! (43)

### அகவல்

அற்கலை யுடுத்துத்தன் வனப்போங்கு நீறணிந்து
அற்புதமாந் திருமுண்ட[1] மஞ்செழுத்தி னாற்புனைந்து
தருக்கொண்ட சரமாலை சிரமாலை[2] தான்புனைந்து
திருக்கண்ட மாமாலை சிறந்தொளிரும் படிசாத்திப்
பருமணல்வே திகையிட்டுப் பத்துமா சனத்திருந்து
தெரிவரிய பொருள்நினைந்து சித்திரம்போ லினிதிருந்தான்
நெஞ்சுகுவியக் கரங்குவிய நினைவுகுவிய நின்றபுல
னைந்துங்குவிய விழிகுவிய வறிவுகுவிய வினிதிருந்தான் !(44)

### உரை

இவ்வண்ணமே மூலாதாரத்துண்டாகிய அக்கினி மண்டலத்தைச் சொலிப்பித்துக்கொண்டு சென்று வாதிற்ற[3] மண்டலத்தூடே ஒட்டிச் சந்திரமண்டலத்துண்டாகிய அமுதத்தை அவ்வக்கினியாலே உருக்கிச் சரீரத்தைச் சுத்திபண்ணித் தம்பிரானுடைய திருவடித்தாமரையை நினைந்து எவ்வண்ணம் போற்றினானோவெனில் :

### *விருத்தம்*

கார்வாய் முழக்கக் கடலுவட்டக்
காற்றும் மழையுங் கலந்தார்ப்ப
ஊர்வா னில்லா மரக்கலம்போல்
உலைவா நின்றே னென்செய்கேன்
சார்வா யுருகும் மனத்தடியார்
தம்மைப் பேணார் தமக்கென்றும்
சோர்வாய் நின்ற சுடரொளியே !
சோதீ வந்து தோன்றாயே ! ! (45)
கடுவே தினைக்கொண் டிறகொடிந்து
கருணை யறியா இளையவர்முன்
நடுவே விழுந்த பறவையைப்போல்
நடுங்கா நின்றேன் நாயகமே !
நெடுமால் பரந்து முகில்தவழ்ந்தும்
நீலக் குன்றம் பட்டுருவத்
தொடுவே லவனைப் பயந்தெடுத்த
சேதீ வந்து தோன்றாயே (46)

---

*1. - ? 2. தாவடங்கள் என்ற சீர் மிகுதியாயுள்ளது. 3. - ?*

வீசிக் கனன்றுவாய் காய்ந்து
வேங்கைத் திர(ளு)க் கு(ட்)பட்ட
பாசத் தீயில் பசுப்போலப்
பதையா நின்றேன் பரஞ்சுடரே !
பூசற் பகுவாய் வாளெயிற்றுப்
புகைசேர் நயனப் பாய்புலித்தோல்
தூசுக் கிசைந்த திருமருங்குற்
சோதீ வந்து தோன்றாயே ! (47)

இரைபெ றாமல் வருந்துகின்ற
இளவா ளெயிற்று வெம்பகுவாய்
அரவின் வாயிற் றேரையைப்போல்
அரற்றா நின்றேன் என்செய்கேன்
விரவும் நாவ லூரற்கு
வேழ மளித்துத் தென்னவர்க்குத்
துரக மளித்தன் றாண்டுகொண்ட
சோதீ வந்து தோன்றாயே ! (48)

**உரை**

இவ்வண்ணமே போற்றி செய்யப் பரிபூரணனாகி நிற்கின்ற தம்பிரானை அறிகின்ற ஆனந்த அறிவைக்கொண்டு சென்று, கரிய நிறத்தையும் ஐந்து இதழையும், உடைய இதய கமலத்திறுத்தி அக்கமலத்தினின்றும் இறங்கி வெள்ளை நிறத்தையும் பத்து இதழையும் உடைய நாபிக்கமலத்திறுத்தி, அந்நாபிக் கமலத் திதழிடையே தன் சரீரங்களை வைத்து, வாயுவைப் பன்னிரண்டு அங்குலம் விட்டு, நான்கு அங்குலம் போக எட்டு அங்குலம் மீளும்படியே நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் விடுகின்ற மகா நாகத்தைப் பார்த்து, அந்நாகத்து நவின்ற வாலுக்கு இருமருங்கும் மூன்று தீக்க(ட்)டியாகி விளங்குகின்ற கார்த்திகைதனைப் பார்த்து பின்பு பவள நிறத்தை உடைய நாற்சதுரப் பலகையாகிய நாற்கொடியிலும் நின்று எரிகின்ற சுடரையும், பாம்பின் வாலில் கொளுத்தி நடுவே எரிகின்ற சுடரையும் பார்த்து, பின்பு நாற்சதுரப் பலகையினின்றும் இறங்கிச் சிவந்த நிறத்தையும் ஆயிரம் இதழையும் உடைய மூல கமலத்தைப் பார்த்து, அக்கமலப் பொகுட்டிற் பதினாறு

கவறாயிருக்கின்ற வீணாதண்டாகி(ய) மகாமேருவைப் பார்த்து, பின்பு அந்த இருமருங்கும் நிற்கின்ற இடை பிங்களைப் பார்த்து, சரீரத்துக்கு உள்ளீடாகி நின்ற பிராணனை அளப்பதாக இடை பிங்கலைகளுடனே ஏறியும் இறங்கியும், இரவு பகல் செய்கின்ற சந்திராதித்தர்களை மேருவின் மூலத்து உண்டாகிய அங்க ஞானத்தூடே சுழிமுனை நாடிவழியாக பிரமரந்திரத்திலே கொண்டுசென்று சந்திரனாகிய சக்தியையும், ஆதித்தனாகிய சிவத்தையும் புணர்வித்துப் பின்பு அந்தப் புணர்ச்சியிலே எழுகின்ற நாதம் கேட்டிருந்து, நாதத்தை விட்டுச்சென்று மேலை வாசற்படிக் கதவைத் திறந்து புறப்பட்டு நோக்கி, இரவு பகல் அற்ற இடம் ஆதலாலே இலையமற நின்று எரிகின்ற சுடரைப் பார்த்துப் பின்பு அந்தச் சுடரினின்றும் போய்ச் சோதியைப் பார்த்து, அச்சோதியினின்றும் போய்த் தானே தானாகிய வெள்ளை வெளியாய் நிற்கின்ற சிவத்திலே புகுந்து கருத்திறந்து, நாண் அழிந்து, காண்பானும் காட்சியும் அற்று இருக்கின்ற சிவவெளியில் இனிதிருந்தான் பரதவர்கோன்.

## *விருத்தம்*

கருங்கமலம் பொற்கமலம் க ரந்தாவு வெண்கமலம்
மருங்ககன்ற சதிரவ னப்பலகை செங்கமலம்
மருங்கினிடை பிங்கலைவெண் மதியரவி சுழிமுனைமே
லிருஞ்சுடர்செஞ் சோதிகடந் தினிதிருந்தான் பரதவர்கோன். (49)

பத்தியால்நெஞ் சொன்றுபடப் பஞ்சேந்திரிய மொன்றுபட
மெத்துஞான விழிமலர் விழிகுவியப் பார்த்திருந்தான்
சுத்தமான செந்தமிழ்மா(ற)ன் சோழன்சேரன் சுரிசங்கு
முத்துவேண்டி வந்துநிற்கும் முன்றிலுடைய குலவேந்தன். (50)

## **உரை**

இப்பால் சருவவியாபியாயிருக்கின்ற தம்பிரான் எழுந்தருளியிருக்கின்ற கைலாயமலை எவ்வண்ணம் இருந்ததோவெனில்:

## *விருத்தம்*

மண்ணானார் புனலானா ரழலாய்மா ருதமானார்
விண்ணானார் வெளியானா ருயிரானார் மெய்யானார்
பெண்ணானா ராணானார் பிறிதானா ரனைத்துயிர்க்குங்
கண்ணானா ரினிதிருந்த கயிலாய மியம்பலுற்றேன். (51)

ஒன்றா யிரண்டாய் மூவுருவா
யுலகிற் றோற்ற மொருநான்கா
யன்றாய்ப் பூத மவையைந்தா
யறிவா றாகி யெழுபிறப்பாய்க்
குன்றாய்க் குணங்க ளோரெட்டாய்க்
கோளொன் பதுவாய்த் திசைபத்தாய்
நின்றா னிருந்த கைலைமலையி
லிருக்கும் படிநா னியம்பலுற்றேன். (52)

என்பது அளவிறந்துநின்ற சிவமென்னுஞ் சத்திசிவமாகிய சுரூபம் இரண்டும் ஆக்கல், காத்தல், அழித்தல்களாகிநின்று போர்வையில்[1], நிலத்தில், முட்டையில், அப்பில்[2] என்று சொல்லப்பட்ட தோற்றம் நான்கும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பூதம் ஐந்தும், சத்தப் பரிச ரூப ரச கந்தம் என்னும் இநதிரியம் ஐந்தும், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்னும் ஆதாரங்கள் ஆறும், தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, விலங்கு, மக்கள், தேவர் என்னும் பிறப்பு ஏழும், பிறப்பின்மை, இறப்பின்மை, பற்றின்மை, பேரின்மை, உகமையின்மை, வினையின்மை, குறைவின்மை, கோத்திரவின்மை என்னும் குணங்கள் எட்டும், ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் கோள்கள் ஒன்பதும், கொடி[3], புகை, சிங்கம், நாய், இடபம், கழுதை[4], யானை, காகம், பாதாளம், ஆகாசம் என்னும் திசைகள் பத்தும்

---

*1. பார்வையில் எனல் வேண்டும், 2. அணைப்பில் எனல் வேண்டும், 3. இதுமுதல் எட்டும் அட்டத்திக்குப் பாலகர்களின் குறிகள், 4. இதற்குப் பதிலாக காற்று, தூபம் என்ற இரண்டு சொற்கள் உள.*

ஆகி, அல்லவும் ஆகிநின்ற தம்பிரான் எழுந்தருளியிருக்கின்ற திருமலையின் பெருமை சொல்லுகின்றேன் என்றவாறு.

கைலாயமாவது: வெள்ளிமலையாகிய இமயம், மந்தாரம், விந்தம், சேந்தம்[1], நிடதம், ஏமகூடம், நீலகிரி என்கிற பருப்பதங்கள் ஏழுக்கும் முன்வைத்து எண்ணத்தக்க பெருமையை உடைத்தாய், அமரர், சித்தர், சாரணர், தயித்தியர், கருடர், கின்னரர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், இராக்கதர், பூதம், பசாசு, தாரகை[2], முனிவர், உரகர், சரவாசிகள், போக பூமியர் என்னும் பதினெண் கணமும் வணங்கத் தக்கதொரு திவ்விய திவ்விய[3] பருப்பதமாகிய, பிருதிவி தேவியுடைய தீர்க்கத்தில் சலமாகாமல் அசலமான தென்னவும், அன்றியும் பிருதிவி தேவிக்கு அபிடேகமென்னவும் விளங்காநின்ற கயிலாயம்.

அத்திருமலையிலே வரையாயுதம், வைசேடிகம், உலோகாயதம், மீமாம்சம், மராசீதம், புத்தம், என்கிற சமயம் ஓர் ஆறும் ஆகித் தத்துவாதீதமானார் உமையுடன் இனிதிருந்த ஓலக்கம் இயம்பலுற்றேன்.

## அகவல்

இந்திரனும் வானவரும் முனிவரும்வந் தேவல்செய்யச்
சந்திரனும் சூரியனும் தனிக்கிரண விளக்கெடுப்ப
அரம்பையும் திலோத்தமையும் மேனகையும் என்கின்ற
அரம்பையர்கள் இருமருங்கும் ஆலவட்டம் பணிமாற
வரையரச மங்கையர்கள் வந்துமலர்த் தாள்போற்ற
திரையார மங்கையர்கள் செழுங்கவரி நிரையிரட்டச்
செம்பொன்மணித் தோடிலங்கும் திருச்செவியி லினிதிருந்து
தும்புருநா ரதர்வந்து தோத்திரங்கள் பாடல்செய்யப்
பூமாதும் தமிழ்மாதும் போர்மாதும் புண்டரீக
மாமாதும் எம்மருங்கும் மங்கலம்வைத் தடிவணங்கிக்
கின்னரர் கிம்புருடர் காந்தையர் விசூசையர்

---

*1. மகேந்திரம் போலும், 2. அந்தரர் போலும், 3. இரண்டு முறை.*

வணங்கியெம் மருங்கும் போற்றிசெய்து யாழ்வாசிக்க
வருணராசன் முன்வந்து வாசநீர்தான் புரோட்சிக்க [1]
கருணைவிழிக்கும் பொன்வந்து காணிக்கை பலகாட்ட
மந்தாகினி விசிறிவீச
பூதமுடனே கூளிகணம் போற்றிசெயசெய போற்றியென
ஆதிமறை யொருநான்கும் அரகரவென் றடிவருடக்
கணனாதர் சிலம்பலம்பக் கழல்வணங்கிச் சேவிப்பப்
பன்னாக ராசர்நின்று படவரவப் பணிகாட்டச்
சீறிநந்தி திருப்பிரம்பால் தேவர்கணம் அடியுண்ண
ஆனந்த விழியுமையாள் ஆகம்ம கிழ்ந்திருக்கச்
சூரியனார் வலக்கண்ணும் சோமனா ரிடக்கண்ணும்
ஆரழலார் நுதற்கண்ணும் அனைத்துயிர்க்குங் கண்காட்டச்
சீறுவெறிமா னிடத்துநிற்பச் சினமழுவா ளனைத்துநிற்பப்
பொறிவிறல் வாளுமுவை போதுமருங்கி [2] லழகெரிப்பத்
தோடுமகரக் [3] குழையுஞ் சுடர்முடிவில் நின்றிலங்க
ஆடுமலர்ச் சேவடியில் அணிசிலம்பு சிறந்தொளிர
திருக்கண்ட மிருளெரிப்பச் சென்னிமதி நிலவெரிப்ப
மருக்கொண்ட பணியரவின் மணிச்சுடிகை வெயிலெரிப்ப
(வ)டுகனுமாய்ச் சாத்தனுமாய் வண்டணியும் மாலயனும்
கடகரிமா முகமுடைய கற்பகமுஞ் சேவிக்கக்
குருவுமாய் மகனுமாய்க் குமராரிரு தாள்போற்ற
உருவுமா யருவுமானா ரோலக்க மினிதிருந்தார். (53)

## வகுப்பு

உரத்தெழு நீல மலையை யுரித்தரு ளாதி முதல்வர்
உரத்தெதிர் கால னுருளவு தைத்திடு பாத ஒருவர்
வெருக்கொளு மானும் மழுவு மிலங்கிடு வேத முனிவர்
விடைக்கொடி மேவி யதனை விருப்புட னேறு விமலர்
வரிப்புலி கீறி யதனையு டுத்தருள் மாய ஒருவர்
மலைக்கொடி தாம முலைகள்வ டுச்செயு மார்ப வழகர்
அரிக்கொரு பாக மருளிய னைத்துயி ரான துணைவர்

---

*1. பொடச்சி என்றுளது, 2. யுரிபுது என்றுளது, 3. தொருங்கால் குழையும் என்றுளது.*

மலர்ப்பதி நாதன் மகுடம ருத்தருள் கோல வுகிரர்
எரித்தெழு காள மதனையி ருத்திய நீல மிடறர்
நிரைத்திரை யாளோ டரவுநி ரைத்திடு வேணி முடியர்
கருத்துடை நேய வடியர வர்க்குற வான கழலர்
கணத்தொடு பேய்கள் சுழலந டித்தருள் பூணு நகையர்
பொருப்பெறு கரனை யமரரு யப்பெறு பூவை தலைவர்
நரிபரி கூடல் நகரில்ந டத்திய நாம வணிகர்
நரைத்தவர் நால்வர் தெளியந விற்றிய ஞான வுடையர்
செருச்செயு மார னுடலமெ ரித்தருள் தீய நுதலர்
நிருத்தமோ டாளுநகரத்தி ருக்கயி லாய மலையே ! (54)

## வகுப்பு (வேறு)

இருவ ரடிமுடி பரவ வரியதொ
(ரழலின்) வடிவுகொ டுயரு முருவினர்
எழுத வரியசொல் மறைக ளடிதொழ
விழைய நடமது பயிலு மழகினர்
இரவி தனதெயி றுதிர வொருவிற
லிகல்செய் கரதல யிரண பயிரவர்
(மரவ ரிகுல) சகல மதியுட
லதுபட விசையனோ டிடறு மடியினர்
சுருதி பயில மதுமல ரியன்முடி
துணிய வுகிர்கொடு வினைசெய் படையினர்
துளப முடியரி நயன மலர்கொடு
தொழுது விழவொரு திகிரி யருள்பவர்
சுரரு மசுரரும் வெருவ மனமது
சுழல வெருவிட நுகரு மருளினர்
சுறவ மெரிதிரை யுததி தனிலொரு
படவின் மிசைவலை விசிறு தொழிலினர்
கூறும்[1] மறைபயில் மதலை தனதுயிர்
கடியும் மறலியை யுதையு மடியினர்
தாம மதுகர படல நிரைநிரை
தருவ விசைபயி லிதழி முடியினர்

---

*1. துரும என்றுளது*

தழலி னிரைகர வனச மலரது
தறிய வெதிர்படு சமர மழுவினர்
தருண மதியமு மரவு மரிய
தலையும் நிலைபெற விரவு சடையினர்
தரும மெனவுடல் முனிவர் வரவிடு
கரியி னுரியது கமழு மடியினர்
கலக மிடவரு மதன னுடலது
கனல விழியன லுதவு [1] நுதலினர்
கனக வடவரை வலைய மருவலர்
நகரி கனலெழ வுதவு கருணையர்
கருணை பொழிவிழி யிமைய மயிலொடு
கருதி யுறைபதி கயிலை மலையே. (55)

துய்ய புகழ்புனைக் கயிலையிலே துலங்கு படர்சடைப் பெருமானார்
தைய லுமையா ளுடனிருந்த சமையந் தனைநா
னியம்பலுற்றேன். (56)

## *விருத்தம்*

வானவ ரிருந்த தொருதிசை
மாதவ ரிருந்த தொருதிசை
மாசற நினைந்து துரிசற
வாழ்பவ ரிருந்த தொருதிசை
ஊனமில் புயங்கரர் களுடனே
யோகிக ளிருந்த தொருதிசை
ஊடுற விளங்கி யுரவுசெய்
யோகிக ளிருந்த தொருதிசை
தேனம ரலங்கல் மழுவொடு
தேவர்க ளிருந்த தொருதிசை
தேரினி லிருந்து தொருதிசை
சேவக ரிருந்த தொருதிசை
நாவல ரிருந்த தொருதிசை
நாயக னிருந்த (தொருதிசை)
(பாவல ரிருந்த தொருதிசை
பாங்குட னிருந்த) கைலையே ! (57)

---

*1. லுகவு என்றுளது.*

### வேறு

வரங்கள் தருபவ ரிருந்த தொருதிசை
வணங்கு மடியவ ரிருந்த தொருதிசை
நெருங்கு முனிவர்க ளிருந்த தொருதிசை
நிறைந்த வறிவின ரிருந்த தொருதிசை
தரங்கள் பெறுபவ ரிருந்த தொருதிசை
தவங்கள் புரிபவ ரிருந்த தொருதிசை
கரங்கள் குவிய வுளங்குவியப் பரிவொடு
கசிந்த வடியவ ரிருந்த தொருதிசை
இரங்கு [1] மமரர்க ளிருந்த தொருதிசை
யிலங்கு சடைய னிருந்த கைலையே ! (58)

## *விருத்தம்*

மணமுரசுந் துடியொடு பேரிகை
மல்லாரி நின்று முழங்கு மொருதிசை
பணவனல்ல முழவந்த மாகம்
படக நின்று முழங்கு மொருதிசை
தணிவிலாத வலம்புரி தானந்
தாரை சின்ன (முழங்கு) மொருதிசை
இணையிலாத விருதூது மொருதிசை
எம்பிரா னிருந்த கைலை மலையே ! (59)

### அகவல்

எண்ணுங் கமலங்க ளாயிரத்தில்
இலங்கு மலரொன்று குறைந்திடவே
கண்ணை யிடந்துதன் தொழில்முடித்துக்
கையில் ஆழி பெற்றவனும்
வேழ முகவனும் நான்முகனும்
வெற்றி (வேலுடைக்) கொற்றவனும்
வாழுங் கதிரொரு பனிரண்டும்
வருணனு மதியும் மாருதமும்

---

*1. இதில் ஐந்து வரிகளே உள்ளன.*

தாருகன் றன்னைப் பொருதழித்த
சமர வீர வயிரவரும்
வாரி தருமலர்ப் பூங்கொடியும்
வான மாருத மாதங்கியும்
கருப்புச் சிலைவல மதவேளும்
கலையின் முகமா மறைமுனியும்
அரிக்கு மரனுக்கு நடுவுதித்த
ஆதி அய்யனு மந்தகனும்
விரிக்கும் புகழ்புனை திரிபுரையும்
விளங்கும் வடுகனும் மெய்த்தவரும்
தாக மோக மற்றவரும்
தண்டே சுரருங் கின்னரரும்
நாக மாதரு மியக்கர்களு
நல்ல தும்புரு நாதர்களும் [1]
சிவலிங் கார்ச்சனை செய்தவரும்
திருநகர்த் திருவிளக் கிட்டவரும்
தவசிங் காரத் திருவேடம்
தனைப்பூ சித்த தத்துவரும்
சென்று சிவலிங்க வடிவுதனைத்
தெரிசித் தருள்பெற்ற தேவர்களும்
பொன்றுந் தனையுஞ் சீதாரி
புகைத்த தலைவரும் புண்ணியரும்
நந்த [2] வானம் செய்தவரும்
நாளும் திருவல கிட்டவரும்
அந்தி மதிபொதி செஞ்சடைமே
லணியும் மாலைதொ டுத்தவரும்
சார்வ மான வடியவரும்
சைவ வீர பத்திரரும்
போரில் மருவிய மலைமகளும்
பூவில் மாதும் நான்முகனும்
கண்க ளாயிரம் படைத்தவனும்
கருத வரியசொல் வானவரும்

---

*1. நாரதர் இல்லை எனலாம், 2. நந்தவனம் போலும்.*

பண்களதனால் குன்றுருகப்
பாடும் தும்புரு நாரதரும்
எரியின் தலைவரும் வயிரவரும்
ஏகா தேசி யுருத்திரரும்
நிருதி யுடனே யகத்தியனும்
நிறைந்த ஞான முனிவர்களும்
எட்டு நாகமும் பக்தர்களும்
எண்ணில் கோடி வயிரவரும்
அட்ட வசுக்களும் வைத்தியரும்
ஆதி வதிட்டரு மருந்ததியும்
வெற்றி மாதர் எழுவர்களும்
மேவுங் கபிலனு மரம்பையரும்
உற்ற துணையாய் வீற்றிருக்கும்
அளகைக் கோனு மருந்தவரும்
அரிய விரதங்கொண் டெனையாளும்
அன்பர் அறுபத்து மூவர்களும்
பெரிய தேவரு மியக்கர்களும்
பெருமை தருங்கண நாதர்களும்
புரங்கள் மூன்றுந் தழலெடுத்து
பொடியாய் வெந்து போய்விடவே
கரங்கள் குவித்தப் புறத்திருந்த
கருத்த மூவருங் கற்றோம்
எல்லா மறியும் பண்டிதரு
மிரண்டு மறியா ஞானிகளும்
சொல்லா லுருகும் வித்தகரும்
சொல்லற் றிருக்கும் சித்தர்களும்
மறப்பும் நினைப்புமற் றினிதிருந்து
வாழ்வும் வாழ்வுற வாழ்பவரும்
அங்கம் புளகிக்க வறிவழிய
அறிவா னந்தக் கடல்பெருக

செங்கை குவித்துட னஞ்செழுத்தால்
　　　　சிவனே போற்றி போற்றியென
குன்றில் மடமா னிடத்திருக்கக்
　　　　கொடிய மழுவாள் வலத்திருக்க
வென்றி மடமா னிடத்துநிற்க
　　　　விளங்கும் மிளம்பிறை நிலவெரிக்க
துய்ய திருக்கண்ட மிருளெறிப்பச்
　　　　சோதித் திருமுக மழகெரிப்பச்
செய்ய மணிமுடி வெயிலெரிப்பத்
　　　　திருந்து புனல்கங்கை யலைவீசப்
பொருந்து (மருங்கின்) மிசைமூரல்
　　　　புலித்தோ லாடை பொலிந்திலங்க
மருங்(கி லசைந்து) மூச்சுவிடு
　　　　மரவு மார்பில் நின்றிலங்க
தொழிலா லிலங்குஞ் செங்கனகத்
　　　　தோடுங் காதில் ஒளிவீச
வெள்ளை நீறு பொலிந்திலங்க
　　　　வேதம் புரிநூல் புரிந்தசைய
உள்ள முருகியங் கொன்றுபட்டு
　　　　உமையா ளுடனே யோகிருக்க
வாய்த்த மணிமுத்தின் பந்தலிலே
　　　　மகர தோரணம் நின்றிலங்க
எத்தன் மாணிக்கப் பீடத்தின்
　　　　மேலீச னோலக்க மினிதிருந்தார். (60)

**வேறு**

தாது கமழுந் துழாய்மாலும்
　　　　தண்டா மரைக்கண் நான்முகனும்
சீத மதியுந் திருச்சிலம்பும்
　　　　தேட வரிய பெருமானார்
ஆதி யுலகி லறம்வளர்த்த
　　　　அம்மை யுமையா டன்னுடனே
பாதிக் கருணை மரகதமாய்
　　　　பவள வரைபோ லினிதிருந்தார். (61)

**வேறு**

புயல்வான் மாருதந் தீய்ப்புனல்
பூமியானார் புலப்படு முயிர்களானார்
இயல்முத லான மேருகிரி
யானையா யிரவி யிந்துவானார்
அயன்மா லனலீசன் சிவமாகி
யருள விந்து நாதமானார்
கயன்மாறு மருணைவிழி யுமையுடனே
கயிலை மலைமே லினிதிருந்தார். (62)

**உரை**

இவ்வண்ணமே தம்பிரான் எழுந்தருளியிருக்கின்ற சமையத்திலே தம்பிராட்டி எழுந்திருந்து சிலம்பலம்புஞ் சேவடிகளை வணங்கித் 'தம்பிரானே'! உலகத்தில் வழங்குகின்ற பட்டுப்பூச்சியினால் செய்யப்பட்ட பரிவட்டங்களை சாத்திக் கொள்ளாமல் யானைத்தோல் போர்த்தும், புலித்தோலுடுத்தும் அருளிய காரணமும்; மாணிக்கம், முத்து, மரகதம், வயிரம், வைடூரியம், கோமேதகம், புட்பராகம், நீலம், பவளம் என்னும் நவரத்தினங்களால் செய்யப்பட்ட மேலான அணிகளைப் பூணாமல் அரவு பூண்ட காரணமும்; தேவரீருக்கு ஒரு பகையும் இல்லாமல் இருக்கையிலே மழுவுஞ் சூலமும் தரித்தருளிய காணமும்; சந்தனம், குங்குமம், அகில், கத்தூரி, கற்பூரம், புனுகு, சவ்வாது என்கிற மணப்பொருள்களைப் பூசாமல் திருநீறு பூசிய காரணமும்; புருடோத்தமர் வராகமூர்த்தியாகி அதல, விதல, சுதல, நிதல, தராதல, மகாதல, பாதாளம் என்கின்ற கீழேழு லோகமும் இடந்து தேடியும் காண்டற்கரிய திருவடியையொரு முயலகன் முதுகிலே வைத்தருளிய காரணமும்; பஞ்சபூதப் பரிணாமமாகத் திறலோங்கிய காரியங்களை உண்டாக்கத்தக்க கமலாலய மூர்த்தி[1] ஒரு அன்னமாகிப் பூலோக, புவலோக, சுவலோக,மகாலோக, செனலோக, தவலோக, சத்தியலோகமென்கின்ற மேலேழு லோகமும் பறந்து காண்டற்கரிய திருமுடியில் ஒரு சிறு பிறையை வைத்தருளிய காரணமும், மான் ஏந்திய காரணமும்; அனல்

---

*1. நான்முகன்.*

ஏந்திய காரணமும்; செங்கழுநீர், இருவாட்சி, செண்பகம், செவ்வந்தி, முல்லை, மல்லிகை, அலரி, வகுளம், பாதிரி என்று சொல்லுகின்ற பூக்களால் கட்டுகின்ற திருமாலை தரிக்காமல், முடைநாறி, கள்முதிர்ந்து நகையா நின்ற தலைமாலை தரித்த காரணமும் அருளிச் செய்ய வேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளத் தம்பிரானும் திருவுளம்பற்றியயருளி,

ஐயமுற்றும் கேட்டருளும் அஞ்சனக்கண் கிஞ்சுகவாய்த்
தையலுக்குச் சிவனார்தாம் தரித்தவகை இயம்பலுற்றேன். (63)

## *விருத்தம்*

கரியும் புலியு முரித்ததுவுங்
கனலும் மழுவுங் கலைமதியும்
பரியும்[1] பரவும் மூவிலையும்
புதிய நீறும் பொறுத்ததுவும்
எரியு நயன முயலகனை
யிசைப்ப தத்தா லமுக்கியதுந்
தெரிய வரிய புனைமருங்குல்
திருவே செப்பக் கேளென்றார். (64)

### உரை

ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம்[2], எமவஞ்சம், தெய்வகுருவம்[3], உருத்திர குருவம்[4] என்கின்ற அறுவகைப் போகபூமியினும் காமன் அவதரித்து, உருத்திரகுருவம்[5] என்கின்ற மாநிலத்திலே அவதரித்துக் காருகபத்தியம், ஆகவனீயம், தாக்கிணாக்கினீயம் என்கின்ற மும்மூர்த்தியும், இருக்கு, இயசுர், சாமம், அதர்வணம் என்கின்ற வேதம் நான்கும், குருபூசை, சிவபூசை, மயேச்சுரபூசை, அந்தணர் போசனம், அதிதிபோசனம் என்கின்ற வேள்வி ஐந்தும், சூத்திரம்[6], வியாகரணம், சிட்சை[7], சந்தோபிசிதம்[8], நிருத்தம், சோதிடம் என்கின்ற (வேத) அங்கம் ஆறும், ஓதல், ஓதுவித்தல்,

*1. பாயும் என்றுளது, 2. ஓரை வஞ்சம் என்றுளது, 3. தெய்வகுரு வஞ்சம், 4. உருத்திரகுரு வஞ்சம், 5. இங்கு ஒரு வரி மூலத்தில் விடப்பட்டுள்ளது போலும், 6. கற்பம், 7. திக்கிஷெய் என்றுளது, 8. யந்தா விசுதி என்றுளது.*

வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்கின்ற தொழில் ஆறும், தம்மை வழிபட்டுப் போந்த இருடிகள் நாற்பத்தெண்ணாயிர வராய், அவர்கள் பத்தினியர் தங்கள் கணவன் அன்றி வேறு தெய்வம் இல்லை என்றும், தங்கள் கற்பு நிலைமைக்கு அருந்ததியும் ஒவ்வாளென்றும் கருதியிருக்கின்ற செயற்பாடு நாம் அறிந்து இருடிகளுடைய பக்தி(யை)யும், அவர்கள் பத்தினியர்களுடைய கற்(பை)யும் சோதித்து அவர்களை இரட்சிப்பதற்காக நாம் பிட்சாடனம் என்னும் ஒரு வேடம் தரித்து பிச்சை கொள்ளுவதுவாக அவர்கள் இருக்கின்ற நகரியிலே செல்லப்பத்தினிகள் தங்கள் கற்பு - நாணயம் சுற்றுமதிகளாகவும், நெஞ்சு மனையாகவும், குணம் மறையாகவும், கற்பு கதவாகவும், அறிவு தாளாகவும் கொண்டிருக்கின்ற நிலைமை குலைந்து, அனைவரும் மயங்குதலால், இருடிகள் வந்து என்னை[1] வேடம் பாராமல் மிகவும் பரிகரித்துத் தங்கள் பத்தினிகள் அகத்தினின்றும் புறப்பட்டு விடுதலால், பத்தினிகளை நாம் "பூலோகத்தில் இருக்கின்ற பதிகள்தோறும் 'பதியிலார்' என்று பெயர்பெற்றுப் பாடியாடி முறைசெய்து இருப்பீராமீன்" என்று சபித்துவிட்டுப் பின்பு, வசிட்டருடைய பத்தினியாகிய அருந்ததியுடைய கற்பினைச் சோதிப்பதற்காக இருடிகளால் பிறகரிக்கப்பட்ட புண்களால் குருதி சொரியச் சென்ற என்னைக் கண்டு, தன் புத்திரன்மேல் தழும்புபட்டாற்போல மிகவும் இரங்கி, என் உடம்பின் புண்களெல்லாம் ஒருவி, காரம் வைத்து ஒற்றி மிகவும் உபசரித்துப் " போதீர் ! மகனே !! " என்று விடுத்தலால், மாதா இல்லாத நமக்கு ஒரு மாதா உண்டானாள் என்று கருதிப் போந்திருக்கின்ற காலத்துப் பின்பு, அவ்விருடிகள் என்னைச் சபிப்பதற்காக ஓமம் வளர்த்து, அதிலே பிறப்பித்தவைகாண் நான் உரித்த போர்க்களிறும், உரித்துடுத்த புலியும், பூண்டபாம்பும், தரித்த மானும், மழுவும், சூலமும், கனலும், மிதித்த முயலகனும், பூசிய நீறும், சூடிய பிறையும், இவை என்னுடைய மேனியில் தரியாமல் பூலோகத்திலே கிடக்கில் பதினான்கு உலகங்களும் இவைகளினாலே அழியும் என்று கருதிக்காண் நாம் தரிக்க வேண்டிய காரணம். பின்பு அந்த இருடிகள் நாற்பத்

*1. என்னுடைய*

தெண்ணாயிரவரும் நம்மை நோக்கிச் செய்த சிவத்துரோகம் தீரும்படி பூலோகத்திலே வந்து பிறந்துகொண்டு ஆண்டு வழிபட்டவர்கள் நாற்பத்தெண்ணாயிரவர் என்று திருவாய் மலர்ந்தருளி,

கலைமாலை மதிநுதற் பூங்கா ரிகையே கருதிநாம்
தலைமாலை புனைந்த வண்ணஞ் சாற்றவினிக் கேளென்றார். (65)

## *விருத்தம்*

வரியரவுஞ் சிறுபிறையும் வாளெருக்கும் சிறந்தொளிரும்
புரிசடையெம் பெருமானார் பூங்கொடியை முகநோக்கி
அரிபிரமர் தலைமாலையங் கடைவுபடக் கோத்துடலிற்
கருதியணிந் திருப்பதற்குக் காரணங்கே ளெனவுரைத்தார். (66)

**உரை**

இவ்வகை ஆதிப்பெருங்கடல் நடுவு தோன்றிக் குவிதலின்றி மலர்ந்து விளங்குகின்ற பொற்றாமரைப் பொகுட்டின்கண் ஒரு வண்டு சென்றிருப்பது போல் இருக்கின்ற, பதினான்கு உலகத்துக்கும் உட்பட்ட அயிராவதம், புண்டரீகம், வாமனம்[1], குமுதம், அஞ்சனம், புட்பதந்தம்[2], சாருவபூமம்[3], சுப்பிரதீபம் என்கிற திக்குக் கயங்கள் எட்டும்; உதயம், அங்கி, சண்டன், நிருதி, வருணம், சமீரணம், சந்திரம், உருத்திரம் என்கின்ற அட்டகுல[4] பருவதங்களும்; அனந்தன், வசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்கின்ற அட்டமா நாகங்களும், அக்கிரகன், பதிகன், தினகரன், சங்கோகன், கடுவான், கெந்தவன், பூஷணம் என்கின்ற மகாநாகங்கள் ஏழும்; உவரி, கரும்பு, மது, பால், தயிர், நெய், நீர் என்கின்ற சமுத்திரங்கள் ஏழு; கங்கை, யமுனை, நருமதை, சரசுவதி, கோதாவரி, காவிரி, குமரி என்கின்ற தீர்த்தங்கள் ஏழும்; பன்னிரண்டு நூறாயிரம் யோசனை தூரம் கீழே தாழ்நதும்,

***

***1. வாமம் என்றிருப்பதோடு, குமுதமும் வாமனமும் தலை தடுமாற்றமாயுள்ளன, 2. புட்பகெந்தம் என்றுள்ளது, 3. சறுவபொகுமம் என்றுள்ளது. 4. அட்டகுல பருவதங்களாவன:- இமயம், ஏமகூடம், கந்தமாதனம், கைலை, நிடதம், நீலகிரி, மந்தரம், விந்தம்.***

எண்பத்து நான்கு நூறாயிரம் யோசனை தூரம் மேலே ஓங்கிப் பதினாறு நூறாயிரம் யோசனை தூரம் சுற்றுடைத்தாய்ச் சரீரத்துக்குப் பதினாறு கவறு கூடிய வீணா தண்டுபோலப் பதினான்கு உலகத்தையும் ஊடுருவி நிற்கின்ற மகாமேருவும்; தாத்துரு[1], சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான்[2], இரணியன்[3], பகவான்[4], திவச்சுவான், பூடன், சவித்துரு, துவட்டா என்கின்ற துவாதெச[5] ஆதித்தரும்; மகாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், பீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன் என்கின்ற ஏகாதச[6] உருத்திரரும்; கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்விரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம் என்கின்ற நவகண்டங்களும்[7]; நாவலந்தீவு, இறலித்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, புட்கரத்தீவு, தெங்கத்தீவு, கமுகந்தீவு என்கின்ற ஏழு தீவுகளும்; அனலன், அவிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் என்கின்ற அட்டவசுக்களும்[8]; இந்திரன், அங்கி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்கின்ற திக்குப்பாலகர்களும்; சக்கிரவாளப்பதமும் இரட்சிப்பதாகக் கற்பித்துவிட்ட பிரம்மா, விட்டுணுக்களுக்கு விதித்த வாணாளாவது; கிரேதா யுகத்துக்குப் பதினேழு நூறாயிரத்து இருபத்தொண்ணாயிரமும் திரேதாயுகத்துக்குப் பன்னிரண்டு நூறாயிரத்துத் தொண்ணூற் றாராயிரமும் துவாபர யுகத்துக்கு எண்ணூறாயிரத்து அறுபத்து நான்காயிரமும், கலியுகத்துக்கு நான்கு நூறாயிரத்து முப்பத்தீராயிரமும் ஆக நான்கு யுகத்துக்கும் வருடம் நாற்பத்து மூன்று நூறாயிரத்து இருபதினாயிரங் கொண்டதுவாஞ் சதுர்யுகம்[9]; சதுர்யுகம் ஆயிரத்தெட்டு கொண்டது ஒரு பகல்;

---

*1. தராதர என்றுளது, 2. அங்கீசன் என்றுளது, 3. இந்திரன் என்றுளது, 4.பகன் என்றுளது, 5. பெயர்கள் சரிவர இல்லை, 6. சுவடியில் உள்ளபடி ஏகாதச உருத்திரராவார்:- மிறுக்கை, வியாதனன், சறுவன், நிருதி, அசோகவான், அகுறு, புந்தினன், பினாகி, பவ்வன், மனோரதன், காபாலி, தாணு, பகன் (எனப் பதின்மூன்று உளது), 7. நவகண்டங்களின் பெயர்கள் சுவடியில் சரியல்லை, 8.சுவடியில் பெயர்கள் சிதைவுற்றுக் காணப்படுகின்றன,*

*9. கிரேத 1728000, திரேதா 1296000, துவாபர 864000, கலி 432000, ஆக சதுர்யுகம் 4820000.*

இரண்டாயிரத்துப் பதினாறு சதுர்யுகம் கொண்டது ஒருநாள்; நாட்கள் முப்பது கொண்டது ஒரு மாதம்; மாதங்கள் பன்னிரண்டு கொண்டது ஒருவருடம்; வருடங்கள் நூறு கொண்டது பிரம்ம கற்பம்; பிம்ம கற்பம் நூறு கொண்டது விட்டுணு கற்பம்.

இப்படி நியமிக்கப்பட்ட கற்பங்கள் சென்றால் இறந்து விடக்கடவார்கள்; அப்படி இறந்துபட்ட அவர்கள் தலைகளை நாம் கற்பாந்தங்கள் தோறும் எடுத்துத் தாவடமாகக் கோர்த்துத் தரிக்க, அத்தாவடம் நம்முடைய காலின் நகத்திலே வந்து தாழ்ந்ததுகாண். சங்கார தாண்டவமாடுவதற்கெல்லை; நாம் சங்காரத்தொழில் முடிப்பது காரணமாக வந்தோம். மற்றொன்றுங் கருதியல்லகாண்.

அலைகடல்சூழ் புவிவாழும் அருந்தவத்தி னாலிமைய
மலையரையன் பயந்தெடுத்த மடமயிலே யெனமொழிந்தார். (67)

## *விருத்தம்*

வெங்காள மணிமிடற்று வேதியனார் தம்முடம்பில்
பங்காளு மடமயிலைப் பரிவினுடன் பார்த்தருளிச்
சங்கார தாண்டவத்துக் கெல்லைகாண் தலைகோர்த்துக்
கங்காளம் புனைந்ததுநாம் காரிகையே யெனமொழிந்தார். (68)

**உரை**

இவ்வண்ணமே திருவாய் மலர்ந்தருளப் பிராட்டியும், தம்பிரானுடைய திருப்பாத கமலங்களிலே அட்டாங்க[1], பஞ்சாங்கமாக வணங்கித் தேவரீரே ! இப்பூமி சண்டவாயுவி னாலே மொத்துண்டுதான் இருக்கின்ற பத்மப் பொகுட்டினின்றும் விழுந்து அழுந்துகின்றகாலத்து, வராக மூர்த்தமாகித் தன்

*1. அட்டாங்க வணக்கம் பெண்களுக்கில்லை. பெண்களின் கொங்கைகள் நிலத்தில் தோய்ந்தால் உலகம் அழியும் என்பர். எனவே, பஞ்சாங்க வணக்கமே பெண்களுக்கு உரியது. ஈண்டு எம்பிராட்டி என்பது கருதி அட்டாங்க யோகமும் அமைத்தார் போலும் ஆசிரியர்.*

கோட்டினால் தாங்கிக்கொண்டிருந்தும்; வாயு நின்றபின்பு பண்டுபோல் இருக்கும்படி அப்பொகுட்டில் வைத்தும்; (திமிங்கிலம்) என்று பெயருடைய மச்சங்களுடைய[1] யுத்தத்தினாலே[2] பத்மம் அலைந்து, பூமி நடுங்கு கின்ற செயல்கண்டு தான் ஒரு சேல்[3] வடிவாகிப் பூமியை ஒரு செவுளின் கண்ணே அடக்கிவைத்து, யுத்தம் முடிந்த பின்பு, மீண்டும் பத்மப் பொகுட்டில் இருத்தியும்; பெருங்கடல் பிரளயம் கோத்த காலத்துப் பூமி அப்பொகுட்டினின்றும் (விழுந்து) மிதந்தழுந்தக் கண்டு, தான் ஒரு குழவி வடிவாகிப் பதினான்கு உலகத்தையும் தன் உதரத்து அடக்கி, அக்கடல் நிற்பதொரு வடபத்திரத்திலே[4] கண் வளர்ந்து, பிரளயம் தாழ்ந்த பின்பு பண்டு போலப் பத்மப் பொகுட்டிலிருத்தியும்; இரணியன் என்கின்ற அவுணன், தன் புத்திரனாகிய பிரகலாதனை நோக்கி 'உன் நாராயணன் எங்கே உளன்'? என்று கேட்ப, அவன் 'என் நாராயணன் எங்கும் உளன்' என்றபோது, (சராசரங்கள் ஏழுக்கும், சீவனுக்கும் சீவனாகி சிங்கமாற்சனையாக அவையித்திடத்தே நிற்பேனென) அவன் ஒரு கற்றூணை நோக்கி 'இதிலுமுளனோ? 'வென்று அறைய முன் புக்கிருந்த வண்ணமே தோன்றி, அவனுடலைப் பிளந்தளைந்தும்; ஒரு மடுவின் கண் காண் கராவின்[5] வாய்ப்பட்டொரு களிறு, பெரிதும் துயரப்பட்டு 'மூலமே' என்று அழைப்ப 'ஓலம்' என்று உதவியும்; ஒரு வாம[6] ரூபமாய்ச் சென்று, பதினான்கு உலகத்தையும் ஓர் அடியால் அளந்துகொண்டு, இவ்வண்ணமே பூமிக்குக் கர்த்தாவாயிருக்கின்ற விட்டுணுவுக்கும்; அன்றியும் நிற்பன, நடப்பன, ஊர்வன, பறப்பன, முதலாகிய பல யோனிகளையும் படைக்கத்தக்க பிரம்மாவுக்கும் இலையம்[7] உண்டாகத் தேவரீர் இலையமன்றி இருப்பதொரு பெருமை யுடையீராய் இருந்தீர். ஆதலால் அப்பெருமையினை 'அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும்' என்று விண்ணப்பம் செய்யக் கேட்டுத் தம்பிரான் திருக்கண் நோக்கியருளி, 'வாராய்!

---

*1. மற்களுடைய என்றுளது, 2. வயிறத்தினாலே என்றுளது, 3. செயல் என்றுளது, இது கயல் மீன் எனும் கெண்டை மீன். சேல்கெண்டை என்பது கெண்டை மீனில் ஒருவகை, 4. ஆலிலை ( ) இப்பகுதித் தொடர்ப் பொருத்தம் இல்லை, 5. முதலை, 6. குள்ளன, 7. இலையம்=?; இழிவு போலும்.*

உமையே!! இற்றைவரையாகப் பிரம்ம விஷ்ணுக்களுக்குக்[1] கிடையாதொரு பொருளைப் பிறிதொருவரும் அறியுமது வல்லகாண். பிருதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்கின்ற பஞ்சபூதங்களிலும், தேயு நம்முடைய உருவம் ஆதலால் வடவாமுகாக்கினி மத்தியத்திலேயிருந்து நாம் உனக்கு உபதேசிக்கவேணும்' என்று திருவாய்மலர்ந்து, தாமும் பார்வதியும் எழுந்தருளிச்சென்று வடவாமுகாக்கினி மத்தியத்திலேயிருந்து உபதேசிக்க, பார்வதியை நோக்கி, "உனக்கு நாம் அறிவிக்கின்ற பொருள் அக்கினியும் அறியுமதல்ல?" என்று சொல்லி ஒருமித்துக் கோசம் செய்து, அக்கோசத்திலே எழுதிக் கொடுத்தருளப் பார்வதியும் பார்த்தருளுகின்ற காலத்துத் தேவசேனாபதியாகிய குமரக்கடவுள் ஒரு வண்டின் உருக்கொண்டு எழுந்தருளித் தம்பிராட்டியுடைய திருக்குழலுக்குள்ளே ஒளிந்திருந்து வாசிக்கின்ற தன்மையைத் தம்பிரான் அறிந்து, மகனாரைத் திருக்கண் சாத்தியருளி, "வாராய்! கந்தசுவாமி!! யாதொரு பொருளுங் கேட்குமளவில், குருவை வழிபட்டுப் பின்பு, அவன் தானே உபதேசிக்கக் கேட்பதுகாண் யாவருக்கும் இயல்பாவது. நீ இத்தன்மை ஒழிந்து நம்மை வஞ்சித்தாய். ஆதலால் ஒரு மகரமாகிச் சமுத்திரத்தின்கண் திரிவாயாக !" என்று சபித்தருளி

தந்தையார் விடைகொடுப்பச் சரவணத்தில் அவதரித்த
மைந்தனார் மகரமாகி மறிகடலி னுட்புகுந்தார். (69)

## *விருத்தம்*

சிகர முடியிற் செந்தீயும்
திங்கட் கொழுந்தும் புனைந்தருளும்
அகர வுருவா முமைபாகர்
ஆதி முதல்வர் முனிந்தருளப்
பகரு முறையொன் றறியாமல்
பனிவண் டான வடிவொழிந்து
மகர வுருவங் கொண்டருளி
மகரா லயத்தி னுட்புகுந்தார். (70)

---

**1. விருட்சங்களுக்கு என்றுளது.**

**உரை**

பின்பு தம்பிராட்டி அக்கோசத்திலுள்ள பிரயோசனம்[1] எல்லாம் அவதானம்[2] பண்ணிப் பிறவித் துக்கந் தீர்த்தருளி, மீண்டும் நம்பிரானை வணங்கி 'சத்தியும் சிவமும் என்று சொல்கின்ற இரண்டிலும் கருத்தா இருப்ப நீரும் யாது?' என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரானும் கேளாய்! கௌரி!! இன்னதென்று யாவர்க்கும் அளவிடப் படாதபெருமை எனக்குச் சொரூபமாகிச் சிவமென்கின்றது எந்தனுக்கு[3] நாமமாயிருப்ப தென்று காண்.

விளையாடுதல் காரணமாகத் தன் கண்ணே சக்தியைத் தோற்றுவித்து, சக்தியின் கண்ணே நாதம் தோன்ற, நாதத்தின் கண்ணே விந்து தோன்ற, விந்துவின் கண்ணே பஞ்சக்கிருத்தியம் நடத்தவேண்டி, பூமிக்கு இருளே பிரகிருதி ஆதலால் பூமியை விளக்குதல் காரணமாகிச் சந்திராதித்தர் அக்கினி என்று மூன்று விதமாக நியமித்து, அவற்றைத் தனக்கு முக்கண்ணாகக் கொண்டு சத்தியம், வாமம், அகோரம், தத்புருடம், ஈசானம், என்கின்ற ஐந்து முகத்திற் சதாசிவம் தோன்றச் சதாசிவத்தின் கண் மகேசுரன் தோன்ற, மகேசுரனின்கண் உருத்திரன் தோன்ற, உருத்திரனின் கண் விஷ்ணு[4] தோன்ற விஷ்ணுவின்கண்ணே[5] பிரம்மா[6] தோன்ற, பிரம்மாவின் கண்ணே ஆத்துமாத் தோன்ற ஆத்துமாவின் கண்ணே ஆகாசந்தோன்ற, ஆகாசத்தின்கண்ணே வாயுத்தோன்ற வாயுவின்கண்ணே தேயுத்[7] தோன்ற, தேயுவின் கண்ணே அப்புத்தோன்ற, அப்புவின்கண்ணே பிருதிவித் தோன்ற, பிருதிவியின்கண்ணே பஞ்சபூதப் பரிணாமமாகி எரும்புகடை யானைதலை எண்பத்துநான்கு நூறாயிரம் பேதா பேதங்களும் உள்ளீடாகி, பிரம்மாவினாலே சராசரங்கள் தோன்ற அவைகளுக்கெல்லாம் காரணமாகி, பாலில் நெய்யும், எள்ளில் எண்ணெயும்போல நின்று விளையாடி மீண்டும் சராசரங்கள் பிருதிவியில் ஒடுங்கி, பிரதிவி அப்புவில் ஒடுங்கி, அப்பு தேயுவில் ஒடுங்கி, தேயு வாயுவில் ஒடுங்கி , வாயு ஆகாயத்தில்

*1. உண்மை, 2. அறிந்து, 3. எய்தற்கு என்றுளது, 4. விழசத்தோன்ற என்றுளது, 5. விழத்துவின் கண்ணே என்றுளது, 5. விறுமா என்றுளது, 7. தேய்வு என்றுளது.*

ஒடுங்கி, ஆகாயம் ஆத்துமாவில் ஒடுங்கி, ஆத்துமா பிரம்மாவில் ஒடுங்கி, பிரம்மா விஷ்ணுவில் ஒடுங்கி, விஷ்ணு உருத்திரனில் ஒடுங்கி, உருத்திரன் மகேச்சுரனில், மகேச்சுரன் சதாசிவத்தில் ஒடுங்கி, மகேச்சுரன் சதாசிவத்தில் ஓடுங்கி, சாதசிவம் விந்துவில் ஒடுங்கி, விந்து நாதத்தில் ஒடுங்கி, நாதம் சக்தியில் ஒடுங்கி, சக்தி பண்டை வெள்ளை வெளியாகி(ய) சிவத்தில் ஒடுங்கும். ஆதலால், சிவங்காண் நிலைநின்றது. நீரிலே அநேக மலர்கள் தோன்றி அதன்கண்ணே உடைந்தொரு நீரம்பை விட்டாற்போல் தன்கண்ணே தோன்றித் தன்கண்ணே ஒடுங்கி விடுங்காண்" என்று திருவாய்மலர்ந்தருளி

இமையமயிலே சிவமன்றி யொன்று மில்லைகாண்
என்றுரைத்தார் ஒன்றாய் ஒன்று மில்லாதார். (71)

## *விருத்தம்*

குன்றாய் விசும்பாய் அனல்புனலாய்க்
குலவுங் காலாய்க் குவலயமாய்
அன்றாய்ச் சுடர்கள் ஒருமூன்றாய்
அயனா யரியாய் அனுதினமாய்
நன்றாய்த் தீதாய் அனைத்துயிராய்
நானாய் நீயாய் நடுவாகி
ஒன்றாய் நின்ற பெருவெளிகாண்
உமையே சிவமென்று அருள்செய்தார். (72)

**வேறு**

மொத்திடும் புனலில் வாயு
விகாரத்தால் முகுற்று[1] மேனி
ஒத்துடல் தன்னின் மீண்டும்
ஒருநீர்மை யாகுமாப் போலச்
சித்தமாம் சிவத்தில் தோன்றிச்
சிவத்திலே யழிவ தல்லாற்
சத்தியென் றுண்டோ வென்றார்
சத்தியுஞ் சிவமு மானார். (73)

*1. முற்று போலும்.*

**உரை**

இவ்வண்ணமே தம்பிரான் தம்முடைய சொரூபமான சிவம் நித்தியம் என்றும், தம்பிராட்டியுடைய சொரூபமாகிய சத்தி அநித்தியம் என்றும் திருவாய்மலர்ந்தருளக் கேட்டுத் தம்பிராட்டிக்குச் சிறிது கோபம் உண்டாக, அதனைத் தம்பிரான் உணர்ந்து "வாராய்! கௌரி!! ஒரு பாழில் ஒருவன் வீடெடுத்து மீண்டும் அதனை இடித்து நிரவிவிட்டால் ஒரு வெளியாய் விடுவதல்லாது வீடாகி நிற்குமோ சத்தியின் தன்மைகாண்" என்று திருவாய்மலர்ந்தருளி "இமையமயிலே! சிவம் அன்றி வேறு தெய்வம் இல்லை!" என்று திருச்சடையில் இருக்கின்ற தலை மாலையை வாங்கியருளி "இந்தத் தலைமலையை நீ அறிந்ததிலையோ? நீ யுகங்கள் தோறும் பிறந்து இறந்தால் உன்னுடைய தலையோடு பூமியிற்கிடந்தால் பூமிக்கு நன்மை[1] வராதே என்கிறதைப்பற்றி நாம் (அவைகளைக் கோர்த்துத்) தலையிலே அணிந்துகொண்டோம்.

ஆதலால் சத்தியென்று ஒன்றல்லவென்றும், மனைவி கணவருடன் கோபிப்பது நன்றல்ல; சுவாமித்துரோகம்" என்றும் முனிந்தருளித் தம்பிராட்டி திருக்கரத்தில் கொடுத்த திருக் கோசத்தை வாங்கிச் சமுத்திரத்தே வீசியருளி "வாராய்! உமையே!! நீ நம்முடனே கோபித்ததற்குத் தண்டனையாகக் கன்மபூமியிலே போய்ப் பிறப்பாயாக! அப்படிப் பிறக்குமிடத்துத் திக்குப்பாலர்களில் குடதிசைக்கு உரித்தான வருணகுலமான பரதவரில், தென்திக்கில் பாண்டிமண்டலத்து மங்கை என்கின்ற ஊரிலே, பிரம்மபுத்திரனாகிய காசிபப்பிரசாபதி புத்திரன் திரியம்பகன் என்னு நாமதேயமும், அதியரையன் என்கின்ற பட்டமும் பெற்று, மிகவும் தன்மசீலனாகி, வேதம், வேதாங்கம், இதிகாசம், ஆகமம், புராணம், நீதி சாத்திரம், சோதிடசாத்திரம்[2], கூபசாத்திரம்[3], தன்மசாத்திரம், மன்மதசாத்திரம், காவியம், நாடகம், விரகம்[4], மத்துரு[5], வேதம், இலேகம், நிருத்தம்,

***1, இலையம் என்றுளது. இலையம் எனுஞ்சொல் மூன்று இடங்களில் இழிவு எனும் பொருளில் வந்தது. ஈண்டு தொடர்கருதி இச்சொல் பெய்துரைக்கப்பட்டது, 2. சொதி சாத்திரம் என்றுளது, 3. கிணறு வெட்ட உதவும் சாத்திரம், 4 & 5 = ?***

சட்சமயம், சப்தப்பிரம்மம்[1], அட்டாங்கயோகம், நட்டம்[2], முட்டி, சிந்தனை, ஆகாயகமனம், ஆகாயப்பிரவேசம், அத்திபரீட்சை, அசுவபரீட்சை, இரதபரீட்சை, பூமிபரீட்சை, கனக பரீட்சை, சாமுத்திரியம், தம்பனம், மோகனம், உச்சாடனம், வசீகரணம், மதுரபட்சதம், நானாதேசப்பிரவேசம், சித்திரகருமம், பத்திரசேதனம், வீணை, வேணு, வாச்சியம், குக்குடவாதம், மாதவாதம், கெந்தவாதம், தாதுறுவாதம், விஷமந்திரம், சம்பிரதம், மடநூல்[3], கணிதம், மற்போர், செய்யுள், பாடல், தெசப்பரீட்சை, நிமித்தம், அக்கினித்தம்பனம், சலத்தம்பனம், சுக்கிலத்தம்பனம், வாக்குத்தம்பனம், வாயுத்தம்பனம், ஆகருடணம், அவிழ்தப்பிரயோகம், கவித்தாரம், இந்திரஞாலம், மந்திரவாதம் என்று சொல்லுகின்ற அறுபத்துநான்கு★ கலைகளையும் அறிந்து, அறிவு, நிறைவு, ஒப்புரவு, கடைப்பிடி என்று சொல்கின்ற புருடலட்சணம்[4] நான்கும் தனக்கு ஆபரணமாகக் கொண்டு ஞான பரிபூரணனாயிருக்கின்ற பரதனும், அவன் மனைவி 'கற்புக்கு அருந்ததி' என்று சொல்லத்தக்க பதிவிரதை பாவகமுடையாளாகி, ஆதுலர்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்கு உண்டி, பசுவுக்கு வாயுறை,

---

*1. சற்றுப்பிறுமம் என்றுளது, 2. நட்டாமுடி என்றுளது நட்டாமுட்டி சிந்தனை போலும்?, 3. -?, 4. அறிவு, ஓர்ப்பு, கடைப்பிடி, நிறைவு.*

***★1. அக்கரவிலக்கணம், 2. இலிகிதம், 3. கணிதம், 4. வேதம், 5. புராணம், 6. வியாகரணம், 7. நீதிசாத்திரம், 8. சோதிடசாத்திரம், 9. தரும சாத்திரம், 10. யோகசாத்திரம், 11. மந்திரசாத்திரம், 12. சகுனசாத்திரம், 13. சிற்ப சாத்திரம், 14. வைத்திய சாத்திரம், 15. உருவ சாத்திரம், 16. இதிகாசம், 17. காவியம், 18. அலங்காரம், 19. மதுரபாடனம், 20. நாடகம், 21. நிருத்தம், 22. சத்தப்பிரமம், 23. வீணை, 24. வேணு, 25 மிருதங்கம், 26. தாளம், 27. அத்திர பரீட்சை, 28. கனக பரீட்சை, 29. இரதப்பரீட்சை, 30. கசப்பரீட்சை, 31. அசுவப் பரீட்சை, 32. இரத்தினப் பரீட்சை, 33. பூமிப்பரீட்சை, 34. சங்கிராம விலக்கணம், 35. மல்யுத்தம், 36. ஆகருடணம், 37. உச்சாடனம், 38. வித்து வேடனம், 39. மதனசாத்திரம், 40. மோகனம், 41. வசீகரணம், 42. இரசவாதம், 43. காந்தருவவாதம், 44. பைபீலவாதம், 45. கவுத்திகவாதம், 46. தாதுவாதம், 47. காருடம், 48. நட்டம், 49. முட்டி, 50. ஆகாயப்பிரவேசம், 51. ஆகாயகமனம், 52. பரகாயப்பிரவேசம், 53. அதிரிசயம், 54. இந்திரஞாலம், 55. மகேந்திர ஞாலம், 56. அக்கினித்தம்பம், 57. சலத்தம்பம், 58. வாயுத்தம்பம், 59. திட்டித்தம்பம், 60. வாக்குத்தம்பம், 61. சுக்கிலத்தம்பம், 62. கன்னத் தம்பம், 63. கட்கத்தம்பம், 64. அவத்தைப்பிரயோகம்.***

கண்ணாடி, அஞ்சனம், கண்மருந்து, தலைக்கு எண்ணெய், பெண்போகம், கன்னிகாதானம், தண்ணீர்ப்பந்தல், இட்டுரை[1] தடாகம், கா, ஆவுரிஞ்சி, விலங்கிற்குணவு, முடவர்க்களித்தல், விலைகொடுத்துயிர் விடு(த்)தல், சிறைச்சோறு, தின்பண்டம் (நல்கல்), மறை ஓதுவித்தல், மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் (வார்த்தல்), அறவைச்சோறு, பிணஞ்சுடுவித்தல், வண்ணான் கூலி, நாவிதன் கூலி, நோய் மருந்து, ஐயமிடுதல், வறியோர்க்குத் துகில் அளித்தல், அறவைத்தூரியம் என்று சொல்கின்ற முப்பத்திரண்டு★ அறமும் திறமாக நடத்திப் போதுகின்ற வருணவல்லியும் ஒரு புத்திர உற்பத்தி வேண்டு மென்று கருதி, நம்மை நோக்கித் தவம் செய்து நின்றார்கள். ஆதலால் நீ அவர்களுக்கு மகளாகச் செனிக்கக்கடவை. நீ பிறந்து வளர்ந்து உனக்குப் பருவம் வந்த காலத்து, நாம் ஒரு மானிட வடிவம்[2] கொண்டுவந்து, வலைவீசி உன் புத்திரனாகிய மகரத்தைப் பிடித்து, உன்னையும் திருமணம் செய்துகொள்ளக் கடவோம் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

தொல்லைநில மறியும்வண்ணம் தோன்றுகின்றோம் நாம்வந்து
மெல்லியலே இப்பொழுதே போகென்று விடைகொடுத்தார். (74)

## *விருத்தம்*

மறைபயிலும் வியாதன்றன் மரபில்வந் தவர்துங்கன்
பறைகுளிர்வெங் களிற்றுக்குப் பரதவர்தங் குலதீபன்
அறைகடல்சூழ் பார்புகழும் அதியரையன் றனக்குநீ
பிறைநுதலாய்! பிள்ளையாய்ப் பிறவென்றார் பிறவாதார். (75)

---

*1. மடம் போலும், 2. விக்கிரகத்தைக் கொண்டுவந்து என்றுள்ளது.*

*★ 1. ஆதுலர்சாலை, 2. ஓதுவார்க்குணவு, 3. அறுசமயத்தார்க்குண்டி, 4. பசுவுக்கு வாயுறை, 5. சிறைச்சோறு, 6. ஐயம், 7. தின்பண்டம் நல்கல், 8. அறவைச் சோறு, 9. மகப்பெறுவித்தல், 10. மகவு வளர்த்தல், 11. மகப்பால் வார்த்தல், 12. அறவைப்பிணஞ்சுடுதல், 13. அறவைத்தூரியம், 14. சுண்ணம், 15. நோய்க்குமருந்து, 16. வண்ணார்கூலி, 17. நாவிதர்கூலி, 18. கண்ணாடி, 19. காதோலை, 20. கண்மருந்து, 21. தலைக்கு எண்ணெய், 22. பெண்போகம், 23. பிறர்துயர்காத்தல், 24. தண்ணீர்ப்பந்தல், 25. மடம், 26. தடம், 27. சோலை, 28. ஆவுரிஞ்சுதரி, 29. விலங்கிற்குணவு, 30. எருவிடுதல், 31. விலைகொடுத்துயிர் விடுதல், 32. கன்னிகாதானம்.*

### வேறு

பிறந்து வளர்ந்து பேதையாய்ப்
பேசு மடனாணம் பிறப்பச்சம்
நிறைந்து நம்மே லாதரவு
நெஞ்சி னூறுங் காலத்துச்
சிறந்த வேட மதுபுனைந்து
தென்மங்கை தனில்நாம் வருகின்றோம்
குறைந்து வருந்துந் தனிமருங்கில்
கொடியே போகென் றருள்செய்தார். (76)

### வகுப்பு

காமத மலைசெற் றுரிகொண்டவர்
கதிர்முடி மதனைச் சுடுமம்பகர்
கனல்வர வதனைப் புனைசெங்கையர்
கலைபயில் தமிழைத் தெரிநன்றியர்
இரவினில் நடமிட் டருள்கின்றவர்
விரிமறை மகிழ்பொற் பாதபங்கையர்
அணிவளை யேரளிமைக் குழல்வஞ்சியை
அறுமுக வரசைத் தருமங்கையை
அருள்புனை பிடியைத் தொழிலொன்றிய
பரிபுர மயிலைத் தொழுதண்டர்கள்
பரவிடு குயிலைத் தாயையன்பொடு
பரதவர் மரபில் பிறவென்றார். (77)

### வேறு

புதுமதன் மெய்ப்பொடி கண்டார்
புரமெரி யச்சிலை கொண்டார்
புரையற நிறத நினைந்தார்
புனல்விழி மெத்தி யிருந்தார்
விதிதலை கத்த வரிந்தார்
விரகறு மெச்சி லுகந்தார்
விறநம னுடலை யுதைத்தார்
விதுவர கக்கோ டணிந்தார்

அதிதிரை யிற்கடு வுண்டார்
அவனிய னைத்தும் நிறைந்தார்
அலைபுனை அத்தி புனைந்தார்
அடியவர் பத்தியில் நின்றார்
பதமத வெற்பை முனிந்தார்
பரிபுர மிட்டு நடந்தார்
பரதவர் குலந்தனில் வந்தார்
பணிமொழி யைப்பிற வென்றார். (78)

**உரை**

இவ்வண்ணமே தம்பிரான் அருளிச்செய்யக்கேட்டுத் தம்பிராட்டி மிகவும் பயந்து, எழுந்திருந்து வணங்கி, "தம்பிரானே! பிராம்மண, ஷத்திரிய, வைசிய வேளாளர், என்னும் நான்கு சாதியிருக்க அவை ஒழிந்து, பரதவர் வமிசத்தில் அடியேன் பிறக்கக்கடவது ஏன்?" என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரானும் பார்வதியை நோக்கி "கேளாய் கௌரி! பரதவராய் நின்றவர் கேவலரல்லர்காண், சமுத்திரம் முற்றுமே[1] பெருகிப் பூமியைக் கொள்ளாதபடி சமுத்திர மத்தியத்திலே குதிரை முகமாகி நின்று எரிகின்ற, புனலைச் சுவறுவிக்கின்ற[2] வடவாமுகாக்கினியை நாம் வாங்குதலாலே, பிரளையம் கோத்துப் பூமியைக் கொள்ளாநின்ற காலத்து நாம் கற்பித்த ஆகமத்தின்படியே பக்தர்கள் நம்மைப் பூசிப்பதாக இருந்த உருவத்தினை ஒரு தோணியிலே வைத்துக்கொண்டிருந்து, நம்மைப் பூசித்து நம் ஊரான சீர்காழி நகருக்குத் 'தோணிபுரம்' என்று ஒரு பெயரை முன்பு உலகில் வழங்கிய புகழையுடைய மரபினர்காண் உமையே பரதவர்!" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

தோணி புரமென் றொருநாமம்
தொல்லை யுலகில் வழங்குவித்துப்
பூணும் புகழா மரபினர்காண்
உமையே பரதவ ரென்றுரைத்தார். (79)

---

*1. முற்றலே என்றுளது, 2. வற்றச் செய்கின்ற.*

## *விருத்தம்*

துள்ளு மகர நெடுங்கடலில்
　　　　சொலிக்கும் வடவைக் கனலவித்து
வெள்ள மிகுந்து கிளர்ந்தோங்கி
　　　　விண்ணு மண்ணும் பரந்தெழுநாள்
உள்ள மகிழ்ந்து தோணிநமக்
　　　　குதவி யுடனே யீந்துபுகழ்
கொள்ளும் பெருமை படைத்துடைய
　　　　குலங்காண் பரதவர் குலமென்றார். (80)

**உரை**

"சோழனுக்குச் சரீரத்திலே துவறதோடமுண்டாகி[1], தோடம் தீர உவரிக்கடல் நடுவில் மாமாங்கம் என்கிற தீர்த்தம் ஆட மாறும் என்று மகாவிருடிகள் சொல்ல, வீரசோழ வேதியரைய னென்பான் ஒரு பரதவன். சோழனை ஒரு தோணியில் கொண்டுசென்று சோழனைத் தீர்த்தமாடுவித்துத் துவறதோடம் மாற்றுவித்து, அக்கங்கையை நோக்கிப் பன்னிரண்டு வருடத்துக்கு ஒருநாள், சோழமண்டலத்துப் பேராற்றங் கரையிலே நின்றதொரு வாசிலே[2] உதிக்கும்படி கற்பித்தது. ஆதலால் ஆற்றங்கரையில் நின்ற வளரரசுதன்னில் மாமாங்கம் தோன்றும்படி முன் சொன்னவர்காண் தோகாய் பரதவர்" எனப் புகன்றார்.

## *விருத்தம்*

ஆர வளைகள் பலமுழங்க
　　　　வம்பொற் றோணி தனின்மீது
சேர பதியை யுடன்வைத்துத்
　　　　திரைவா ருதியில் நடுச்சென்று
சார வரிய மாமாங்கம்
　　　　காட்டிச் சடநோய் தவிர்ப்பித்த
வார முடைய மரபுகா
　　　　ணுமையே பரதவர் மரபென்றார். (81)

---

*1. -?, 2. கும்பகோணம் மகாமக்குளம் போலும்.*

## உரை

"அதுவன்றியும் பாண்டியனுக்கு, ஆகாத நாளையிலே பிள்ளை பிறக்க, அப்பிள்ளை இருந்தால் ஆறு ஆண்டுகள் மழை பெய்யாது பிராணிகள் நாசமாகுமென்றும், அதனைக் கடலிலே போடுகிறதுதான் தன்மமென்றும் சோதிடர்கள் சொல்லப் பாண்டியன், தேவேந்திர வல்லவதரையன் என்பானொரு பரதவனை அழைத்து "நீ இப்பிள்ளையைக் கடலிலே போட்டு வருவாய்!" என்ன, அதற்குத் தேவேந்திர வல்லவதரையன் 'நாம் இந்தப் பிள்ளையைக் கொல்லுவது சரியல்ல' வென்று கருதிப் பிள்ளையைத் தன் மனைவி கையிற் கொடுத்துத் தன் பிள்ளையைக் கடலிலே போட்டுச் சில காலம் சென்ற பின்பு பாண்டியனுக்கு இராசயோகம் பிறந்த காலத்துத் தான் வளர்த்த பிள்ளையைக் கொண்டு சென்று காட்டி, அப்பிள்ளைக்குப் பட்டாபிசேகம் செய்தார். ஆதலால் நின் [1] பாவம் நீங்கத் தென்னவர்தம் குலந்தான் உலகில் நிலைநிற்கப் பைம்பொன் மகுடம் புனைவித்த குலங்காண் பரதவர் குலம் என்றார்.

## *விருத்தம்*

கோல முடைய மைந்தனிவன்
பிறந்த நாளிற் கொடுமையினால்
ஞாலந் தன்னில் மழைபெயர
நடுவே கொடுபோய் நீயிவனை
வேலை தனிற்போக் கெனமொழிய
வேந்தன் மகனை வளர்த்துத்தன்
பாலன் தனைவே லையிற்போக்குங்
குலங்காண் பரதவர் குலமென்றார். (82)

## உரை

"அதுவன்றியும் இராக்கதர் மீன்[2] வடிவுகொண்டு பூமியை அழித்து மீண்டும் மீன் வடிவாகிச் சமுத்திரத்திலே திரிகின்ற செயற்பாடறிந்து வீரசோழவதியரையன் என்பான் ஒரு பரதவன்,

---

*1. நின்பவலங்க என்றுளது, 2. மஷத்தின் என்றுளது.*

சோழனைத் தோணியிற் கொண்டுசென்று, வீரராட்சதராகி சமுத்திரத்தைப் பெருவலையாலே வளைத்து, மீன்களைப் பிடித்துச் சோழனைக்கொண்டு கொல்லுவித்தும், அக்கடலில் நிற்பதொரு பனை, ஆதித்த உதையத்தை மறைக்கப் பூமியில் உள்ளார்க்கு ஆதித்த உதையம் காணும்படியாகச் சோழனை ஒரு தோணியில் கொண்டுசென்று, பின் முதுமகாவாரி எழும் கதிர் மறைத்த அந்தப் பனையை வெட்டி வீழ்த்திய வீரர்காண், உமையே பரவர்" எனப் புகன்றார்.

## *விருத்தம்*

சோழர் பதியைத் தோணிதனிற்
கொண்டு சென்று சுடர்வாளால்
ஆழி தன்னில் மீன்வடிவ
வசுர ருடலைத் துணிப்பித்து
வாழு மிரவி யுதையத்தை
மறைக்கும் பனையைத் தறிப்பித்து
ஏழு புவியுங் காத்தவர்காண்
உமையே பரதவர்எனமொழிந்தார். (83)

## **உரை**

அதுவன்றியும் இருடி கெற்பமாகி, இரண்டு பிள்ளைகள் மீன் வயிற்றிலே பிறக்க, கங்கா தீர்த்தமாகிய பரதாபுரியில் வந்து சேரக்கண்டு வண்டுவரீசன் என்கின்ற பரதவன், அந்த மீனைப் பிடித்துக்கொல்ல, அதன் வயிற்றிலிருந்த பிள்ளைகளிருவரையும் வாங்கி வளர்த்து, மீனின் வயிற்றிலே தோன்றியதால் 'மச்சேந்திரையன்' என்றும், 'மச்சேந்தி[1]' என்றும் பெயரிட்டு வளர்க்கின்ற செயல்கேட்டு, விராடன் தனக்குப் பிள்ளை யில்லாமையால் பரதாபுரியிலே வந்து வண்டுவரீசனைக் கண்டு "உனக்குப் பிள்ளையாயுள்ள மச்சேந்திரையனை எனக்குப் பிள்ளையாய்த் தரவேணுமென்று (கேட்க, அவனும் தர) வாங்கிக்கொண்டு போய்த் தன் நகர் புகுந்து, 'தன் வமிசத்துப் பிள்ளையாகுக மச்சேந்திரையன்' என்று முழுக்காட்டி, (விராடன் தன் பெயராலுள்ள) விராடவர்கள் நாட்டுக்கு (மச்சேந்திரையன் பெயரால்) மச்சவள நாடென்று பெயர் வழங்குவித்தான்.

*1. மச்சகந்தி.*

பின்பு, பராசரப் பிரம்ம விருடி நிமித்தமாக மச்சேந்தி மாறிப் பரிமளகத்தியாகி வேதவியாசரைப்[1] பயந்தெடுத்த கெந்த வதியைக் குருகுலவமிசத்துச்[2] சந்தனராசனுக்குத் திருமணம் செய்து கொடுத்து, அவன் புத்திரனாலே[3] குருகுல வமிசம் பரிபாலித்தவர்[4] பெருமைதன்னை அளந்தொருவர் ஓதலாமளவோதான் உமையே! என்று உரைத்தார்.

## *விருத்தம்*

பெருநீர் தனக்கு தோணிநமக்
களித்து சொன்ன பிணிக்குதவி
திருவ ழங்கித் தென்னவன்றன்
மகனை வளர்த்து மீண்டுதவி
அருமா மறைசேர் வியாசனைமுன்
பயந்த வணங்கு தனையீந்து
குருமா மரபை நிலையிட்ட
குலங்காண் பரதவர் குலமென்றார். (84)

### உரை

"அன்றியும், இராமன் இராவணனை வென்று கந்தமலைச் சாரலில், தேவநகரிலே நம்மைப் பூசித்து, அந்நகரிலே ஐந்நூற்றொருபத்திரண்டு[5] அந்தணரை அகரமேற்றிப் பின்பு கங்கைக் கரையிலும் பரதவரைக்கொண்டு வந்து சமுத்திரக் கரைதொறும் குடியேற்றுதலால் கரையூர்வர் என்ற நாமமும் பெற்றுப் பவளமலையும், கெங்கையாறும் கோடிநாடும், உம்பர்மாநகரும், மாருதப் புரவியும், வெள்ளை யானையும், கண்டந்தாரும்[1], மகரக்கொடியும், கடல் முரசும், வீரகற்றகர் என்கின்றவர் தேசாங்கமாகப் பெற்றவர்காண்.

---

*1. பராசரர் ஒருநாள் கடலில் படகில் செல்லுங்கால் நல்ல நேரமாக இருந்தது. இந்த நேரத்தில் பிள்ளை பிறந்தால் பேரறிவுள்ளதாக இருக்கும் எனக்கண்ட அவர், அருகில் இருந்த மச்சகந்தியைப் பரிமளகந்தியாக்கிச் சத்தியவதி எனும் பெயரால் அணைந்து, வேதவியாசரைப் பெற்றார். வேதவியாசரின் தாயான மச்சகந்தி சந்தனு மன்னனை மணந்ததால் சந்தனுமா மன்னனின் மைந்தரான வீட்டுமரும், வேதவியாசரும் உடன்பிறந்தாராவர்.*

*2. சந்தனு, 3. பரதன், 4. பரிபாத்தவர், 5. 512.*

மேலும், சத்தியத்துக்கு அரிச்சந்திரனும், பிரமாணத்துக்குக் கண்ணகி நிமித்தமாகத் தன்னுயிர் இழந்த பாண்டியனும், நடுவுக்குக் குழக்கன்றுக்குக் குலக்கன்றை ஊர்ந்த மனுச் சகரவர்த்தியும், கொடைக்கு ஒரு புலவன் ஒருவனது சரீரத்திலே வலது பாரிசம் வேண்ட அவன் ஈர்வாளால் அரிந்து கொடுக்கின்ற காலத்து இடப்பாரிசத்தில் கண்ணீர் ததும்பக்கண்டு, "மிகவும் மிகவும் அச்சமுற்றாய்; ஆதலால் நான் வாங்கேன்!" என்றவன் சொல்ல "வலப்பாரிசம் உனக்குப் பயன்பட்டது; இடப்பாரிசம் ஒருவருக்கும் பயன்படப்பெற்றிலதே! என்று கருதிக் காண கண்ணீர் ததும்பியது!" என்று சொன்ன பரிசையும்[2] கல்விக்கு நம்பிரான் முருகனையும், அருளுக்குப் புருடோத்தமனையும், பொறைக்குப் பூமி தேவியையும், பொருளுக்கு நம்மையும், அறத்துக்கு உன்னையும் ஒப்பவர்களாதலால்,

நண்பு மருளும் (நல்லருளும்)
பொறையும் கொடையும் நல்லறமும்
பண்பு முடைய மரபுகா
ணுமையே பரதவர் மரபென்றார்! (85)

## *விருத்தம்*

பவள[3] மலைவெங் களிறேறும் பரிமா[4]
மகரக் கொடிகோடி நாடும் வெள்ளைத்
தவள மலைவா[5] நகர்கங்கை யாறும்
கடல்முரசுங் கண்டந்தார் தேசாங்கம் நல்கித்
திவள மணித்திரை வாரிக் கரைகடோறும்
திருமால்முன் வைத்தவர்காண் செப்புங் காலை
குவளை விழிமயில் செய்தொழில் வேறன்றிச்
குலமுண்டோ சுக்கிலங் காண்குல மெலாமே. (86)

---

*1. -?, 2.=?, 3. இப்பாடல் தெளிவாக இல்லை, 4.பனிமா என்றுளது, 5.மலைவீரவீர கற்பகாரமாணை என்றுளது.*

**உரை**

இவ்வண்ணமே தம்பிரான் அருளிச்செய்யப் பார்வதியும் கேட்டருளி வணங்கித் தம்பிரானே ! பிறவாதிருப்பதொரு பெருமை அடியேனுக்கு அருளிச்செய்தீரென்றால் எண்பத்தெட்டு கோடி[1] உரோமத் துவாரமும், தினவு எழுந்து சொரியப் புண்ணாகி, ஈ மொய்த்து தீநாற்றம் நாறுகின்ற தோலும், தோளிலும் கையிலும் நூறு[2] மாமிசக் கற்றையும், கழுத்துக்குக் கீழ் நானூற்றறுபது[3] மாமிசக்கற்றையும், கழுத்துக்குமேல் நாற்பது[4] மாமிசக்கற்றையும், ஆக அறுநூறு[5] மாமிசக்கற்றையும்; கழுத்துக்குமேல் ஐம்பத்தாறு[6] பெரு நரம்பும்; கழுத்துக்குக் கீழ் தொள்ளாயிரம்[7] பெரு நரம்பும், கையிலும் காலிலும் ஆயிரத்து ஒருநூற்று முப்பது[8] பெருநரம்பும் ஆக இரண்டாயிரத்தெண்பத்தாறு[9] பெரு நரம்பும்; கையிலும் காலிலும் நூற்று நாற்பது[10] எலும்பும், கழுத்துக்குக் கீழ் நூற்று இருபது[11] எலும்பும், கழுத்துக்கு மேல் நூறு[12] எலும்பும் ஆக முன்னூற்றறுபது[13] எலும்பும்; கையிலும் காலிலும் நூறு[14] சிறு நரம்பும், கழுத்துக்குக்கீழ் எழுநூற்று முப்பது[15] சிறு நரம்பும்; கழுத்துக்குக் மேல் எழுபது[16] சிறு நரம்பும் ஆகத் தொள்ளாயிரம்[17] சிறு நரம்பும்; கழுத்துக்கு மேல்எண்பத்தாறு[18] சந்தும், கழுத்துக்குக்கீழ் எண்பத்து மூன்று[19] சந்தும், கையிலும் காலிலும் அறுபத்தெட்டு[20] சந்தும், ஆக இருநூற்று முப்பத்தேழு[21] சந்தும்; நரம்பில் நாற்பத்தொரு[22] மருவும், எலும்பில் எட்டு[23] மருவும், மாமிசக் கற்றையில் பதினோரு[24] மருவும், சந்தில் இருபத்தேழு[25] மருவும், ஆக எண்பத்தேழு[26] மருவும்; முப்பத்திரண்டு[27] சாண் குடலும்; ஒன்பது[28] துவாரமும்; நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு[29] சுவாசமும் கூடிப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதப்[30] பரிணாமமாகிய காயத்தை எடுத்து, அதற்குள் ளீடாகிய சோத்திரம், தொக்கு, சட்சு. சிங்நுவை, ஆக்கிராணம் என்கின்ற இந்திரியங்கள்[1] ஐந்தும்; சத்த

---

*1. 88,0000000, 2. 100, 3. 460, 4. 40, 5. 600, 6. 56, 7. 900, 8.1130, 9. 2086, 10.140, 11. 120, 12. 100, 13. 360, 14. 100, 15. 730, 16. 70, 17. 900, 18. 86, 19. 83, 20.68, 21.237, 22. 41, 23. 8, 24.11, 25. 27, 26. 87, 27.32, 28. 9, 29, 21600, 30.பூதங்கள்5,*

பரிச ரூப ரச கந்தம் என்னும் புலன்கள்[2] ஐந்தும்; வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்கின்ற கன்மேந்திரியங்கள்[3] ஐந்தும்; வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம்என்கின்ற விடயங்கள் ஐநதும்; மனம் புத்தி ஆங்காரம் சித்தம் என்கின்ற கரணங்கள்[4] நான்கும்; இவை இருபத்து நான்குக்கும் ஆதாரமான அறிவு[5] ஒன்றும் ஆக இருபத்தைந்தும்[6]; இரசம், உதிரம், மாமிசம், மேதை, அத்தி, மச்சை, சுக்கிலம் என்கின்ற தாதுக்கள் ஏழும்; அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், என்கிற கோசங்கள்[7] ஐந்தும் இடை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, சிங்நவை, அலம்(புடை), புருடன், சங்கினி[8], நிருதம்[9] என்கின்ற நாடிகள்[10] பத்தும்; பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்கின்ற வாயுக்கள்[11] பத்தும்; சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்கின்ற அவத்தகைள்[12] ஐந்தும்; அக்கினிமண்டலம், ஆதித்த மண்டலம், சந்திரமண்டலம் என்கின்ற மண்டலம்[13] மூன்றும்; இராசத, தாமத, சாத்துவிகம் என்கின்ற குணங்கள்[14] மூன்றும்; காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் இடும்பை ஆங்காரம் என்கின்ற விகாரங்கள்[15] எட்டும்; மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்கின்ற ஆதாரங்கள்[16] ஆறும்; ஆணவம், மாய்கை, கன்மம் என்கின்ற மலங்கள்[17] மூன்றும்; அத்திவேடணை, புத்திரேடணை, உலகேடணை என்கின்ற ஏடணை[18] மூன்றும்; தூல சூக்குமம் என்கின்ற சரீரம்[19] இரண்டும்; புண்ணியம் பாவம் என்கின்ற வினை[20] இரண்டும் ஆகிய இவை இத்தனையும் அறிகின்ற அறிவு[21] ஒன்றும் ஆகத்தத்துவம் தெண்ணூறும்[22]; மாமாசயம், பக்குவாசயம், மலாசயம்,

---

*1. பொறிகள்-5, 2. புலன்கள்-5, 3. கன்மேந்திரியர்கள்-5, 4.கன்மவிடயம்-5,கரணங்கள்-4, 5. அறிவு-1 ஆக 30, 6. பஞ்சபூதப் பரிணாமத்தை நீக்கி 25 என்று கூறியுள்ளார். பூதங்கள் 5-ம் சேர்ந்து முதற்றத்துவம் 30 என்பர், 7. கோசங்கள்-5, 8. நாடிகள்-10, 9.வாயுக்கள்-10, 10.அவத்தைகள்-5, 11.மண்டலங்கள்-3, 12.குணங்கள்-3, 13.விகாரங்கள்-8 ஆக 44,14.சங்கு என்றுள்ளது, 15.குரு, முன் கூறியது 44, 16.ஆதாரங்கள்-6, 17.மலங்கள்-3, 18. ஏடணை-3, 19.சரீரம்-2, 20.வினை-2, 21.அறிவு-1 ஆக 61. 22.தொண்ணூற்றாறு எனல் வேண்டும். முன்கூறிய முப்பதும், பின்னர் கூறிய அறுபத்தொன்றில் அறிவு இரட்டித்தலால் அறுபதும் ஆகத்தொண்ணூறும் என்றாம். தத்துவங்கள் தொண்ணூற்றாறின் விளக்கம் கடைசிப்பக்கம் காண்க.*

கெற்பாசயம், முத்திறாசயம், சுக்கிலாசயம் என்கின்ற ஆசைகள்[1] ஆறுக்கும் இடவாதி[2] வந்து அபகரித்துப் பத்து வயதிலே வாலிபம் போய், இருபது வயதிலே வளர்ச்சி போய், முப்பது வயதிலே அழகு போய், நாற்பது வயதிலே ஞானம் போய், ஐம்பது வயதிலே தோல் திரங்கி, அறுபது வயதிலே தாது[3] கீழே விழுந்து, எழுபது வயதிலே கண்ணின் பார்வை போய், எண்பது வயதிலே செவி மந்தமாய், தொண்ணூறு வயதிலே இந்திரியங்களெல்லாம் ஒடுங்குகின்ற[4] மானிடப் பிறவியிலே மாதாவினுதரமாகிய மலக்குழியிலே இன்னமும் போய் அடியேன் பிறக்கக் கடவேனோ! என்ன செய்யக் கடவேன்!! தம்பிரானே!!! என்று,

பொருதிகிரித் திருநெடுமால் புவியிடத்துங் காணாத
விருகமலத் தாள்பணிந்தாள் எவ்வுலகு மீன்றளித்தாள். (86)

## *விருத்தம்*

ஐயும் தோலுஞ் சொரிமலமும்
அலமுங் குடருந் தசையெலும்பும்
கையும் காலும் நெடுவளையும்
கட்டு நரம்புங் கருந்தசையும்
பொய்யும் புனைந்த பொதியுடலைப்
புவிமே லெடுக்கக் கடவேனோ
செய்யும் வகையொன் றருள்புரியாய்ச்
சிவனே யின்றென் றுமைபணிந்தாள். (87)

### உரை

இவ்வண்ணம் தம்பிராட்டி விண்ணப்பம் செய்யக்கேட்டுத் திருவுளம் பற்றித் தம்பிரான், "வாராய்! கௌரி!! வெட்ட வெளியன்[5] ஒருவன் ஒரு கிருமியைப்[6]பிடித்து, அதன் உயிரை எடுத்துக்கொண்டு சென்று, ஒரு குகையில் இட்டு, மந்திரபதேசம்

*1. இதனைச் சயம் 5 என்பர். அவையாவன:- அமர்வாசயம், பகிர்வாசயம், சலவாசயம், மலவாசயம், சுக்கிலவாசயம்.* நூலில் முத்திராசயம் சேர்ந்து 6ஆக உள்ளது. 2. இச்சொல் தெளிவில்லை. 3. தாது கீழே வைத்து என்றுள்ளது. 4. கஷெயிக்கின்ற என்றுள்ளது. 5. வெட்டு வெளியன் என்றுளது. பெருந்தேவன் போலும். 6. சிற்றுயிர்; அல்லது நுண்ணுயிர்.

பண்ணிக் குகையைத் திறந்து நாடொறும் தரிசிக்க, அக்கிருமி குருவின் சொரூபம் பெற்ற தன்மை போல, நீ இனி மாமிசக் கற்றையான சரீரத்தை எடுக்கக் கடவையல்லை. பசுமண்கலம் முன்பு நீராலே ஈடுபட்டு, தீயினாலே சூடுபட்டுப் பின்பு நீரை முகந்திருந்த தன்மை போலச் சகளமாகிய காயத்தை உபதேசத்தாலே நிஷ்களமாகப் பெற்றது போல, நீ காயத்துடனே போய், உன்பக்கல் உண்டாகிய காமிகத் துரோகமும்[1] குருத்துரோகமும் தீரும்படிக் கன்மபூமியிலே போய்க் கன்மம் அனுபவித்து வரக்கடவை" என்று அருளிச்செய்து, பின்பு ஒரு வெள்ளித் திருத்தொட்டில் நியமித்து, அத்தொட்டிலின்கண்ணே ஒரு குழவியாக (உமையை) நியமித்து, அணைத்தருளிக்

கோலக் குழலாரைக் குழவியாக்கி நியமித்தார்
குழவித் திங்கள் சடைமுடியார்.

## வகுப்பு

உழையைச் செற்றாளிர் வாள்விழி மங்கையை
உலகத் துக்குயி ரான மடந்தையை
இழையொத் துத்தெரி யாவிடை வஞ்சியை
இதழிப் பொற்றொடை சேர்குழல் மங்கையை
அழகுக் குப்புக லாகிய மங்கையை
அமுதச் சொற்பயில் பாவையை யன்பொடு
குழவிப் பச்சைநன் மானை முனிந்தொரு
குழவிப் பக்குவ மாக முனிந்தனர். (88)

## உரை

இவ்வண்ணம் தம்பிரான், ஒரு குழவியாக நியமித்தருளித் தம்பிராட்டியும் தாமும் முன்பு அணைந்ததால் தம்பிரானுடைய திருமார்பில் இலச்சினை இட்டுவைத்த திருமுலைச் செப்பும், எல்லா உலகங்களுக்கும் உயிர்க்குயிராய் நின்று விளங்காநின்ற தாலிக்கயறும், பிறருக்குத் தோன்றாதபடி நியமித்தருளி. ஒரு மரகத முறியைச் சிற்பத் தொழில் வல்லான் ஒருவன் ஒரு குழவி

1. காமித்துரோகமும் என்றுளது.

வடிவாய் வகுத்தாற்போல் விளங்குகின்ற திருமேனியொளி யுடனே, அத்திருத்தொட்டிலின் கண்ணே பள்ளிகொள்ள வருளுகின்ற காலத்து,

தோலா வென்றிப் புனைசூரன்
தொல்லைப் பொருப்பைத் தொலைத்ததிறல்
வேலா யுதனைப் பயந்தெடுத்தாள்,
வேலை வலையந் தனின்மிதந்தாள் (89)

## வகுப்பு

அருணக் கருளக் கயல்விழி மங்கையை
அருவிக் கடலிட கரியில் வருந்திரு
அமுதத் தொடுசொற் பொருவு கருங்குழல்
அழகுக் கழகொத் தொழில்பொழில் மங்கையை
சுருதித் தொழிலில் எழுஞ்சுடர் தோகையை
தொழில்மெய்த் தவர்சித் துயிலுறை சுந்தரி
தொழில்விட் டிடுமத் துறவில் விளங்கொளி
துரிசற் றுருகிப் பாவி லெழுஞ்சுக
மிருகைக் கமலத் தருள விளங்கொடி
யிதழித் தொடையிற் சுரிகுழல் பிங்கலை
யிசைவிட் டசைபொற் றொடைபுனை யந்தரி
யெழுபோய்ப் பிறவித் துயர்களை பைங்கிளி
செருவிற் புருவத் திருநுத லிந்திரி
சிவனொத் துருகித் தழுவுந றுங்கொடி
திகிரிப் புவியில் பரதவர் தம்புகழ்
திகழப் பரவைத் திரையில் மிதந்தனள். (90)

## *விருத்தம்*

எம்மை யாளும் பெருமானார்
இமைய வரையில்வந் தவதரித்து
அம்மை யாகிய பூதங்கள்
அனைத்து மீன்ற குழவிதன்னை

தெள்ளுந்[1] திரைபாற் கடற்கிடக்குந்
தெய்வ மரகதப் பாவையென
வெள்ளித் திருத்தொட் டிலிற்கிடத்தி
வேலா வலையத்தில் விட்டனாரம். (91)

(உ)ள்ளத் தெழுந்த விருவினையா
லூருங் கருவில் விழுந்தழுந்து
மள்ளப் பிறவித் துயர்தீர
அதியரையன் மரபு சிறந்தோங்க,
வள்ளிக் கொடிசேர் பெருமானை
வாவிக் கமலந் தனிற்பயந்தாள்
வெள்ளித் திருத்தொட் டிலின்மீது
வேலா வலையந் தனின்மிதந்தாள். (92)

வெள்ளி கொண்டு வருத்தபணி
முத்தே விளங்கு மரகதத்தால்
துள்ளிக் கொண்டோர் குழியாகத்
தொழில்செய் சமைத்த வதுபோல
நள்ளிக் கொண்ட திரைக்கடலில்
நடுவே வெள்ளித் தொட்டிலின்மேல்
பள்ளி கொண்டாள் திரைக்கடலில்
பரமனிடப் பாகங்கொள் பசுந்தோகை. (93)

**உரை**

இவ்வாறு தம்பிராட்டி பள்ளிகொண்டருளுகின்ற திருத்தொட்டில் தெற்குத் திக்கு நோக்கிப் போகக் கண்டு. (முன்பு) தாம் முனிந்து பார்வதி கையி(னின்றும்) அன்று வாங்கிப் போட்டருளின கோசத்தை விழுங்கிக்கொண்டு, வடவா முகாக்கினி மத்தியத்திலே நின்று விளையாடுகின்ற மகரத்தைத் திருக்கண் பார்த்தருளி "நீயும் தெற்குத் திக்கு நோக்கி உன்னுடைய மாதாவுடனே போய். அவளுக்குண்டாகிய சாபத்தை நீக்கிப் பின்பு பதினாறு பிறவி எடுப்பாயாக!" என்று அருளிச்செய்ய

*1. எதுகை மாற்றம்.*

கையில் எரியக் கனலேந்துங்
கங்கா தரனைத் தொழுதிறைஞ்சி
வெய்ய வடவைப் பெருங்கனலை
விட்டு மகரம் போந்ததுவாம். (94)

## விருத்தம்

பங்கப் பிறையார் படர்சடையார்
படவி லேறிப் பரதவர்முன்
செங்கைத் தலங்கள் வருந்திடவே
திரைவா ருதியில் வலைவீசத்
துங்கப் படகு[1] பாறுகப்பல்
சொங்கு நாவாய் தலைவிளங்கு[2]
மங்கைத் துறையை நின்றழிக்க
வரைபோல் மகரம் வந்ததுவாம். (95)

## உரை

இப்படியே மகரம், மேரு மலையே ஒரு வடிவுகொண்டு கடலூடே வருவதுபோல, (முன்னாள்) வானவரை இரட்சிப்பது காரணமாகத் தம்மைச் சரவணைப் பொய்கைச் சரோருகப் பொகுட்டில் பெற்றருளிய திருத்தாயார் பள்ளிகொண்டருளு கின்ற திருத்தொட்டிலைப் பீலியின் கண்ணே ஒடுக்கித் தெற்குத்திக்கு நோக்கி (சென்று)

மங்கைப் பதியைக் குருகிப் பங்கயச்
செங்கண் மானபைப் பரதவர் தவஞ்செய்கின்ற
மங்கைத்[3] துறையில் வைத்து வந்தது மகரராசன். (96)

## வகுப்பு

அம்மைப் பொருகளை யைத்திரு நயனியை
யன்பர்க் கருள்புரி பொற்பத வரிவையை
யின்பச் சிறுவத னச்சிலை நுதலியை
வென்றிக் கரிமுக னை(ப்)பெறு தெரிவையை

1. படவு என்றுளது. 2. தலை விழுங்கு என்றுளது. 3. மங்கையை என்றுளது.

உம்பர்க்கருள்முக வர்க்கருள் குமரியை
(உ)ந்திக் கொடிநிகர் சிற்றிடை யம்மையை
வம்புற் றிருள்சுரி மைக்குழல் விமலையை
மங்கைத் துறை(யில்) (விடுத்தது) மகரமே.(97)

## *விருத்தம்*

முதிய திரைவா ருதிதனக்கு
முதல்வ னாகி யரசாளும்
மதியி னியல்சே ரதியரையன்
அரிய தவஞ்செய் திடுந்துறையில்[1]
விதியில் விதியாம் பெருமானார்
மேனி பங்கின் மென்குயிலை
மதிய மனைய நுதல்மானை
வைத்து மகரம் நின்(ற)துவாம். (98)

## உரை

இவ்வண்ணம் தம்மைக் கொண்டுவந்து வைத்த மகரத்தின் பெருமையாலே, கடல் வெள்ளம் கிளர்ந்து, தன் சரீரம் முழுகும்படி பார்க்கவும், அறியானாகி இருந்த, தமக்குப் பிதாவாகிய, புண்ணியஞ் செய்து தவஞ்செய்கின்ற அதியரையன் தவத்தின் பெருமைத் திருவுளத்தடைத்தருளித் திரையுடன் மிதந்து சென்று, தம்முடைய பிதா இருக்கின்ற துறையைச் சேர்ந்தருளி, அவன் கொண்டிருக்கின்ற சமாதி புகுந்து, புத்திர சிநேகத்தாலே குலையும்படி அழுதருளியதைக் கேட்டுச் சிறிதே விழித்து நோக்கித் திருமகளார் பள்ளி கொண்டிருக்கின்ற திருத்தொட்டிலை எடுத்துத் "தம்பிரானுடைய திருவுளம் இப்படி இருப்பதோ!" என்று மிகவும் மகிழ்ச்சியுற்று, வறியவன் (பெரு)நிதியம் பெற்றார்போல கிறகத்தனாகித்[2] திருத் தொட்டிலினின்றும் மகளாரை எடுத்துக்கொண்டு செய்வதேது மறியாமல், சிந்தைமகிழ்ந்து, கூத்தாடித் திருப்பாடகச் சீரடியையும், தம்பிரான் வைத்த இருநாழி நெல்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த திருச்சூடகத் திருக்கை

1. திடத்துறையில், 2. =?

மலரையும் தன் கண்களிலும் முகத்திலும் ஒற்றிக்கொண்டு, தன் பிறவித்துக்கம் தீரும்படியாக உச்சியையும், அகில உலகங் களையும், ஈன்றளித்த திருவயற்றையும், மோந்துகொண்டு, தன் மகளாரைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு, திருமேனி யலையா வண்ணம் மெல்ல நடந்து சென்று, தன் மனைவி வருண வல்லி கையில் கொடுப்ப, அவள் மிகவும் பிரியப்பட்டுத் தன்னுடைய திருமகளார் திருவழகைக்கண்டு கொண்டாடி, ஆனந்தக்களிப் பெய்தி, அதனாலே எல்லா அங்கங்களும் துரிசற உருகித் தன் முலைப்பால் சுரக்கக் கண்டு உச்சியை மோந்து கொண்டு முலைப்பால் அமுது செய்யப் பண்ணி நிற்கக்

கண்ணீரா றுடையானுங் கரிமுகனு மின்றளவு
முண்ணாத முலையம்மை உண்ணுமுலைப் பாலுண்டாள். (99)

## *விருத்தம்*

தருண வல்லி நிகர்மருங்கிற்
சங்கைச் செங்கைத் திங்கணுதல்
வருண வல்லி யெனுமடவா
ளன்பாற் புகழ்ந்து பாராட்டுங்
கருணை வல்லி பரதவர்கோன்
காதல் வல்லி கடல்வல்லி
வருண வல்லி வனமுலைப்பா
லுண்டாள் வரைமா தவவல்லி. (100)

## *அகவல்*

பரதவர் தங்கள் மரபிற்
பாவை யுமையாள் பிறக்கவும்
வரைவுடன் வாழை நடுவார்
வேரிக் கமுகு நிறைப்பார்
புன்னை யசோகம் நிறைப்பார்
பூஞ்செருந் தெங்கு நடுவார்
கன்னிக் கமுகுடன் சூதங்
காரகி லாரம் நடுவார்

வஞ்சியு னாளி கோபம்
மந்தார மெங்கும் திரைப்பார்
கிஞ்சுகம் பாதிரி நாகங்
கேதகை யெங்கும் நடுவார்
கன்னலு மிஞ்சி மஞ்சள்
கதலி கமுகின் குலைகள்
சென்னெல் கொழுந்திரு வேலித்
தெருவெங்கும் பாலித்து வைப்பார்
ஈரப் பலாவும்[1] மாவும்
இருமருங்குஞ் சோலை செய்தார்
நாரத் துடனெலு மிச்சை
நற்குள விஞ்சி நடுவார்
கரகமும் பாளையும் வைப்பார்
கைவிளக் கெங்கும் நிரைப்பார்
விளாகமும் மாலைகள் தூக்கி
மேற்கட்டி யானவி தானிப்பார்
முத்தும் பவளமும் பொன்னும்
முகந்து தெருவில் விரிப்பார்
பத்தி படவெத் திசையும்
பவளப் பலகை நடுவார்
தோரண மெங்கும் நடுவார்
தூபமும் தீபமும் வைப்பார்
பூரண பொற்குடம் வைப்பார்
பொருத்தச் சுருள்கள் நிரைப்பார்
மத்தளி பேரிகை தாளம்
வழங்கிய வீர முரசு
வெத்தி சையும் நின்றதிர
வினமணிச் சங்கு குறிப்பார்
மாட கூடங் களுமன்றும்
மகரக் கொடிகள் நிரைப்பார்
நீட ரங்கும் பொன்முகப்பும்
நித்தம் மாலை நிரைப்பார்

---

*1. பலரவும் என்றுளது.*

கடல்முர செங்கு மதிரக்
கண்டல் நறுந்தார் புனைவார்
அடல்புனை வெள்ளானை நிற்க
வாடக வண்டை எடுப்பார்
கொம்புந்[1] துத்தியுங் கொண்டு
குளிர்புனல் வாரி எறிவார்
புழுகு முகந்து மடவார்
பூங்குழல் மீது சொரிவார்
எழுத வரிய மருங்கு
லிணைக்கு விசிறி[2] விடுவார்
மதவெற் பனைய விளையோர்
மலர்வி சிரிப்பு னல்விட்டு
நுதலிற் றிலதம் வைத்து
நுண்ணிடைக் குந்துணை யாவார்
குன்றி லருவிக ளென்னக்
கொங்கையின் மீது குதிக்க
நின்று விசிறி விடுவார்
நீல விழிபட் டயர்வார்
கங்குலு மீனு மெனவே
கயல்விழி மாதர் குழல்மேல்
செங்கை மலர்கள் வருந்த
சிவிறித் திவலை யிடுவார்
காண்டகு மென்முலை மாதர்
கள்ளக் கலக விழியில்
தூண்டிலுங் கெண்டையு மென்ன
துருத்திப் புனல்விட்டு நிற்பார்
மாதுமை யம்மை பரதவர்
மரபிற் பிறந்த பெருமை
பூதல மெங்கும் அறிய
புரிந்துநெய் யாடல் புரிந்தார். (101)

---

1. இவ்வரிக்கு எதுகை வரி இல்லை. 2. சிவிசிறிவிடுவார் என்றுளது.

## *வெண்பா*

சித்தம் நினைந்து சிவமுளைக்க வேபரதர்
பத்தி மனவயலிற் பாய்ந்ததே - கைத்தலங்கள்
செய்யாள் கரியாள் திருமஞ் சனமாட
நெய்யாட லாடியநன் னீர். (102)

**உரை**

இத்தன்மையாய் உலக மாதாவுக்கு உலக மாதர் முலைப்பால் அமுது செய்வித்து, நெய்யாடல் புரிவித்துப் பின்பு தங்கள் வமிசத்திலுள்ள பரதவரும் மடவாரும் வந்து சோபனங் கூறப் பசு, பூமி, சொர்ணம், வத்திரம், அடிமை, தானியம், எள்ளு, வெண்கலம், கன்னிகை, அன்னம், என்று சொல்லுகின்ற பத்துத் தானமும் மறையவர்க்கும் வறியோர்க்கும் கொடுத்து சிவபூசை, குருபூசை, மாகேசுரபூசை, யாவும் செய்து, தெய்வர் விஷயங்களுக்கும் வேண்டுவன கொடுத்து மருவும் புகழான அதியரையன் வந்து, பரதவர் புடைசூழத் திருமஞ்சன நீராட்டுவித்துச் செல்வமகளார்தனை எடுத்து,

மைநாண் கூந்தல் மயி(ல)னையார்
வந்து பரிவுடன் பாராட்டி
ஐநாண் மருங்குல் தனிலணிந்து
அன்பு டன்தச தானங்களும்
மறையோர் தமக்கும் வறியோர்க்கும்
வருவோர் தமக்கும் மிகவழங்கி
வெறியுஞ் சக்கரஞ் சங்குதண்டு
இலங்கு சிலைவா ளென்றுசொலும்
பஞ்சா யுதமும் திருத்தாளிற்
பைம்பொன் றிருத்தண்டை யுடன்புனைந்து
கொஞ்சா நின்ற சதங்கையுடன்
கோலமா ணிக்கச் சிலம்பணிந்து
எக்காப் புந்தன் காப்பாக
இறைவ னிடங்கரந் தருளும்

பொற்கொடிக் குக்கைக் காப்பணிந்து
(கால்காப் போடு) மைக்காப்புங்
கருணை பொழிவிழி தனிலெழுதிக்
(கோல நுதற்குத் திலதமிட்டு)
அன்பி னுடனே ஆபரணம்
எல்லா மாகந்தனி லலங்கரித்து
(கேளுங் கிளையும் இனிதிருக்கச்)
சதுமா மறையோ ரினிதிருந்து
நாளுங் கோளும் பக்கங்களும்
நன்றா யிட்ட முழுத்தத்திலே
அஞ்சி வானவர் முறையிடவே
அம்மை பாகர் கேட்டிரங்கி
நஞ்சுவாய் வைத்த மணிமிடற்றில்
நளினக் கரம்வைத்த நாயகிக்குச்
சங்குவாய் வைத்துப் பரதவரும்
தானு மாக வினிதிருந்து
திரைமேல் மிதந்து வருதலினால்
சிவனா ருடம்பில் பாதிக்குத்
திரைசேர் மடந்தை யெனக்கருதி
யிட்டா ருமைக்குத் திருநாமம். (103)

## *விருத்தம்*

குரைசேர் கடற்பா ரயன்சேவைக்
குலைய வெள்ளங் கொதித்தெழுந்தாள்
துரைசேர் புகலிப் பரமனுடன்
தோணி தனிலன் றினிதிருந்தோர்
வரைசேர் மடந்தை யனைத்துயிர்க்கும்
மாதர் தமக்கும் மகளாகத்
திரைசேர் மடந்தை யெனக்கருதி
யிட்டா ருமைக்குத் திருநாமம். (104)

**உரை**

இவ்வாறாய் பரமேசுவரிக்குத் '**திரைசேர் மடந்தையார்**' என்று திருநாமம் சாற்றி, மூப்பிமார், தாதிமார், எடுப்பிமார் என்கின்ற பரிசனத்தார் வளர்க்க வளர்ந்தருளிச் சிற்றில், கழங்கு, பந்து , அம்மானை, உந்தி, பொன்னூசல் என்று சொல்லுகின்ற விளையாட்டுகளைத் தாம் அறியாள்போல, தோழிமாரான வால கன்னியர்கள் காட்ட வளர்ந்து அருளுவதாகக் கற்று விளையாடி வருகின்ற காலத்துப் பரமேசுவரன் திருநாமங்களும், திருவஞ்செழுத்தும் அல்லது வேறொன்றும் சொல்லாராய்த் தமக்குப் பிதாவாகிய அதியரையன் பேறும், வருணவல்லி புண்ணியமும், பரதவர் வமிசமும், பரமேசுவரன் திருநாமம் உள்ளளவும் வளருவதாக வளர்ந்தருளி,

அயனெடுமால் சந்திரர்சூ ரியர்அமரர் வயறுபுக
வயதுபுகா வுருவுடையாள் வயதிரண் டாறுபுக்காள். (105)

***விருத்தம்***

காரினிற் சிறந்த மாலுங்
கமலனுங் காணா மெய்யர்
பாரினிற் பலரும் காணப்
பரதவ னாகித் தோன்றப்
போரினிற் சுடர்போல் வென்றிப்
புதல்வ னாமக ரத்தொடும்
வாரியிற் றிரையில் வந்தாள்
வயதுபனி ரெண்டு புக்காள். (106)

**உரை**

இத்தகைமையாய் வளர்ந்து வருகின்ற தம்பிராட்டி எழுந்தருளி வந்த அன்று முதலாக மகரம் குடகடலினின்றும்,

குணகடலில் பாய்ந்தும், குணகடலிலிருந்தும் குடகடலில் பாய்ந்தும், குடகடலிலிருந்து வடகடலில் பாய்ந்தும், வடகடலினின்றும் தென்கடலில் பாய்ந்தும், தென்கடலிலிருந்து மேல் கடலில் பாய்ந்தும், மேலுள்ள ஏழு உலகங்களும்[1] ஊடுருவித் தாவி ஏழு கடல்களின்கண் ணியங்குகின்ற பாறு, படவு, கப்பல், சொங்கு, நாவாய் எனப்படும் மரக்கலன்களையும், தோணி முதலிய சிற்றுருக்களையும் தன் வாலினாலேயடித்து, உழக்கி ஒரு சமுத்திரத்தினின்றும் ஒரு சமுத்திரத்திலே பாயும் அளவுக்கு எழுந்திருந்து, பாய்ந்தெழுந்த சமுத்திரம் வற்றியும், சென்று புகுந்த சமுத்திரம் பெருகியும், ஆனையை விழுங்கும் திமிங்கிலமும், அதனை விழுங்கும் திமிங்கிலமும் என்று பெயருடைய மச்சங்கள் எல்லாம் மகரத்தின் வாலாலே அடியுண்டு சமுத்திரங்கள் தோறும் செத்து மிதப்பச் சமுத்திரங்களைக் குறுக்கறுத்துப் புடைபோதில் திசைக்குத்திசை நூற்றுக்காத வழி வெள்ளம் பெருகாநின்றது.

இவ்வாறு மகரம் விளையாடுதல் காரணமாகச் சமுத்திரத்தில் வலையிரக்கி மீன் பிடிக்கவும், முத்துக்குளிக்கவும், சங்கு குளிக்கவும், பாறுபடவு ஓட்டவும் ஒண்ணாதாகி, பரதவரெல்லாரும் வறுமையெய்தி, அனைவருங் குவிந்து, தங்களுக்குத் தலைவராயிருக்கின்ற அதியரையனிடம் தங்கள் வறுமைகளையும், செயற்பாடுகளையும் சொல்ல, அதனைக் கேட்ட அதியரையனும் மிகவும் துயரமுற்றுப் பரமேசுவரன் திருவடித் தாமரைகளை நினைந்து 'தம்பிரானே! இப்படி ஒரு மகரம் நின்று துன்பம் செய்கிறது. இதற்குமேல் என்ன செய்யக் கடவேன்' என்று பிதற்றிப் பரதவர் அனைவரையும் பார்த்து "வாரீர் ! பரதவரே !! யாவன் ஒருவன் இம்மகரத்தை, யாதொரு சூழ்ச்சியால் பிடித்தவனுக்கு என் மகள் திரைசேர் மடந்தையைத் திருமணம் செய்துகொடுக்கக் கடவேன் !!!" என்று முரசறைவித்துத் தங்கள் வறுமையுரைத்த பரதவர்க்கும் வேண்டுவன கொடுத்து, மற்றும் தங்கள் மரபிலுள்ளாரெல்லாம் வந்து வறுமை சொல்ல, வேண்டுமிருநிதியம் நல்கியிருந்தான்; பரதவர்கோன்.

---

*1. மேகங்களும் எனல் பொருந்தும்.*

## *விருத்தம்*

புகவெஞ் சினைவெங் களியானை
புலவற் கருளும் பரதவர்கோன்
பகருங் கிளைஞர் மொழிகேட்டுப்
பகர்ந்து நெஞ்சால் மிகவிரங்கிச்
சிகரம் புனையும் பருவரைபோற்
றிரைவா ருதியிற் றிரிகின்ற
மகரம் பிடிக்க வ(ல்லவர்க்)கென்
மகளைத் தருவே னெனமொழிந்தான். (107)

### உரை

இத்தன்மைத்தாய் அதியரையன் சொல்லக் கேட்டு, பரதவர் எல்லோரும் (கூடி) "கேளாய் ! சமுத்திரராசனே ! ! பூமியில் பிறந்தவர் ஒருவ(ரால்) இம்மகரத்தைப் பிடிக்க வொண்ணாது. நமக்குப் பூருவமாயுள்ள நேயநி(யமங்கள்) கடவுளாகி இப்பரதவர் வமிசத்தினைக் காக்கக் கடவதான வருணராசன், நமது வறுமை கண்டு சற்றும் மனமிரங்கவில்லை என்றால் இத்தேயத்தினின்றும் வேறொரு தேசம் போமல்லது மற்றிதற்கு ஒருதீர்வும் இல்லை" என்று சொல்லக்கேட்டுப் பரதவராசனும் "வாரீர் ! பரதவரே !! சரீரமும் செல்வமும் நிலையுள்ளதல்ல !!! யானையேறித் தவளச் சக்கரம் நிழற்றச் சக்கரவர்த்தியாகி இருந்தவர்கள் இரணபூமியிலே புரண்டு, தலை வேறு உடல் வேறாகி வீழினும் வீழ்வர்.

அது எப்படியெனில் முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளும் தன்னேவல் செய்யத்தக்க வென்றியையும், பரமேசுவரனுக்குச் சிவாலயமாயிருந் துள்ள திருக்கயிலாயத் திருமலையை எடுக்கத்தக்க(வாகு) பெலத்தினையுமுடைய இராவணன் தன்னுடைய தலைபத்தும் துணிபட்டுச் சமரபூமியிலே கிடந்தான்.

மேலும் (பெரியதொரு மாளிகையில்) பஞ்ச[1] சயனத்திற் கிடந்த(வர்கள் இறக்க) ஈ மொய்த்துத் துற்கெந்தம் நாறுமுடம்பை ஈமத்தீக்கொளுத்தி எரிய(விட மரக்)கட்டைச் சயனத்திற் கிடத்துவார்கள்.

அல்லாமலும், தக்கோலம், சாதிக்காய், ஏலம், இலவங்கம், கற்பூரம் (ஆகிய) பஞ்ச வாசங்களும், கத்தூரி, புனுகு, சவ்வாது, சாந்து, பன்னீர், குங்குமம் என்கின்ற களபம் பூசி, மற்றுமுள்ள கெந்த வர்க்கங்களும் இதழித்தொடையும் (அணிந்து, எண்ணெய், தைலம் முதலியவைகளை) அரம்பை, திலோத்தமை, உருப்பசி என்கின்ற (தேவ மகளிரால் பூசி வகிர்ந்து பின்னித் தாது மணங்களால்) பொருந்திய மயிரையுடைய தலையை நாயும், நரியும் கவ்விக் கிடக்கினும் கிடக்கும்.

அதுவன்றியும், பலகைக்கருவி, கஞ்சக்கருவி[2], தோற் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி என்கின்ற பஞ்ச வாத்தியங்களும்[3], முழங்க மணக்கோலம் செய்கின்ற சரீரம், மீண்டும் அந்தக் காவணத்தின்[4] கீழேயே, அந்தப் பல்லியமும் நீங்கிப்[5] பிணப்பறையறைத் தன் மனைவியுடைய மந்திரக் கோடியே கோடியாகினும் ஆகும். இது கேள்வியல்ல; யாவரும் கண்டதாயிற்று.

மேலும், பூமி, அந்தரம், சுவர்க்கம், (என்னும்) மூன்றும், தன் ஆணை நடக்கவிருக்கும் பெருமையை உடையவர்கள், நினைவு அற்று, ஒரு நிமை[6] மாத்திரைப் பொழுதில் இறந்து விடுவார்கள்.

அது எவ்வண்ணமோவெனில் சுரர், நரர், விலங்கு, பறவை முதலானவைகளாலும், ஆயுதங்களாலும் வதைபடாத வரத்தினையும், பூமியினும், ஆகாயத்தினும் படாததொரு நியமத்தினையும் உடைய இரணியன், ஒரு சிறுமாத்திரையளவில்

---

***1. ஐந்தாலாகிய மெத்தை அவை: அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, மயிற்றூவி, வெண்பஞ்சு, 2. தாளம் முதலிய வெண்கல வாத்தியம், 3. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சக்கருவி, 4. பந்தல், 5. முழங்க என்றுளது, 6. இமை.***

சரீரம் பிளப்புண்டு வேறுபடக் கிடந்தான் என்றால், இந்த வழுக்குடல்தான் எடுத்தார் தம்மில்லிருந்த (பெருங்)குன்றாய் நின்ற பொருளை நினைத்து உள்ளத்துண்டென்றிரு மென்றார்.

## விருத்தம்

அளவிடு1 மளவோ தோன்றி
யழிந்ததம் புவியின் மாக்கள்
அளவிடு மளவோ தோன்றி
யழிந்தமால் பிரம ரென்றால்
அளவிடு மளவோ விந்த
வாக்கையி னளவே யென்றார். (108)

நாட்டை முழுதும் புரந்தாலும்
நாவாய் கப்பல் விட்டாலும்
வீட்டை யிரவு முடித்தாலும்[2]
வேட்கை சிறிதும் விடாதிருந்தால்
ஓட்டை தனிலே யோரேற்று
ஒழிவ தல்லா லுயிர்விடுநாள்
கோட்டை யுளதோ நாங்கூட்டிக்
கொண்டு போவ தெனமொழிந்தார். (109)

### உரை

இத்தன்மையாய் அதியரையன் மீண்டும் பரதவரை நோக்கி "வாரீர்! பரதவரே!! கல்லுக்குட் புகுந்திருக்கின்ற தேரைக்குச் சென்று சிலர் உணவளித்தாருளரோ? அதுவன்றியும், அன்றொரு நாள் ஒரு தவசி பிச்சைக்குச் சென்றவிடத்து, வீட்டில் அம்மை, 'காலமல்ல' என்று சொல்லக்கேட்டுத் திட்டைக் குடியிலே திருக்கோயில் உள்ளே புகுந்து சமாதி அடைந்திருக்கின்ற காலத்து, மண்மாரி பெய்து வண்டலிட்டுத் திருக்கோயில் மறைந்துபோய் எண்ணாயிரத்தாண்டு சென்ற பின்பு, (ஒருநாள்) சோழன் ஏறிச்சென்ற யானை, தவசியிருப்பதை (தனது

*1. இவ்விருத்தத்தில் 3 வரிகளே உள்ளன. 2. முறித்தாலும் என்றுளது.*

ஆற்றலால்) கண்டு, அந்தத் தெய்வத்தலத்தின் (வழிச்) செல்லாமல் பின்பறியக்கண்டு, சோழன் ஐயமுற்று நின்று, அவ்விடத்தை வெட்டுவித்து, மண்ணை அகற்றித் திருக்கோயில் கண்டு, திருக்காப்பு (நீ)க்கிப் பார்க்கின்ற காலத்துத் தவசியைக் கண்டு சொற்களாலே வணங்கி (அடிபணிந்து நிற்கச்) சிறிதே விழித்து நோக்கி "அப்பா ! காலமானதோ ? " என்ற தவசிக்குச் சென்று உணவளித்தார் உளரோ ?

அல்லாமலும், தாய்வயிற்றில் நாம் இருக்கின்ற நாள், நமக்குச் சிலர் உணவளித்தார் உளரோ ? ஆகையால் "தம்பிரான் திருவுளம் இப்படிக்காண்" என்று சொன்னான்.

**அகவல்**

அம்மையு மப்பனு மாகி யிருந்து
நன்மையு மனமும் தனித்தனி யிருந்து
மோகப் பெருங்கடல் முகந்தெழுந் தலமர
வேகப் பெருங்கடல் விந்துவை வருட
வீரமுந் திமிர்ப்பு மென்றெழு குணத்தால்
சார வந்து தண்டுளி யதனால்
இன்புறச் சேர மண்ணிருஞ் சோறாக்கி
அன்புறத் திரட்டி அடிமண் குறித்துக்
கால மறிந்து கால்கள் நாட்டி
மேலொரு நெடுவளை விளங்கிட வைத்துக்
கையது நிறுத்தி மெய்யுற முட்டித்
துய்யவெள் ளெலும்புந் தொழிலகம் பரப்பி
நரம்பெனுங் கயிற்றா லுரம்பெறக் கட்டி
நிரம்பிய சொரிமலம் நிலைபெறத் தோய்ந்து
புன்மணக் கற்றை பொருந்தமெய் மேய்ந்து
மணம்பெற வன்றோல் வன்சாந் திட்டுக்
காணும் வாசலும் கேட்கும் வாசலும்
பூணும் வாசலும் புனைந்தறி வாசலும்
இன்ப வாசலும் இரத வாசலும்
சோரி[1] வாசலும் தொகைபட வகுத்து

---

*1. இதுமுதல் 4 வரிகள், எதுகை, சொற்பொருள் சரியில்லை.*

பிறிழ யின்பம் பிணிமூப்பு சாக்காடு
கூறிய வாறுங் குணத்தள வமைத்து
முக்கொண் டுடம்பியக் கின்றிக் கொளுத்தி
கோளொான் பது(வு) மனுபவிக் கும்படி
சீயவ னாகிய வாயுவை யியக்கி
மேவிய பறிகெட வேண்டுவ தருந்தி
ஒன்பது மாதம் அன்புடன் வளர்த்து
துன்பமும் பயமும் தொடரமெய் வருந்தி
அன்னைநோ வொழிந்து (அன்புடன்) நம்மை
பயந்து விட்ட மின்னரு
ளிறைவ னாருக் கிலையோ வென்றான். (110)

## *விருத்தம்*

மாதா வுதரந் தனிலிருத்து
அளந்தங் கன்ன மருத்தியது
நாதா வெனவே யறிவுபெற்ற
நன்மை யருந்தா திருக்குமதோ !
தாதார் கொன்றை மணம்வீசுந்
தழல்வா யரவு புரிந்தாடத்
தேதா வெனவண் டிசைபாடுஞ்
செம்பொற் சடையார் திருவுளமே ! (111)

## உரை

இப்படியாக அதியரையன் பரதவரை நோக்கிப் பின்னும் சொல்லுவான்:

## அகவல்

பரதவிக் கின்றதென் பரதவ ரேநீர்
பரதவித் தால்வரும் பயன்சில வுளதோ
வருந்தினும் வாராது வாராது (காணும்)
வருந்தா திருப்பினும் வருமது வந்துறும்
வறுமையுற் றிருந்து வருந்தித் திரிபவர்

அறைகடற் புவியை ஆளினும் ஆள்வர்
பொற்றாள் புனைந்து பொருகரி யூர்ந்தவர்
நற்றாள் வருந்த நடப்பினும் நடப்பர்
கதிர்மறி வீரக் கழல்புனை காலிற்
புதுமுது விலங்கு புனையினும் புனைவர்
பஞ்ச சயனத்து வாழ்ந்திருந் (தவர்கள்)
பஞ்ச நீர்க்கூழ் பருகினும் பருகுவர்
பாக்கிலை பளிதம்[1] பலர்க்கு மிட்டவர்
வாய்க்கிலை யின்றி வருந்தினும் வருந்துவர்
சேவைகள் பிறர்தாம் செய்யவீற் றிருந்தவர்
சேவைகள் பிறர்க்குச் செய்யினும் செய்குவர்
எனக்கிடு மென்றுவந் திரந்தவர்க் கீந்தார்
எனக்கிடு மென்றுசென் றிரப்பினு மிரப்பர்
எல்லா வாடையும் புனைந்துவீற் றிருந்தவர்
பொல்லாச் சீலை புனைகிலும் புனைவர்
அளிமொய்த் திடுமல ரணையிற் கிடந்தவர்
கிளர்கற் (ற)றையினில் கிடப்பினும் கிடப்பர்
மாநக ருறைந்(தவர்) வரிபுலி யுறையும்
கானக மெய்திக் கழியினும் கழிப்பர்
கானகங் கன்னலுஞ் சென்னெலும் விளையும்
மாநக ராகி வழங்கிலும் வழங்கும். (112)

ஆதலாற் செல்வம் ஆற்றிற்
பெருக்கு நிலைமை யன்றோ
ஆழி சூழ்ந்த நீதிமா
நிலத்திற்கு நிலைநின்ற தெனமொழிந்தார். (113)

## *விருத்தம்*

இருநிதி தேடி வருந்தா திருந்தவர்
இற்றைக் கென்செய்வோமென் றிரப்பினு மிரப்பர்
ஒருபொரு ளில்லாம லிரப்பவர் வேலை
யுல(கெலா) முடையா ராயினு மாவார்

*1. பளிதம் - பாளிதம் - சோறு.*

பொருகரி யேறி வருபவ ரிருதாள்
போத நடந்து திரிகினும் திரிவர்
திருவளர் பாதம் மாறிநின் றாடும்
செல்வனார் திருவுளச் செயல்தெரி யாதோ! (114)

ஓட[1] மிட்டடம் அடிச்சுடி லாகில்பின்
னோட மோடினு மோடும்
மாட மண்டப மிடிந்துபா ழாகிப்பின்
மாட மாகிலு மாகும்
நாடும் வாவியு மழிந்துபா ழாகிப்பின்
நாட தாகிலு மாகும்
தேடி மாலயன் வருந்தநின் றாடுஞ்செல்வன்
திருவுளச் செயல்தெரி யாதோ ! (115)

அய்ய மேற்பவர் அறப்பெருஞ் செல்வராய்
அவனி யாளினு மாள்வர்
வைய்ய மாள்பவர் வறிஞராய்ப் பிறர்மனை
வந்து நிற்கினும் நிற்பர்
வெய்ய வீரர்தான்[2] எளியருக் கெளியராய்
வினையில் வீழினும் வீழ்வர்
செய்ய மேனி வெண்ணீ றணிந்த
வேடர்திரு வுளந்தெரி யாதோ ! (116)

**உரை**

இவ்வாறே அதியரையன் காரியம் சொல்லிப் பரதவரை நோக்கி "வாரீர் ! பரதவரே !! நாம் முன்னைச் சென்மத்தில் செய்த புண்ணிய பாவங்களுக் கீடாய் பிரமன் நமக்குப் பேரிழி[3], இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்று சொல்லுகின்ற ஆறும் [4] கோபம் கொள்ளும்போது நியமித்துவிட்டதாய் இருக்கும். நாம் வேறொரு தேசத்தில் போனால் அந்நிய(ம)ம் நம்மைக் கைவிட்டு இங்கே நிற்குமோ ? அது வொழிந்து இப்படியே நம்மை விரோதிப்பதாக வந்த மகரம், நாம் போகின்ற தேசத்தில் வாராதொழிந்திடுமோ ?

---

*1. இவ்வரி தெளிவில்லை. 2. 'வீரர் முன்' என்றுளது. 3.-?. 4.ஐந்துதான் உளது.*

கொன்றை மணக்குஞ் சடாமகுடக்
கோதை பாக ரல்லாது
நன்று தனக்கும் தீதுக்கும்
நாமே கடவோ" மெனமொழிந்தார். (117)

## விருத்தம்

மதியா லுண்டாம் வாழ்வெனும்
மதியி லாதார்க் கிலையென்றும்
விதியா கமத்தும் புராணத்து
மில்லை காணும் பரதவரே
கதியா மானை யிரப்பித்துங்
கரிய மானைக் கானில்விட்டும்
விதியால் வந்த வல்வினையை
வெல்ல லாமோ வெனமொழிந்தார். (118)

போற்றிப் பணிவார் பிறப்பறுக்கும்
பூவைப் பாகர் திருவருளால்
தோற்றிப் பயன்கொண் டிருநாளுந்
தோற்ற நாளும் தோன்றுகிலீர்
ஆற்றுப் பெருக்கின் செய(ல)ன்றோ
ஆர்க்கு நிலைநின் றதுசெல்வம்
காற்றைக்[1] கா(க்)கற் றிடிலன்றோ
காக்க லாவ தெனமொழிந்தார். (119)

### உரை

இத்தன்மைத்தாய் அதியரையன் பரதவர்களைப் பார்த்து "வாரீர் ! பரதவரே!! சரீரம் எடுத்தார் ஒருவருக்குப் பிரம்மப் படைப்பைத் தப்பவொண்ணாது. பரமேசுவரனுடைய அருளுடையவர்க்கே தப்ப இயலும்.

அது எவ்வண்ணமோவெனில் மார்க்கண்டேனுக்குப் பதினாறு வயது என்று பிரம்மா விதித்துப் படைத்தார். அப்படியே பதினாறு வயது சென்றவுடன் அவனது உயிரைக் (கொடுபோகக்)

---

*1. இவ்வரி தெளிவிலது.*

காலன் வந்து குருகக்கண்டு, பயந்து, ஓடிச்சென்று, பரமசிவனுடைய திருப்பூக்குடலையில் ஒதுங்கக்கண்டு, தம்பிரான் காலனைக் காலால் உதைக்க, ஒரு காலத்திலும் இலையமில்லாத[1] பெருமையைப் பெற்று, (என்றும் பதினாறு வயது உடையவனாய்) அகத்தியன், புலத்தியன், அங்கிஷன், கவுதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டேயன் என்று எண்ணுகின்ற ஏழு[2] இருடிகளில் ஒருவனாயிருந்து (சிறந்தான்).

அன்றியும் யாகத்தின் மிக்கதொரு புண்ணியமில்லை. அது பாவமாக விளைந்தது எவ்வண்ணமோவெனில், மரீசி, வசிட்டன், அகத்தியன், ஆங்கீரசன், புலத்தியன், புலகன், கிருது, பிருகு, தட்சன், நாரதன் என்கின்ற பத்துப்[3] பிரசாபதிகளில்[4] தட்சப் பிரசாபதி என்கின்ற மகாவிருடி பிரம்ம பதத்தினைப் பெற வானோரைக் கருதிப் பரமேசுவரனைக் கருதாமல் யாகம் செய்யத் தன்னுடைய தலையிழந்து ஆட்டுத்தலையினைப் பெற்றான்.

அல்லாமலும் பிரம்மகத்தியில் மிக்கதொரு பாவமில்லை. அது புண்ணியமாய் விளைந்தது. அது எவ்வாறெனில் கெசபட்டன்[5] புத்திரன் தண்டேசுரன்[6] மணலை சிவலிங்கமாக்கு வித்து கைபலமாகப் பசுவின் பாலைக் கறந்து (சிவலிங்கத்தை) ஆடியருளப்பண்ணக் கண்டு, அவன் தந்தையாகிய கெசபட்டன் கோபித்துக்கொண்டு தன் கால்களால் (அச்சிவலிங்கத்தினை) அழிக்கக் கண்டு, (வாளெடுத்துத்) தந்தையின் கால்களைத் துணிய, (அதனால்) கீழே விழுந்த (கெசபட்டன்) இது ஏன்

*1. அழிவில்லாத, 2. சத்தவிருடிகள்: அத்திரி, ஆங்கீரசன், கெளதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன் என்பர் ஒரு சாரார். மரீசி, ஆங்கீரசன், புலவகன், வசிட்டன், அத்திரி, புலத்தியன், கிருது என்பர் வேறொரு சாரார். காசிபன், அத்திரி, பரத்துவாசன், விசுவாமித்திரன், கெளதமன், சமதக்கினி, வசிட்டன் என்பர் மேலுமொரு சாரார். இவற்றுள் இரண்டாம் குழுவைச் சேர்ந்தது இவ்வேழு இருடிகள் எனும் குழு. 3.தேசப்பபிரதேசங்களில் என்றுளது. (தசப்பிரஜாபதிகளில் போலும்) 4.மக்களைப் பெற்றுப் பெருக்குகின்றவர்கள். 5. வேறு பெயர் எச்சதத்தன். 6.தண்டேசுரன் சோழமண்டலத்தில் திருச்சேய்ஞலூரில் அந்தணர் குலத்தில் இற்றைக்கு 4500 ஆண்டுகட்குமுன் எச்சதத்தனுக்கும் பவித்திரைக்கும் மகனாகப் பிறந்து, விசாரசருமர் என்னும் பெயர் பூண்டவர். பின்னர் சிவபெருமானால் அனைத்து நாம் உண்ட கலனும், உடுப்பனவும், குடுவனவும், உனக்காகச் சண்டீசனுமாம் பதந்தந்தோம் எனச் சண்டீசப்பதம் பெற்றவர். இதனைப் பெரியபுராணத்துட் காண்க.*

மகனே? என்று கேட்ட வாயிலும் வெட்டத் தம்பிரானுடைய அருள் பெற்று உருத்திரபதம் பெற்றான். ஆதலால் நாம் பாவம் செய்தோமாகிலும் சிவனருள் உண்டானால் புண்ணியமாய் விளையும்.

மருவும் நீறும் அஞ்செழுத்தும்
மறவா திருந்தால் பரதவரே
பரவை யால முண்டவர்தாம்
பாழில் தள்ளா ரெனமொழிந்தார். (120)

## *விருத்தம்*

நினைத்த தொன்றாய் முடிவதுதான்
நினையா தொன்றா மன்றியே
நினைத்த தொன்றா யினுமாகும்
நினைத்தே யிரும்நீர் பரதவரே
நினைத்த வடியா ருடல்குளிர
நினையார் (த)ாங்கள் நீறாக
நினைத்து நகையார்[1] நினையொருவர்
நினைத்த தளவோ வெனமொழிந்தார். (121)

பாரா தெங்கும் நீறணிந்து
பாத கமலந் தனைப்பார்த்துப்
பேரா வகையஞ் செழுத்தோதிப்
பேசா திரும்நீர் பரதவரே
வாரார் கால விடமுண்டு
வானோர்க் கமுத மளித்தவர்தாம்
தீரா ராகி லித்துயரம்
தீர்ப்பா ருளரோ சிலரென்றார். (122)

காற்கடல்நீர் காசினியில் கலந்தெழுநாள் காழிநகர்
சேற்றிருந்த தோணிதனிற் சிலரிருக்க உடனிருந்தோம்
போற்கடலில் செங்கனகப் புது(மீனால்)[2] பூசித்தோம்
பாற்றிருநீர் சிவன்கருணைப் பரதவரே யெனமொழிந்தார். (123)

---

*1. நகைப்பார் எனலும் பொருந்தும். 2. அதிபத்த நாயனார் வரலாறு. 19-ம் பக்கம் காண்க.*

சுருக்க மாட்டேன் புலனைத்தும்
　　சொல்ல மாட்டே னெழுத்தஞ்சம்
பெருக்க மாட்டேன் சிவஞானம்
　　பேச மாட்டேன் திருவேடம்
உருக்க மாட்டேன் வன்னெஞ்சு
　　உள்ள படியே யுளதென்று
இருக்க மாட்டேன் சிவனேயிங்
　　கேதுக் கடியேன் பிறந்தேனே ! (124)

**உரை**

இப்பால் தம்பிரான் திருக்கயிலாயத் திருமலையில் திருவோலக்கம் கொண்டு[1] இனிது எழுந்தருளியிருக்கின்ற காலத்து, திருநந்திதேவரைத் திருக்கண் சாத்தியருளி "வாராய் ! நந்தி !! நம்முடைய இடப்பாகமான மரகத நிற ஒளி போய் ஒரு நிறமானபடியினாலே மிகவும் வறியதாய் இரா நின்றது. (அவ்விடப்பாகப்) பார்வதி நம்முடைய சாபத்தினாலே[2] போய் அதியரையனுக்கு மகளாகி, வளர்ந்து, பக்குவதையாகி யிருக்கிறாள். அவளைத் திருமணம் செய்துகொள்ளுவதாகப் போகின்றோம். நீயும் நம்முடனே போதுவாயாக !" என்று திருவாய்மலர்ந்தருளி

மருக்கொண்ட குழலாளை மணஞ்செய்ய மண்மீது
திருத்தொண்டர் வேடமாகிச் செல்குவ மெனமொழிந்தார். (125)

***விருத்தம்***

சூடும் பிறையுங் கரந்தளித்துங்
　　கமழு மழுமான் கரந்தருளி
ஆடும் பணியுங் கரந்த(ரு)ளி
　　ஆறுஞ் சடையுங் கரந்தருளி
நீடுஞ் சிலைவேள் தனையெரித்த
　　நெற்றி நயனங் கரந்தருளி
வேடம் புனையத் தொடங்கினராம்
　　வேடர்[3] தொழவீ டருள் செய்வார். (126)

*1. குலைந்து என்றுளது. 2.ஏவலினாலே என்றுளது. 3.வேடந்தொழ என்றுளது.*

## உரை

பகீரதன் தன் தவபலத்தால் சன்னதிப்பட்ட[1] கங்கை[2] தன்னைப் பரமேசுவரன் 'தரிக்கின்றே' னென்ற சொற்கேட்டுக் காலாக்கினிபோலக் கோபித்து மிக்க வேகத்துடனே[3] அறுபது[4] நூல்வட்டம் ஒரு தாரையாகக் கொண்டு, அப்படி ஆயிரமுகமாக வகுத்துப் பாதலத்துண்டாகிய சத்த லோகங்களும் ஊடுருவும் படிக் கறுத்துக்கொண்டு குதித்துச் செல்லத் தம்பிரா(ன் தன்) னுடைய எட்டுத் திருச்சடையிலொரு திருச்சடை(யை) திருச்சடையில ஒதுங்கினோமாகவொண்ணாது" என்று பூமியிற் குதிப்பதாக அநேகம் காலம் குறுக்கறுத்து ஓடிப்பார்த்துத் திருச்சடைக்கொரு முடிவு காணாமல் அநேகங் காலம் நீளத்திலே ஓடிப்பார்த்தும் (காணாத தன்மையினையுடைய) தொங்கி அலைகின்ற திருச்சடை

## அகவல்

ஆயிரவாய்ப் பாம்புகளும் வளமுதிருந் தலையோடுந்
தீயெரியுஞ் சுடுகாடுஞ் சிறுபிறையும் வெள்ளெருக்கும்
கொக்கிறகும் நறுங்கொன்றைக் கூவிளமுஞ் சிறுபூளை
மிக்கமலர் மாலைகளும் விளங்குநவ ரெத்தினமும்
பத்தரிடும் பத்திரியும் பாடகப்பங் கயமணமும்
சுத்தமிகுங் கழுநீரும் தூளியெழுந் திருநீறும்
எனையாளுஞ் சிலைவேட னிருதாளிற் றிருச்செருப்பும்
கனிவாயின் மஞ்சனமும் கமழ்கின்ற திருவழகும்
மாலதியுந் தாமரையும் மல்லிகையும் பாதிரியும்
நீலமும்பொற் செண்பகமும் நெய்தலுமொய்த்
திலங்குசடை
உம்பரெலா மமுதுண்ண வுவரிவிடந் தனையுண்ட
எம்பெருமான் றிருச்சடைதா னிருக்குமாறே
யியம்பலுற்றேன்.(127)

---

1. எதிர்ப்பட்ட. 2. சிறிதேவை என்றுளது. 3. கேபத்துடனே என்றுளது. 4. ஒருபல என்றுளது.

### ஓரோர் செஞ்சடை

பத்தி துத்திக் கோத்துக் கணபண
பக்கச் சுத்தப் பருமணி வெயிலெழ
மெத்தக் கதித்துச் சுத்தக் கடுவிடம்
விட்டுப் பற்றிச் செற்றுக் கருதிய
வுட்கிடப் பைம்பொற் செங்கட் கனல்சொரி
வாயிர வாயுட் காயிர வாயா
லொக்கப் புக்குச் சற்பக் கடலென
வோடி மடங்கி மிடைந்து கிடந்தது. (128)

### ஓரோர் செஞ்சடை

இந்த நெடுங்கடல் கண்டவர் தங்கள்மெய்
யன்பு நினைந்தவ ரண்டர் பதம்பெற
அந்தர மும்புவி யெங்கும் நடுங்கிட
அதிர்ந்து பரந்து முழங்கி மிகுந்து
வந்தெதிர் பொங்கி நிறைந்துட னும்பர்கள்
புந்தி நடுங்கி வருந்திட வந்தெழு
கங்கை நிறைந்து சொரிந்து மறைந்து
இருகரை புரளும் படிபொருது கிடந்தது. (129)

### ஓரோர் செஞ்சடை

அஞ்சு புலன்களும் ஒன்ற வளைந்திட்டு
ஆசையும் மோகமும் வேகமும் விட்டு
நெஞ்சை வணங்கித் தஞ்ச மளிக்கும்
நீதி யெழுந்தோ ரஞ்சையும் வைத்து
(மின்)புட னொக்கப் பண்புட னாளு
மன்புடன் பூணு மன்பினர் தங்கள்
துன்ப மழித்துத் தன்பத நல்குஞ்
சுந்தர நீறு நிறைந்து கிடந்தது. (130)

### ஓரோர் செஞ்சடை

பூளை யெருக்கு முருக்கு மருக்கமழ்
போத மதமத் தணிகொக் கிறகொடு

தாளி கரந்தை யெலும்பு கரந்து
தழங்கிய வன்னி வரந்தரு கூவிளை
வாளர வின்கண் மாதளை பல்லவம்
ஆத்தி[1] (மாலை) மலைந்து வளங்கிளர்
தூளி கிளர்ந்து சுழன்று புகைந்திடு
கடலை யடர்ந்து படர்ந்து கிடந்தது. (131)

## ஓரோர் செஞ்சடை

இந்திர வைரவ ரம்புவி யந்தர
மெண்டிசை பொன்கிரி யெண்கிரி வெண்கிரி
சந்திர சூரியர் செங்கனல் வண்புயல்
சங்கினம் வந்தெறி தெண்டிரை யம்பர
முந்தியில் வந்தெழு (மறை)ய லி(ன்)பம
தொன்றிட ஒன்றருள் மந்திர வந்தணன்
வெந்தழ லாக நடஞ்செய (வெ)ந்தரும்
வெண்டலை மாலை மிடைந்து கிடந்தது. (132)

## ஓரோர் செஞ்சடை

மல்லிகை முல்லை (மணங்)கமழ் பாதிரி
வண்டணி செங்கழு நீரொடு செண்பக
மல்லிகை நறுங்குர வஞ்சிறு செண்பக
மாலை மிலைந்து (மனதை யடக்கிய[2])
நல்லமெய் யன்பர்கள் சிந்தை குவிந்தருள்
ஞானம் விளங்கிட நாடொறும் நன்புகழ்
சொல்லி வணங்கி யுகந்திடு பத்திரஞ்
சூ(ழப் புனை)ந்து குழைந்து கிடந்தது. (133)

## ஓரோர் செஞ்சடை

மாணிக் கத்துடன் மரகதம் வயிரம்
வன்னத் தரளம் (வயிர)வயி டூரியம்
மாணிக்கங் கமழு மழகெழு நீல
மம்பொ னற்சுடர் கோமே தகமும்

---

*1. அகத்தி என்றுளது. 2. கிலந்திடை என்றுளது.*

பூணிக் கிசையுந் தொழில்புனை பவளம்
புருட ராகம் கோ(ம)ள மாலை
தாணித் தொக்கப் பலவெயில் வீசத்
தாதவிழ் மாலை தவழ்ந்து கிடந்தது. (134)

## ஒரோர் செஞ்சடை

சிந்தை குவிந்திடு மன்பர் தந்துயர்
சிந்திடு செங்கதிர் சென்று கரந்திடும்
அந்தியில் வந்தெழு மம்புலி யென்றுல
கம்புற வங்க மெலிந்து குறைந்துட
னெங்கும் வரந்தரு கொன்றையி லின்பமு
மன்பு முகந்து மணங்கமழ் திங்களி
ளம்பிறை யொன்றி மகிழ்ந்தொளி சிந்தை
விளைந்து தெளிந்து (தழைந்து) கிடந்தது. (135)

## வகுப்பு

அருணக்[1] கிரிநிறை மிக்குட
னளமுற் றிடவசை பொற்சடை
அளிதெற் றெனவென மட்டவி
ழலர்மொய்த் தொடையணி பொற்சடை
அருள்மொய்த் தவர்துமிப் பத்தர்க
ளிடுபத் திரியலர் பொற்சடை
அர(தத்) தின்விழி யிற்கனல்
சொரியப் பூவிரி[2] பொற்சடை
எரிவிட் டெழுசுட லைப்பொ(டி)
யிடையிற் புகையெழு பொற்சடை
இமையத் தினிலுமை சிற்றிடை
மனமுற் றி(ட்டசை பொற்ச)டை
அரிபொற் கழலழல் சுற்றி(ய)
தெனநற் றொழில்புனை பொற்சடை
இதழித் தொடை(செண் ப)கத்தொடை
யினமெத் தொழில்புனை பொற்சடை. (136)

---

*1. இதுவும் அடுத்த பாடலும் தெளிவில்லை. 2. புரிவிரி என்றுளது.*

கருதித் தொழுதிடு[1] நற்பிறை
புணரிய சுடரொளிர் பொற்சடை
கவன(ப் ப)ரிமிசை கொற்கையர்
புரிகைத் துகில்புனை பொற்சடை
கருநொச் சியுமெழில் செச்சையும்
விரவித் தணிகமழ் பொற்சடை
கமலத் தயன்றூ[2] வலருடன்
உலகக் கதிர்விடு பொற்சடை
கருதித் தொழவரும்[3] சொற்பிறை
கலைவிட் டுயிருறை பொற்சடை
நித்திலத் தொடுநற் றரளத்
தொடையகிர்ப் புகைகமழ் பொற்சடை
ப(ரு)மத் தமொடிறு த(ற்)கழல்
பொழியத் தொழில்புனை பொற்சடை
(பொ)ழில்கொக் கிறகவை மொய்த்திட
நில(வ)ப்[4] பிறையடு பொற்சடை. (137)

[மேலிரண்டு பாடல்களும் பொருள் தெளிவில்லை. மேலும்
இடைவிட் டெழுகுவ ளைத்தொடை
யொடுபச் சிலைநிறை பொற்சடை
(உ)ணரப் படுபவ னப்பவ
ரெனநற் றவர்புகழ் பொற்சடை
என இரண்டு வரிகள் மிகுதியாயுள்ளன. அல்லாமல்,
புரிபொற் கழலல் சுத்திய
தெனநற் றொழிபுனை பொற்சடை
என்று மறுபடியும் வந்துள்ளது.]

## *விருத்தம்*

வி(ரிசொலு நா)ன்மறைக்கு மேலாகி நின்றசடை
கிரி(வேட)ன் செருப்படிக்(குக்) கீழாகி நின்றசடை
வரியேறும் நறுந்தொடையு மக்கினமுங் கொக்கிறகும்
வரியேறும் படவரவும் தீக்கொழுந்தும் வயங்குசடை. (138)

1. தொழுதிரு என்றுளது. 2. தயனறிவறுடன என்றுளது. 3. தொழுவரும் என்றுளது. 4. நீல...ப்பிடையரு என்றுளது.

**உரை**

இவ்வண்ண மொத்திருந்துள்ள திருச்சடையை
எவ்வண்ணஞ் சுருக்கினாரா லோவெனின் :

## *விருத்தம்*

திருவடியைக் கண்டவர்கள் தீவினைகள் சுருங்கிடவும்
பரதவருக் குண்டான பாவங்கள் சுருங்கிடவும்
வென்றிபுனை மகரத்தின் வேகங்கள் சுருங்கிடவும்
கொன்றைபுனை செஞ்சடையைக் குழலாகச் சுருக்கினராம். (139)

**அன்றியும்**

தாவும்[1] கனல்வா யரவதிரச் சுருதிப்
பாவுமை சுருங்க வேற்பாகர் பாவஞ்
சுருங்கச் செஞ்சடையைப் பங்கியாகச் சுருக்கினராம். (140)

**அன்றியும்**

சூடும்[2] பிறையுங் கரந்தருளிச்[3]
துங்க மழுமான் கரந்தருளி நீ[4]
ஆடு மாலங்[5] கரந்தருளி
ஆறுஞ் சடையுங் கரந்தருளி
நீடுஞ் சிலைவேள் தனையெரித்த
நெற்றி நயனங் கரந்தருளி
வேடம் புனையத் தொடங்கினராம்
வேடர் தொழவீ டருள்செய்வார்.

**வகுப்பு**

கொலைக்கொண்டு ரன்றெரித்தார்
குணக்குன்றுபோ லும்புயத்தார்
தலைச்செங்கணா ரந்தரித்தார்
தனித்திங்கள்சூ டுஞ்சிரத்தார்

---

*1. இப்பாடலில் எதுகை, மோனை, அடி சரியில்லை. 2. இது 126-ம் பாடலின் மறுவடிவம். 3. கரந்தளித்து என்றுளது. 4. இது மிகுதியாக உளது. 5. முன்பாட்டில் பணியுங் என்றுளது.*

நிலைக்கஞ்சமா கும்பதத்தார்
நெருப்பொன்றவா ழுங்கரத்தார்
சிலைக்குன்றுமே வுங்கரத்தார்
திருத்தொண்டர்வே டந்தரித்தார். (141)

## அகவல்

இளமுலையாளு மையம்மை யிட்ட[1] விலாஞ் சினைமறைய
ஒளிவளருந் திருநீற்றா லுத்தூளனஞ் செய்தருளித்
தெளியுநிலா வொழுங்கென்னத் திருமுண்டந் தரித்தருளிக்
கருதரிய திரும(ரு)ங்கிற் கமழ்சாயத் துகில்புனைந்து
திருநுதலிற் செங்கன(க)த் தேவாரப் பொட்டணிந்து
வங்கமாலை சிரமாலை திருக்கண்டத் தணிமாலை
பொங்குதிருத் தாவடங்கள் அணிந்துபுரி நூல்புனைந்து
செபமாலை புனைந்தருளித் திருநீற்றுக் கிழியேந்தி
இருகழற்றாள் தனைப்பன்றி[2] யின்றளவுங் காணாத
திருவடித்தா மரைமலரிற் செழும்பீலிச் செருப்பணிந்து
திருநந்தி யடிவணங்கிச் சேவித்துப் பின்புவர
ஆனந்தக் களிப்பெய்தி யமரர்செய போற்றியென்று
அரிபிரமர் காணாம லாரழலாய் நின்றவர்தாம்
பரதவரை யாண்டுகொளப் பார்மீது வந்தணைந்தார். (142)

## வகுப்பு

முருகனை வாவிப் பெற்றரு ளந்தணர்
முடிமதன் வீழ நீவிடு மம்பாகர்
அரியயன் தேடத் தாமெதிர் நின்றவர்
அழல்விடு கோலக் காளப் பெயின்றவர்
கருதிய வேழப் போர்வை யுகந்தவர்
கனல்மழு மான்வைத் தேநிகழ் செங்கையர்
பரிமள மாகத் தார்புனை யம்புயர்
பரதவர் காணப் பாரில் நடந்தனர். (143)

---

1. இலச்சினை, சிவபெருமான் திருமேனியில் முலைச்சுவடுபட்ட வரலாறு, காஞ்சிப்புராணம் தழுவக்குழைந்த படலம் காண்க. 2.தனிற்பண்ணி என்றுளது. திருமால் சிவபெருமானுடைய திருவடிகளைக் காண்பதாகக் கூறி (பன்றி) வடிவுக்கொண்டு பூமியைத் தோண்டிக்கொண்டு தேடிச்சென்றும் காணமுடியவில்லை. அடிமுடி தேடிய படலம் காண்க.

**உரை**

இப்படியாகத் தம்பிரான் திருக்கயிலாயத் திருமலையி னின்றும் எழுந்தருளித் திருவம்பலமும் திருக்கண் சாத்தியருளி,

பொன்னடித்(தாள் கள்வருத்தப்) புவிமீது நடந்தருளித்
தென்னவர்க்கு வாழ்வருளுஞ் செந்தமிழ்நா(ட)து புகுந்தார். (144)

## *விருத்தம்*

வேம்பார் புயத்தோன் மீனவர்கோன்
விளங்குந் தமிழ்நா டதுபுகுந்து
மாப்பா ரத்தனைக் குருகினராம்
பாம்பா லிறங்கும் படர்சடையார். (145)

## வகுப்பு

வாரண வெற்பை வாரி யெடுத்து
வாழை வனத்தை மோதி யலைத்து
மாருத மொத்த கோபம் விளைத்து
வானர மொத்தி வாய்நுரை விட்டு
வேரொடு பச்சைக் கோலி எடுத்து
வேமணி முத்த மூடுப ரப்பி
வேரிவ னத்தின் மீதுகு தித்து
மேருவை யொத்த தாரைகள் விட்டு
மாக(ம்) மொக்க வெ… … … …
… … … … … … …… னத்தி[1] னூடு
புகழு… … … … … … … …சம்மக
பாளை மொய்த்த பூக வர்க்கம்
வாரி யெற்றி மானிலத் தோடென
மிக்க வானரத் தோடளி சுற்றி
மோக ரித்து மேலெ டுத்து
மூரி வெற்பை வேர்கு லைத்து

---

*1. இது தொடங்கும் ஏடு சுவடியில் இல்லை. காப்பீடு நூலில் உள்ளது.*

மூளு மக்கில வாளெ யிற்று
நாக மொக்க வாரி யெற்றி
வேக மிக்க வாளி சுற்றி
வேய லைத்து வேர்ப ரித்து
வேரி யற்ற சோலை தத்தி
வேலை யொக்க வேகம் விட்டு[1] (146)

## விருத்தம்

பண்டு மாலயன் புவியிடந்தும்
காணாப் பெரு...... ......
.......... ...... ...... ...... ......
........ ........ ........ .......
.... ........ ........ ....... ........
....... ........ ....... .......
கண்ட பொழுதே பாம்பறு[2]
கருதிப் பெருகத் துடங்கியதாம். (147)

## (வகுப்பு)

(கற்)றைக்[3] குலையப் போர்த்திரை விட்டு
மித்துத் தழைக்குர லொடுபதிக் கழுகொக் கப்பொரு
தெற்றித் தளையவிழ் பலர்விற கத்தொடு
புத்திக் கரைகுத்திச் சகலமயி லுகட்பட
வெற்றித் தலைபெற் றுக்கடை தடவித்
தடத்தைத் தவிதடக் கரியைக் கைகொடு
சுற்றிக் கழையட லியைமுற் றக்கொடு
பற்றிக் கரையெற் றிக்க விடம்விடு
பற்பொற் பணசற் பக்கண பொத்திக்
கடிமை...... ...... ........ழை
யெற்றிப் புலிகைத் துக்க வரவிட்
டுச்சுடர் விடுவயி ரக்கொத் தொடுபக
துற்றுத் துனையி லொடு ...........
.......... றித்தனி மொய்க்கச் சூத

1. தொடர் முடிவு இல்லை. பாடல் சரியில்லை. 2.=? 3. இப்பாடலும் சரியில்லை.

முற்றுச் சுரதரு நி(ருதரு மா)றுபட
மொய்த்து துளிவிட்டுச் சுடுகணை நிரவிப்
பொற்குவ டொக்கச் சுழல்விட் டாதலி
தன்னை வட்டக் கடலுட் குட்படர்
விற்றுப் பயனது தரணி.............
குப்பரி யுற்றுப் பல்ல லொடுசுனை
பற்றித் தமரத் தைக்குலை வித்தடி
யுற்றுத் தொழமுற் றித்தவ முற்றும். (148)

**அகவல்**

கோங்கி[1] னுடனே நறுங்கமழ் பாதிரியும்
ஓங்கு மாவும் சந்தன மும்முயர்
(சு)ரும்பு நெருங்கிய கிஞ்சுக மும்(படர்)
சுரபுன் னையும் துய்யவ சோகும்
கமழுங் கூந்தலுங் காரகிலுஞ் சு(ருக்கி)
பசுங்க ழையு(ம் வானுயர் கமுகும்
ஈரப் பலாவுங் (கூழைப் பலாவும்)
நாரத் துடனே மாதளை தங்கு
மரத்தந் தருகறிக் கொடியும் பொன்னும்
மரகதம் பவளம் பொருந்தக் கொண்டு
(ஏலமுந்) தக்கோ லமுமில வங்கமும்
சால விளங்கும் பழுக்காய் சாதிக்காய்
முகந்தெழுந் தெங்கும் தோகை மயில்களும்
பீலியுந் துங்க மாவும் கரடிகளும்
(வே)க முடை(ய கடகரி) யாளியும்
வேங்கை யுடனே மானுங் கபியும்
புல்வாய் வரையும் நாவியும் வராகமும்
காலன மேதியும் கரடி முயலும்
பன்றியுஞ் (சீயமுந் தா)னெடுத் தெறிந்து
குறவர் குடில்களில் சென்று புக்குக்
கொடிய சிலையு மம்புகளு (முந்தி)
உரியிற் றேனுந் தினை(யின்) மாவும்
உடுக்குந் தழைகளுள் கொள்ளை கொண்டு

*1. இப்பாடலின் வினைமுடிபு சரியில்லை.*

நிறைந்த சுனையெங் கும்பரந் துடைந்து
நிலமா மடந்தை வேருருக் கொளவே
குறி(ஞ்)சி[1] நிலத்தினை விட்ட கன்று
கொடிய பாலையிற்[2] சென்று புக்குக்
காரை யுடனே ஆவா ரையும்
கடம்புங் கள்ளியுங் கருவே லுங்(கொடு)
சூரை யுடனே பாலை துடரிக்
காடும் வெள்ளெ ருக்கு முடும்பும்
கீரியும் வேடுவர்கள் வொழுக்கு வாரும்
முயல வலையும் படர்ந்த முசுட்டையும்
கோவைகள் பன்றி வலையும் னெ(ல்)லி
வலியக் கடிக்கும் நாய்களும் பாசங்களும்
கணையுஞ் சிலையும் கைவேலு முடுக்குந்
தோலுந் தொடுசெருப் பும்(மிக) வொளிரும்
பீலித் தொங்கலும் செம்பொன் முரசும்
சிறுதுடி யோடு சிறந்த டக்கையும்
குடமும் கொம்பும் காளமும் குழலும்
கோலி வேலியுங் கொள்ளை கொண்டு
முல்லை[3] நிலந்தனில் வந்து புக்கு
முல்லை மலரைக் கொய்துமணந் தெரிந்து
முழுநீ லந்தனை வேருடன் பறித்து
கொல்லை வாகுடன் இடையர் தங்கள்
குழலும் நெய்யும் முறிவெண் ணெய்யும்
தோயும் தயிர்மத் துக்கழிக் கோலும்
துய்ய கொன்றையும் காயாவும் துளவும்
வெட்டிக் கரந்தையும் கிளர்ந்த நாவலும்
வீழிகளும் கிளர்ந்த வீசமுடன் வேம்புகளும்
விளாவும் முற்றித் தெரிந்திடை மடவார்
வெள்ளை வளைகளும் கொள்ளை கொண்டு
மருத[4] நிலந்தனில் சென்று புக்கு
மதுர வரிவண் டுகள்பண் பாட

---

*1. குறிஞ்சி நில வருணனை. 2. பாலைநில வருணனை. 3. முல்லை நில வருணனை. 4. மருத நில வருணனை.*

முருகங் கோங்கிளர் சோலை புக்கு
முயங்கி மயங்கி வெண்திரை வளைத்து
கன்ன லடவியை முறித்தெ றிந்து
கழுநீ ரோடையிற் காலாறிச் செந்நெல்
மூடி யெடுத்தலை மோதிச் சென்று
வாவிமார் பறித்து அன்னத் திரள்களும்
தாராவு மசைந்து முன்னடை காட்டி
வன்னத் துடன்கரண் டிளங்கதலி வாசக்
கவரிகள் வீசத் தொடந்திரு மருங்கும்
சோலை நீலக் கொடைநி ழற்ற
நடந்து வந்து நாண்மலர் தூவி
நாரி பாதரை (த் தாழ்ந்து) பணிந்ததுவாம். (149)

## *விருத்தம்*

பெருகா[1] நின்றபரம் பரத்தைப்
பெருமான் போதக்கொண் டோடிப்
பிறைசேர் முடியா ரிருதாள் வருந்த
யிராமீச் சரத்தைக் குருகினராம். (150)

அகில முண்டோன் குடியேற்றும்
ஐந்நூற்றுப் பன்னிருவர் தங்கள்
நகரி யானதிருத் தேவை[2]
நகரி தானென போலிருந்த குவலம்[3]. (151)

## வகுப்பு

தண்கமு[4] காரம் வகுளம்
சரளத் திரளுந் தமாலஞ்
செண்பகம் அஞ்சனம் தாழை
செருந்தில் ..... ..... குருந்து
நரந்தம் மாதவி கிஞ்சுக
நீபம் வாழை சிந்தாரம்

---

1. இப்பாடலுள்ள ஏடு ஒடிந்துள்ளது. 2. தேவை என்பது இராமீச்சுரம். 3. ஏடு ஒடிந்திருப்பதால் பாடல் சரிப்படுத்தவியலவில்லை. 4. இதுவும் அப்படியே ஒடிந்தயேடு.

மந்தாரம் போதவிழுஞ் சுடிபுன்னை
புதிய வதியதம ரற்றுப்பூகம்
வேங்கை யுடன்குள விஞ்சி
வேரி....... ........
கோங்கம் மரவம் குரவம்
கூவளை மாதளை கோட்டம்
பாதிரி யீரப் பலாவும்
மிலவுங் செ....... கைத்........
....... ........ களுர்மல்
களரத்தருன் ருற்றிநற் சூதம்
வெள்ள லுடலெலும் ........
விரைகம ழுஞ்சே யருத்தம்
வெள்ளை மிகுந்திடு வாச்சி
விளங்கிய தெங்கு கமுகு
கள்ளவிழ் பட்டிகை காஞ்சி
...... ...... ........
மல்லிகை மவ்வல் கரந்தை
மணங்கமழ் நந்தியா வட்டம்
முல்லைசெவ் வந்தி யசோகு
முழுதுஞ் செழுமலர் கொன்றை
விரைகம ழும்மிரு வாட்சி
(வி)ளங்கிய நொச்சில் கற்பிச்சி
மருவிரி வேலிபொற் கோங்கு
மணங்கமழ் சோலை நெருங்கிப்
பரி(வு)டன் மாடப் புறாவும்
பல்லியங் கள்பல கொட்ட
விருது கருங்குயி லூத
வெளிகொடி முல்லை ..........
.........பொடுக்கண் டினமெங்கு
மருந்து மல்லிகை சங்கு
குறிக்கக் கொண்டல் சவளிக்
கையாக்கொ டேறி வந்து
கவிழக் கருதும சோகு
முன்னின்று கைவிளக்குப் பலகாட்ட

இவருஞ் செழுமடப் பூக
மெங்குங் (க) வரிகள் வீச
ஆகங் குளிரக் கதலி
யால வட்டம் பணிமாறச்
சூதங்கள் பல்லவம் விட்டுத்
தொழில்செங் குடைகள் கவிக்க
மன்றல் பருகுஞ் சுரும்பும்
மகிழ்ந்துட னேயிசை பாடத்
தெ(ன்றல்வந் துலவத் தேனுண்
வண்டு) நட்டுவ னாகிச்
செண்பகந் தாளம் பிடிக்கத்
தூவி மயிலினம் வந்து
சோலை நிழலாஞ் செறிந்து
............(வே)ரிகள் கொண்டு
மிகவு மசைந்துட் பாடப்
பாலதிக் குலும்மலர் காந்தள்
பரிவுடன் கைய (சைக்க)த்
தலைக ளசைந்து குழைந்து
தண்டலை நின்றுகொண் டாட
நன்றை யறிந்து முற்று
....... ம(சை)யநற் பவளமும்
புன்னைகள் நல்கக் கொன்றைகள்
செம்பொன் விரித்துக் குறித்துத்
......... ..........ங் கொடுப்பப்
பங்கய நெய்தல் குவளை
பனிவெண் குமுதம் செங்கழு
நீர்வெண் கமலம் (செ)ழுந்தட
(வெ)மங்கும் மலர வண்ணல்வெண்
ணீறுகொண் டெங்கும் மாகம்
மறைக்கும்..... ........டிகள்
கண்ணி லருவி சொரியக்
கைதொழும் வீதி யெல்லாம்
அங்கம் புளகித மாக
வா(ன)ந்த வெள்ளத் தழுந்தி

செங்கை குவித்தபடி போற்றும்
திருவடி யார்க ளொருபால்
மருண்டெழு சிந்தை யதனில்
மயமும் பொய்யு மறுத்து
இரண்டு மறியா திருக்கும்
ஏழை யடியா ரொருபால்
கருமேனி மாலு மயனும்
காணாமல் நின்று கனவிற்
றிருமேனி கண்டு பூசிக்கும்
திருமறை யோர்க ளொருபால்
கதியற்ற குண்டரை வென்று
கழு வினி லேற்றுஞ் சிறுவன்
குதலைப் பசுந்தமிழ் கேட்டுக்
குழையு மடியா ரொருபால்
தேடும் பொருள்கந்தை யாகச்
செல்வம் வெறும்பிச்சை யாக
ஓடுங் கனகமுந் தம்மில்
ஒக்க நினைப்பவ ரொருபால்
ஆசை வெகுளி மயக்கம்
அரும்பாவ புண்ணிய மென்னும்
மாசற வோடித் தெளிந்து
பற்றற்ற வன்ப ரொருபால்
சரியை கிரியை யோகந்
தனிஞான மென்னும் கடலைத்
திருக்கறச் செற்று விட்ட
செவ்வை யடியா ரொருபால்
சுத்தம சுத்தம் வரைவு
திரிபு சுகதுக்க மற்று
சித்தஞ் சிவமா யிருக்குந்
திருவடி யார்க ளொருபால்
அத்தங் கிளைமக்கள் தாரம்
அறிவு கல்வி செல்வமெனும்
சித்தவி காரக் கலக்கந்
தெளிந்த வடியா ரொருபால்

சொல்லுங் கலைகள் மறுத்துத்
தொழில தனைத்து மறந்து
பெண்(ணை) யற(வே) மறந்த
பெரிய வடியா ரொருபால்
ஊனக் கண்(ணி)னை மூடி
உள்ளத் துள்ளே (ஊறுமெய்ஞ்)
ஞானக் கண்ணா யிருந்து
காணு மடியா ரொருபால்
நாண மறுத்துக் குறைந்து
நலமுங் குலமு மறந்து
பேணு மறிவு மறந்த
பெரிய வடியா ரொருபால்[1] (152)

## வகுப்பு

உரையாற் (றா)னிரு பொற்பத
நினைபத் தர்க ளொருபால்
உருகிச் செயலொழி யத்தொழு
(தழு)தெழு முத்தம ரொருபால்
கரையாற் றிருவி!ழி யிற்புனல்
தருமெய் யுற்றவ ரொருபால்
கலவிக் கணைமத னைச்செயல்
முனிபத் தர்க ளொருபால்
உரையற் றெழுமறி விற்(கண்)
சிவனடி வைத்தவ ரொருபால்
புகலிப் பதிவரு வித்தகர்
(பைந்)தமிழ் கற்றவ ரொருபால்
நிரையக் குடனொளி (நிறைந்த)
தவையணி சித்தர்க ளொருபால்
நிரையத் திருவொடு விற்பொடி
புனைபத் தர்க ளொருபால்
அராமீ துறங்கு மாமாய
னவலந் தீர வருள்புரிந்த
இராமேச் சுரத்தைக் குருகினராம்
எல்லா மாகி யல்லாதார். (153)

1. பாடல் சரிப்படுத்தல் கடினமாயிற்று.

## விருத்தம்

குரைகட லிற்றி யேழுங்
குறுக்கறுத் தோடிச் செம்பொன்
வரைதிரி வதுபோல் நிற்கும்
மகரத் தைவலை யால்வீசித்
திரைவரு மடந்தை தன்னை
மணஞ்செய்கை தேவை யாகக்
கரைபொரு திரைசூழ் தேவை
மேவினார் கால காலர். (154)

## உரை

இத்தன்மைத்தாய் தம்பிரான் திருக்கயிலாய மலையி னின்றும் எழுந்தருளித் திருவிராமேச்சுரத்தில் வந்து தோன்றி யருளித் தெருவூடே எழுந்தருளா நின்றபொழுது திருநந்தி தேவரைத் திருக்கண் சாத்தியருளி, "வாராய்! நந்தி! இந்நகரியின் பெருமை கேளாய்! இராமபிரான் இராவ(ணவத)ம் பண்ணுகையால் பிரம்மகத்தி விடாமல், தனது சாய்கை இரண்டாகத் தோன்றக் கண்டு மிகவும் பயமுற்று, முன்பு தான் நடந்த சேதுவின் தீர்த்தத்துக்கெந்த பருவதச்சாரல் நகரியில் நமக்காலயமாகிய தேவை நகரியில் (நம்மை அமைத்து) வைத்து (வழிபட்ட) பின்பு தன் சாய்கை அயரக்கண்டு நம்மைப் பூசித்துத் தன் வழிபாடு பூலோகத்தில் நிலை நிற்க வேண்டுமென்று தன் பெயராலேயே **இராமீச்சுரம்**[1] என்று பெயர் வழங்கி, கங்கைக் கரையின் கிராமங்களினின்றும் ஐந்நூற்றொருபத்திரண்டு[2] பிராமணரைக்கொண்டு வந்து குடியேற்றி, அதிலே இரண்டு பிராமணரை 'வடகங்கை யாரியச் சக்கரவர்த்தி' யென்றும், 'ஆரியச்சக்கரவர்த்தி' என்றும் பட்டவர்த்தனராக்கி நமக்குள்ள பெரும் பேறுகளில் ஐந்தில் இரண்டும், ஐந்தில் மூன்றுமாக நம்முடனே பேறுபெறக் கற்பித்த நகரியிது காண் என்றார்.

---

*1. இராமேசுவரம், 2. 512.*

ஆத்த மான மறையவர்கள்
ஐந்நூற் றொருபத் திருவருடன்
ஏத்த நாமிங் கினிதிருக்கும்
இராமீச் சுரமென் றருள்செய்தார். (155)

## விருத்தம்

அடல்கங்கை மறையவர்கள்
ஐந்நூற் றொருபத் திருவருடன்
வடகங்கை யாரியனா
(ராரியனா) ரிவரென்று வகைந்திருவர்
படியெங்கும் புகழ்ந்தேத்தப்
பட்டம் பெற்றவர் தாமென்
னுடனென்றும் பங்குபெறும்
ஊர்காணிவ் வூரென் றருள்செய்தார். (156)

## உரை

இங்ஙனமே திருவாய் மலர்ந்தருளித் (தம்பிரான்) அங்கு நின்றும் எழுந்தருளிச்

செந்தமிழ்சேர் அதியரையன்
செய்தவத்தி னாற்பயந்த
பைந்தொடியை வதுவைசெய்யப்
பவுத்திரா புரியில்வந்தார். (157)

## விருத்தம்

இரவிதன் னெயிறு சிந்தி
யிந்துவை யிடர வாங்கி
கரதல மதுகு றைத்துக்
கலைமயில் நாசி கொய்து
சுரர்பதி குயிலாய்ப் போகச்
சுருதியான் விலைது ணித்தார்
பரதவர் தம்மை யாளப்
பவுத்திரா புரியில் வந்தார். (158)

**வேறு**

சினக்கண் ணார மணிந்தார்
சிலைக்கை மாரனை வென்றார்
நினைக்க வூறி நினைந்தார்
நெருப்போ டாறு புனைந்தார்
முனைக்கை மூவிலை கொண்டார்
முருக்க மால மீன்றார்
பனைக்கை மால்வரை வென்றார்
பவுத்தி ராபுரி வந்தார். (159)

**உரை**

இப்படியாகத் தம்பிரான் பவுத்திராபுரித் தெருவூடே எழுந்தருளி நின்றபொழுது திருநந்திதேவரைத் திருக்கண் சாத்தியருளி, "வாராய்! நந்தி! இந்நகரின் பெருமை கேளாய்! இராமன் காலச் சிறப்பும், வேளைச் சிறப்பும், தானச் சிறப்பும் பற்றத் தன் கையில் பவுத்திரத்தை வாங்கி, கருவாகப் பதித்து அமைத்ததொரு நகரியீதுகாண். இந்நகரியில் அம்மையார் தங்கள் இல்லத்தைவிட்டுப் படி கடவாதிருக்கத்தக்க கற்புடையாராகி இருத்தலால்[1], அவர்களைப் பூவுலகத்தில் சீவிக்கின்ற பாவிகளால் ஒரு பழி[2] வந்த காலத்து, நெருப்பாலே, நீராலே பழியைக் கழுவ வல்லதொரு மானமும், அருந்ததியை நோக்கி 'இவள் பலருங்காண நிற்கின்றபடி பாரீர்' என்று கை நெறிக்கத் தக்க கற்புடையராகி, நம் பார்வதியைப்போல், உள்ளது கொண்டு நல்லறஞ் செய்யத்தக்க பதிவிரதாயியல்புடையராகி இருத்தலால் அவர்களை நாம் மாதாவாகக் கொண்டிருப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளி,

அங்குநின்று மெழுந்தருளிச் செங்கமலத் தாள்சிவப்ப
மங்கைநகர் தனில்வந்தார் மாலயன்முன் காணாதார். (160)

*1. இருக்கலால் என்றுளது. 2. பழியும் என்றுளது.*

## (வகுப்பு)

சங்க நெடுங்கடல் நஞ்சு பயின்றவர்
தந்தம தங்கையை மொன்று பிளந்தவர்
சங்கை புனைந்தெழு திங்க ளணிந்தவர்
கனன்று நமன்றனை நெஞ்சி லுதைத்தவர்
துங்கவ ய(ன்ற)லை கொண்டருள் செங்கையர்
தொண்டர்த மன்பொடு சென்றுறை கின்றவர்
மங்கைதன் (முலை, பொர நி(ன்)றத ழும்பினர்
மங்கை பிரிந்தருள் மங்கையில் வந்தார். (161)

## விருத்தம்

அரிமுகம் படைத்த மாலும்
அம்புலி படைத்த நூலின்
திருமுகம் படைத்த கோனும்
தேடி(யு)ம் (முடியுந்) தாளும்
வரைமட மங்கை வந்த
மங்கைமா நகரி தன்னில்
பரியுட னிருந்து வாழும்
பரதவர் காண வந்தார். (162)

### உரை

இவ்வாறாய்த் தம்பிரான் எழுந்தருளி வாராநின்ற மங்கைப் பதிதான் எவ்வண்ணம் ஒத்திருந்ததோவெனில்,

### அகவல்

ஆங்குனக் கன்பாகி யென்புருகு மடியவர்கள்
காதல்விழி புனல்சொரியக் கைதொழும் வீதியெல்லாம்
ஊனக்கண் தனைமூடி உள்ளமுள்ளே சிரித்திருக்கும்
ஞானக்கண் விழித்திருக்கும் நல்லவன்ப ரொருபாகம்
உள்ளமறந் தில்மறந்து நலமறந்துள் ளூரைமறந்து
போகமறந்து தமைமறந்த பண்பர்க ளொருபாகம்

மந்திரதந் திரந்தியானமென் னாமவகைச் ராய்ச்செற்று
யிந்திரியக் கோணல்திருத்தி யிருக்குமன்ப ரொருபாகம்
சுத்தமசுத்தம் வரைவுதிரிவு சுகதுக்க மென்னும்
சித்திவிகா ரக்கலக்கந் தீர்ந்தவன்ப ரொருபாகம்
ஞானம்யோகம் கிறியைசரியை யென்றுநாற் பதமும்
ஆனபடி யறிந்தப்பா லானவன்ப ரொருபாகம்
தேடுஞ் சுகத்தையும் நற்செல்வம் பிச்சை
ஓடுஞ்செம் பொன்னுமொக்க வெண்ணுமன்ப ரொருபாகம்
ஆசைமயக் கம்வெகுளி அருந்தவபுண் ணியபாவ
மாசறவோ டித்தெளிந்து வாழுமன்ப ரொருபாகம்
சாகரஞ்சூழ் புவியி(ன)ன்பர் தமைவணங்கத் தாமுரைத்த
வாகமநூல் வல்லநல்ல வருமறையோ ரொருபாகம்
சதி(ெ)பற்ற வமணர்தனை(க் கழு)வில்வைத்த மறையவன்றன்
குதலைச்செந் தமிழ்கேட்டுக் குழைந்த(வ)ன்ப ரொருபாகம்
நினைப்புற்ற மறப்புந்தவிர்ந்து நெஞ்சில்நமைக் குடியிருத்தி
சினமுமகிழ்வும் பிறந்ததிரு வடியார்க ளொருபாகம்
கண்சள்குவிந் (தானந்த வ)ருவிவிடக் கரங்குவியப்
பண்களுடன் றிருநாமம் பரவுமன்ப ரொருபாகம்
சொல்லுங்கலை மறந்துபல தொழில்மறந் துறந்துறைந்து
அல்லும்பகலு மரகரவென் றரற்றுமன்ப ரொருபாகம். (163)

## வகுப்பு

(உறையற்றர) னிருபொற்பத நினைபத்தர்க ளொருபால்
உருகிச்செய லழிபத்தொழு தெழுமுத்தம ரொருபால்
கரையற்றிரு விழியிற்புனல் தருமெய்த்தவ ரொருபால்
கலகக்கணை மதன்விற்றொழில் முனிசுத்தர்க ளொருபால்
புரையத்தொழு மறவிற்சிவ னடிவைத்தவ ரொருபால்
புகலிப்பதி வருவித்தகர் தமிழ்கற்றவ ரொருபால்
நிரையத்திரு வுருவிற்பொடி புனைபத்தர்க ளொருபால்
நிறையக்கமு குடன்மொய்த்திட வணிசுத்தர்க
ளொருபால். (164)

## *விருத்தம்*

பெருமைதரு திருநீறு பிறழுநில மொருபாகம்
மருவுதன கிரியார் மணிவெயிலா லொருபாகம்
இருபொழுது மறைபாடு மியலிசையா ரொருபாகம்
அருணவிழி மடமாதர் அளகவிரு ளொருபாகம். (165)

**வேறு**

பூந்துகில்[1] புனையாப் பொய்யர்கைப் பட்டுப்
புண்ணிய வெண்பொடி மறந்த
வேந்தனைக் கூடல் மாறனை வணங்கும்
வெண்பொடி மேனிய ரொருபால்
மாந்தரைம்[2] புலனும் நிறைவுநல் லறிவும்
மதியும் மயங்கிட வீசிக்
காந்தமு மிரும்பும் போல்பல ருயிரைக்
கண்கள்கொண் டெடுப்பவ ரொருபால். (166)

**உரை**

இப்பால் விளங்கா நின்ற மங்கை நகரத் தெருவூடே தம்பிரான் எழுந்தருளி வாராநின்ற காலத்துத் திருநந்தி தேவரை நோக்கி "வாராய்! நந்தி! உனதுடைய மாதா இருக்கின்ற நகரி இதுகாண்" என்று அருளிச் செய்ய, நந்திதேவரும், அந்நகரியை வணங்கி "என்னே! என்னே!! இந்நகரியிலுள்ளாரும், இந்நகரியும், பிராணிகளும், தம்பிராட்டி வந்து அவதரிக்கத்தக்க மரபையுடைய பரதவரும் என்ன புண்ணியம் செய்தார்களோ!

புருடோத்தமன் ஒரு வராக வடிவாகிப் பூமியை இடந்தும், பிரம்மா ஒரு அன்ன வடிவாகி (ஆகாயத்தே) பறந்தும் காண்டற்கரிய, அடியும் முடியும் காணப்பெறார்கள். ஆதலால் இந்நகரியை ஒப்பதொரு நகரி இச்சதுர்தேச புவனங்களிலும் இல்லை" என்று விண்ணப்பம் செய்யத்(தம்பிரான்) கேட்டுத் திருமுறுவல் கொண்டருளி,

---

*1. பொருள்தெளிவில்லை. 2. மாதரைப் புனலும் என்றுளது.*

தோயுந் தோயு முடிக்கமலஞ்
சுருதிப் பிரமன் தேடவடி
மாயன் தேட நின்றவர்தாம்
மங்கைத் தெருவே நடந்தனராம். (167)

## (வகுப்பு)

செஞ்சொற் றிகழ்பெற நின்றார்
திங்கட் குழவி யணிந்தார்
கஞ்சத் தய(னி)லை கண்டார்
கம்பக் கரியுரி கொண்டார்
நெஞ்சிற் கமல முறைத்தார்
நிந்தித் தவர்புரம் வென்றார்
வஞ்சக் கட(ல்)விட முண்டார்
மங்கைத் தெருவில் நடந்தார். (168)

## உரை

இப்படியாகத் தம்பிரான் திருவடித் தாமரை வருந்த மங்கைநகர் தெருவூடே எழுந்தருளிவாரா நின்ற பெருமையைக் கண்டு, மாடகூடங்களிலும், மண்டபங்களிலும், நிலாமுன்றில் களிலும், தெருக்களிலும், செய்குன்றுகளிலும், வெளிகளிலும், சோலைகளிலும், வாவிகளிலும் நின்று, பந்தாடியும், ஊசலாடியும், கழங்காடியும், உந்திபறந்தும், அம்மானையாடியும், கழலாடியும், சிற்றிலிழைத்தும், கூடலிழைத்தும் விளையாடு கின்ற வாலை, தருணி, பிறவுடை, விருத்தை, என்று சொல்லுகின்ற நால்வகைப்பருவ கன்னியர்களும், திரிசனங்களும், வந்து, திருவீதி குருகி நின்று, யாது சொன்னாரோ வெனில்,

## அகவல்

மருக்கொண்ட குழல்மடவீர் வருகின்ற ஆண்டார்தாம்
திருக்குழலும் திருநெற்றியும் திருமுண்டங் குறுவெற்பும்
கருத்தழிக்குந் திருநகையும் காதலுடன் செவ்வாயும்
கண்டவர்தம் முயிர்சோரக் களவிருக்கும் திருநயனமும்

குழையும் அரிவையர்கைக் காந்தள்தனக் காசைதருந்
திருக்கண்டமும் வ(ரைய)னைய திருத்தோளும் மதியிலங்குந்
திருநீறும் செவ்வடமுந் திருக்கரமுஞ் சி(ற)ந்தநீற்
றுக்கிழியும் தவமிகுமூத் தான்முன்னூல் தாவடமும்
திருமார்புங் காரிகையரா ருயிர்கவரும் கமழ்சாய(ல்)
பூந்துகிலும் பார்மீது நடம்பயிலும் பாதமலர்த்
திருநெருப்பும் தெரிவையர்தம் மனஞ்சுழிக்குந் திரு(நடையும்)
(குமிழ்)[1] தருஞ் செவ்வாயுங் கண்டவர்தம் முயிர்(கவரும்)
(ஆணழகும் கட்டழகும் அணிநுதலும் கொடுபோந்தார்)
அறுமுகனோ அடல்வேளோ வந்தவரென் றறிகிலோமிவ்
வாள்(வீரர்) வேடத்தார் போகாமல் போகாமல் வல்லபத்தர்
(வி)ரக(வி)ன்பம் பார்த்திருந்து நுதல்(வேர்க்க) (நின்றநிலை)
(அ)ளக்கக்குழ லாழியாக மணிநுதல் வி.......(யாக)
காலநதன் மலற்பதியாகி யணிநடை யோர்பாகத்
தொழில்சாய மயிலாகச் செ(ன்றதனைக் கண்டதனால்)
(இ)லைக்கண் புனல்ததும்ப பணிவாருள் போலநின்றார். (169)

## விருத்தம்

தையலார் ...... ....... .......
(கையி)ல் வளை (தனை)வாங்கும் காந்தளேர் திரு......
........... ........... ........... ............
ஐயறிவா ராகிடவென் றகிலமெலா மதிசயித்தார். (170)

## வகுப்பு

அதிரு மகா நெடுங்கட
லதனி லெழுவிட முண்டவர்
அரிய பரவை மடந்தனில்
அரிய விரவில் நடந்தவர்
(எ)திரு மறலி யார்தனை
யிடிய வடிகொ டுதைத்தவர்
இமைய மடமயில் கொங்கைகள்
ளெழுது குறிக ளுகந்தவர்

1. குமிழ்=குமிழ் சிரிப்பு. சுவடியில் இவ்வேட்டில் பாதிஇல்லை. ஆகவே பிற்பகுதி சரிப்படுத்த இயலவில்லை.

உதைய விரவி தனதெயி
றுதிர விரல்விடு செங்கையர்
ஒளிரு மலரி லயன்றலை
(வு)ரு(ள) வுகிர்கொ டரிந்தவர்
மதியு மரவு வருந்திரை
மருவு புனலு மணிந்தவர்
மயல்கொ டுருக மடந்தையர்
மருக மருகு நடந்தவர். (171)

## விருத்தம்

மாதவ ரெல்லாம் மதிமயங்கி
மருகி னூடே யெழுந்தருளிப்
பாதக மலங்கள் வருந்திடவே
பாவை பாகர் வருமளவில்
தொழுது[1] வணங்கா மருவலர்கள்
தோளின் மீது மாமகர
மெழுதும் புயத்தா னதியரையன்
இருந்த வோலக்க மியம்பலுற்றேன். (172)

## அகவல்

வேத முனிவரு மந்தணரும்
விளங்குந் தமி(ழில்) நா(வ)லரும்
நீதி சாத்திரம் வல்லவரும்
நிறைந்த நீற்றுப் பக்தர்களும்
தன்ம சாத்திரம் வல்லவரும்
தயங்கு சடைமுடி வேதியரும்
நன்மை யுடனே யைந்தெழுத்தும்
நவிலும் ஞான யோகிகளும்
சிவனைப் பூசிக்கு மறையவரும்
திருப்பாட் டெழுதுஞ் செல்வர்களும்
கவனப் பரிவல தென்னவர்கோன்
கருணை வெயிலெழு மணிமுடிக்கு

*1. எதுகை மாறியுள்ளது.*

மேவு[1] பவளமும் நித்திலமும்
வேண்டி வரவிட்ட முதலிகளும்
......... ......... ..........
.......... .......... ............
மன்னுங் கதிர்வேல் வல்லவரும்
மதுகை வேள்வி வல்லவரும்
பன்னுந் தமிழ்தெரி பரதவரும்
பரிவுட னேபுடை சூழ்(ந்துவரக்)
கடல்மா முரசு நின்றதிரக்
கண்டல் நறுந்தார் புயத்திலங்க
அடல்மா மகரக் கொடியசைய
அமுதம் (பொழிவெள் ளானை)நிற்க
மன்னுங் கொலைமா மகரத்தினால்
வருந்தி யிருக்கின்ற காலத்திலே
சென்னி மீது மதிபுனைந்த
சிவனார் வந்து தோன்றினராம். (173)

**உரை**

இவ்வாறே தம்பிரான் திருவழகைக்கண்டு அதிசயித்து மிகவும் பரிதாபமெய்தி

என்னே என்னே இவருடைய திருவழகு
மிப்படி யிருந்த படிபாரீ ரென்றிரங்கி
மின்னே ரனையா (ரா)ருயிர் சோர
விண்ணோர் பெருமான் (விரைந்து) வருகின்றார்[2]. (174)

## *விருத்தம்*

சேலாரும் விழிமடவார் சிலைபிடிக்க நான்பிடித்து
மேலான புரமூன்றும் வெ(ன்றத)னிச் சேவகனார்
ஆலாலம் புனைவிழியா ராழிசங்கும் போக்கிவென்று
மாலாக வயனாகத் தாமாக வருகின்றார். (175)

---

*1. இவ்வடிக்கு எதுகையடியில்லை. 2. மறுக்கன்றார் என்றுளது.*

**உரை**

இத்தன்மைத்தாய் தம்பிரான் எழுந்தருளி, மகரத்தாலே மிகவும் பீடைப்பட்டிருக்கின்ற அதியரையன், பரதவர்களுடன் கூடியிருக்கின்ற மன்று சென்று குருக, அவர்களும் நம்முடைய பக்கல் வருகின்ற தம்பிரானுடைய சுத்தவேடம் இருந்தபடி பாரீரென்று மிகவும் ஆச்சரியப்பட்டுக் கண்டபொழுதே அனைவரும் எழுந்திருந்து கரத்தாலே அஞ்சலி செய்து, திருவேடத்தாரைக் காணுந்தொறும், காணுந்தொறும் கைகள் தானே சென்று தலையிலேறக் கருதாநின்றது. நெஞ்சு உள்ளுருகித் துரிசற்று ஒரு நீர்மையாய் நின்றது. (கண்க)ள் செயலழிந்து களிகூர்ந்து ஆனந்தப் புனல் ததும்பாநின்றது. மேனியெல்லாம் கம்பித்துப் புளகிதமாய் நின்றது. வாய் வெருவி (நமசிவய) என்கின்ற 'திருநாமம்' ஓதாநின்றது.

சிந்தை தெளிந்த அவர்கள், 'இவர் கேவலமல்ல' வென்று விசாரிக்குமளவில், 'இமையாதிருக்கத்தக்க முக்கண்ணுடைய தேவரினுமல்ல. இமைத்திருக்கத்தக்க கண்களுடைய மானிடரினு மல்ல. மதுராபுரி வெள்ளியம்பலத்திலே திருக்கூத்தாடுகின்ற ஆதிநாதர் மண்மேல் வந்தது போலிருந்தார்' என்று துணிந்தனர்.

***விருத்தம்***

ஆறு சூடும் திருச்சடையும்
அரவும் கதிரும் அம்புலியும்
(நீறு திகழும்) மேனியையும்
நெற்றி விழியுங் கரந்தருளிப்
பாறு சூடுந் தலைமாலை
பவு......... .........வென்கொண்டையாக
மாறி யாடும் பெருமானார்
மண்மேல் வந்தார் போலிருந்தார். (176)

**உரை**

இவ்வண்ணம் பரதவரும் அதியரையனும் மகிழ்ச்சி யுற்றிருக்கின்ற காலத்து,

(அடிமுடியுங்[1] காண்பமென்று) சொல்லிப்
பூமிதொரும் (விண்தொறும்) வென்றிமாலும்
நான்முகனும் தமைத்தேடப் பரதவர்கள்
(மங்கைநகர்) தேடித்தாம் (வந்தடை)ந்தார். (177)

## வகுப்பு

சீர்வர வார மணிந்தவர்
திரிபுரந் தீயெழ வென்றவர்
சீலமறி மான்மழுச் செங்கையர்
கடல்விடு மாவிட முண்டவர்
மலைமகள் பாக முகந்தவர்
(மணமலர்) சேர்பத பங்கயர்
பனிமதி வேணி புனைந்தவர்
பரதவர் வாசலில் வந்தார். (178)

## வேறு

சிலையார்கணை மதவேளுடல் பொடியாக முனிந்தவர்
திருமாலய னிரு(வருமடி) முடிதேட முன்நின்றார்
மலைமாமகள் முலைதோய்வரு வடிவாக வுகந்தார்
மருவாரதிர் ஈரேழ்வகை யாகித் தெரிந்தவர்
கலைநாவல நிரவேவிட வொருதூது நடந்தவர்
(க)ருதாதெதிர் வருகாலனை ம(ார்பினி லுதைத்)தவர்
பலவாயடல் விடவாளா வொடுநீறு புனைந்தவர்
பதுமாசன மயில்சேர்பர தவர்வாசலில் வந்தார். (179)

## *வெண்பா*

வண்டுளப மால்தேட மன்றில் நடமாடும்
புண்டரிக மோரிரண்டும் பூத்ததே[2] - தண்டமிழ்நூல்
கொத்தளக்குஞ் சிந்தையான் கூடல்மா றன்றனக்கு
முத்தளக்கு முன்றிலான் முன். (180)

---

*1. இப்பாடல் செல்லரித்திருப்பதால் சரியில்லை. 2. பூகத்தே என்றுளது.*

**உரை**

இப்படியே தம்பிரான் எழுந்தருளப் பரதவரும் திருப்பாதங்களிலே விழுந்து வணங்கி யாது செய்தாரோ வெனில், எதிர்கொள்ளல், பணிதல், இருக்கையிடுதல், பாதம் விளக்குதல், விரைமலரளித்தல், நறுமலர் சூட்டுதல், தூபங் கொடுத்தல், தீபம் ஏற்றுதல், உண்டியளித்தல் என்று சொல்லுகின்ற ஒன்பான் புண்ணியங்களிலும், உண்டி யொழிந்து எட்டு வகையாலும் தம்பிரானைப் பூசித்து நிற்கத் தம்பிரான், தனக்குச் சம்பந்தக் குடியாகப் புண்ணியம் செய்திருக்கின்ற அதியரையன் முதலாயுள்ள பரதவரெல்லாருக்கும் தம்முடைய திருக்கை மலர் கொண்டு அ(மர்த்திய)ருளி "வாரீர்! பரதவரே! நீங்கள் வறுமை யெய்திச் சத்துருக்களாலே மிகவும் பீடைப்பட்டவர்கள் போலச் சஞ்சலமுற்றிராநின்றீர்! என் செய்திரால் ?" என்று வினவி யருளினார்.

அப்போது அதியரையன் எழுந்திருந்து, தம்பிரானுடைய திருவடித்தாமரைகளை வணங்கி "கேட்டருளீர் ! தம்பிரானே ! பன்னிரண்டு சங்கவற்சிரமுண்டு[1]; ஒரு மகரம் இத்துறையில் வந்து நின்று பாறு, படவு, கப்பல், சொங்கு, சம்பான், சம்போக்கு, காவளை, தோணி, நாவாய் என்கின்ற மரக்கலங்கள் பலவும் எடுத்து விழுங்கி, அடியேங்களுக்கு முதலாயுள்ள தோணி களையும், சிற்றுருக்களையும், தன் வாலாலே அடித்து, உடைத்துப் பெருவல்லம் 'முதலாயுள்ள கைவலைகளையும் எடுத்து விழுங்கியும், துணித்தும் இத்துறை விடாமல் நின்று துன்பம் செய்யா நின்றது.

ஆதலால், அடியேங்களுக்குப் பாறு, படவு ஓட்டுகின்ற தொழிலும், முத்துக்குளிக்கின்ற தொழிலும், மீன் பிடிக்கின்ற தொழிலும், சங்கு குளிக்கின்ற தொழிலும், பரதவர் என்கின்ற சாதிக்குத் தொழிலாகக் கற்பிதமாகையால், இம்மகரத்தால், இத்தொழில் நான்கும் முட்டுபபட்டதாகையால், பரதவர் மிகவும் வறுமை யெய்தி வருந்துதல் கண்டு, 'மண்ணுலகில், பரதவரில், யாரொருவர் இம்மகரத்தைப் பிடித்தார், அவருக்கு என்மகள்

---

*1. சம்வற்சரம், ஆண்டு, வருடம்.*

திரைசேர்மடந்தையரைத் திருமணம் செய்து கொடுப்பேன் என்று முரசு அறைவித்தும், இன்றளவும் இச்சாதியில் ஒருவரும் தலைப்படக் கண்டதில்லை.

ஆதலால் பரதவரும், அடியேனும் பீடைப்பட்டிருக் கின்றோம். தேவரீர் திருவுளத்துக்கு வேண்டுவன வாங்கிக் கொண்டு எழுந்தருளும்" என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரான் திருக்கை மலர்களைத் தட்டிச் சிரித்தருளி, "வாராய்! பரதவ ராசனே! பரதவரில் ஒருவர் இம்மகரத்தைப் பிடிக்கமாட்டா திருப்பாருண்டோ ? தென்னாட்டில் பரதவர்கள் இம்மகரத்தைப் பிடிக்கும் உத்தி அறியார்கள் போலும். ஆதலால் நாம் ஒரு உத்தியினாலே பெருங்கடல் மகரத்தைப் பிடிக்கின்றோம். அதற்கு விருதாக நீ வருந்திப் பயந்த இளங்கொடி, திரைசேர் மடந்தையரைத் தருவையோ ? சொல்வீர் !" என மொழிந்தார்.

## வகுப்பு

இடரற்றுத் துதித்திடு மறிவிற்சேர் கின்றவர்
இசையச்சொற் றமிழ்தெரி பலகைக்கீழ் நின்றவர்
அடல்துத்தீப் பணவா யரவைப்பூண் மார்பினர்
அலைவட்டக் கடல்கடு வதனைத்தா னுண்டவர்
கடல்மற்றப் பனை(கரி) மலையின்றோல் கொண்டவர்
கணைதொட்டுப் பகைத்தெதிர் மதனைக்கா யம்பகர்
படவெற்பைக் குனித்தெதிர் மடியப்போர் வென்றவர்
மகரத்தைப் பிடிக்கவுன் மகளைத்தா வென்றார். (181)

## *விருத்தம்*

சிகரந் திகழும் கோபுரஞ்சூழ்
தெய்வக் காழித் திருமைந்தன்
பகருந் தமிழி லினிதிருப்பான்
பரதர் கோமான் றனைநோக்கி
மகரந் தனைநாம் பிடிக்கின்றோம்
வருந்தித் தவத்தால் நீபயந்த
தருமம் புனையுங் குழல்மயிலைத்
தாராய் நமக்கென் றருள்செய்தார். (182)

**உரை**

இப்படியே தம்பிரான் அருளிச்செய்யக் கேட்டுப் பரதவராசனும் வணங்கி, "கேட்டருளீர் ! தம்பிரானே! இப்பூமி தோன்றின அன்று தொட்டு இன்றளவும் எங்கள் வமிசத்தோடலல்லது சம்பந்தம் செய்திருப்பதில்லை. இம் மகரத்தாலே இப்பரதவர் வமிசம் இறந்துபோனாலும் தேவரீர் அருளிச்செய்த காரியம் செய்வதில்லை. பரதவர் தம் மரபுக்கு இசையாது பகர்ந்த மொழி. இருநிதியம் வாங்கிக்கொண்டு எழுந்தருளும் என மொழிந்தார்.

## *விருத்தம்*

திரையுடன் மிதந்து வந்த
　　　தெரிவையை வதுவை செய்ய
உரைவுடன் வேடம் கொண்ட
　　　வேதியர் தம்மை நோக்கித்
தரைதனி லிதற்கு முன்பு
　　　சமரசம் பந்தம் செய்யப்
பரதவர் செய்யா ரென்றான்
　　　பாவமும் பிறப்பு மற்றான். (183)

**உரை**

இவ்வாறாக அதியரையன் சொல்லக்கேட்டுத் தம்பிரான் திருப்புன்முறுவல் செய்தருளி, "வாராய் ! பரதவ ராசனே ! அந்தணர் அரசர், வணிகர், வேளாளர் என்று சொல்லுகின்ற நான்கு சாதியினின்றும் விரிந்தது தொண்ணூற்றெட்டு சாதி. அவற்றில் யாவர் சிலர் முன்னைச் சென்மத்தில் செய்த புண்ணிய பாவத்தினால் ஆணும் பெண்ணுமாயிருப்ப உலகமும் அத்தன்மையாய் இரா நின்றது. இந்தப் பிறவிக்கடலை நீந்திக் கரையேறுதற்கு தருப்பையாக[1] வேடந்தரித்தவர்களை வேடத்தார் என்பதல்லது வேடத்தார் என்றொரு சாதி இல்லை காண். ஆதலால், நான் இப்பரதவர் வமிசத்திலுள்ள(வ)னொருவன். எனக்குத் தேயம் உத்தரபூமி.

---

*1. தர்ப்பைப்புல்.*

ஊர் கங்கா நதிதீரத்துப் பர(தா)புரி. என் பெயர் சங்கரன். பட்டப்பெயர் 'கயிலாயவதியரையன்'. எனக்குத் தாயும் தகப்பனும் இல்லாதபடியினாலே பித்தனாகி வேடந்தரித்துச் சுடுகாடுகள்தோறும், மன்றுகள்தோறும் ஆடித்திரிகின்ற செயல்கண்டு, பித்தன், பித்தன் என்றென்னை அழைப்பர். என்னைக் காணவேண்டியிருப்பார்கள் தங்களிடத்திலே நான் செல்லவேண்டியிருப்பதால், என்னை அடிமை, அடிமை என்று சொல்லுவார்கள்.

இப்படிச் சொல்லச்செய்யும் (நான்), என்னை வந்தித்தாரிடத்திலே சென்றும், நிந்தித்தாரிடத்தில் செல்லா நின்றும் திரிவேன். பின்பு, நான் ஒரு மலையிலே இருக்கச் சிறிதே கேட்டவர்க்கு மிகவும் சுகமாயிருப்பதொரு பேச்சுண்டு[1]. என்னிடத்திலே அநேகம் காலமாக இருந்து, நான் பித்தனானபடியாலே பிறர் சொல்ல நான் நஞ்சையுண்டேன். அந்நஞ்சை அமுதாகும்படி (பார்வதி) பார்த்தாள். ஆதலால் எனக்குத் தம்பிராட்டியாகக் கொண்டிருந்தேன். தம்பிராட்டியும் என் சொற்படியே தென்னாடு நோக்கி எழுந்தருளியிருத்தலால், நானும் தென்னாடு போந்து, கண்டு போக வந்தேன்.

நீங்கள் மகரத்தாலே மிகவும் பீடைப்பட்டிருக்கின்ற வறுமைகண்டு, நானும் உங்கள் வமிசத்தில் ஒருவனானபடியினாலே, உங்களளவில் எனக்கொரு பரிவு தோன்றியும், எனக்கு[2] இலையமற்றிருப்பதொரு உபதேச மந்திரம் அருளிச்செய்தது கொண்டாயிருக்கும் இம்மகரத்தைப் பிடிப்பதாக இசைந்தேன்.

முன்பே, பரமேசுவரி தனக்கு நராமிருகம், பசுப்பட்சி,, செந்துக்களாலே இலையமற்றிருப்பதாக அருளிச்செய்த உபதேசம் கொண்டாயிருக்கும். ஆதலால், மகரத்தைப் பிடிக்கக் குறைவில்லை. பரதவனொரு சற்றும் பழுதில்லை. நீ பயந்த சுரிகுழலைத் தருவாயா? சொல்வாயாக!" என்று அருள் செய்தார்.

---

*1. பேச்சியுண்டு என்றுளது. மேலும் இப்பகுதி தெளிவில்லை.*
*2. இத்தொடர் பொருள்படவில்லை.*

## *விருத்தம்*

சங்கரனென் பேர்பட்டம் தடங்கயிலை யதியரையன்
கொங்கவிழும் புனற்கங்கைக் கரையெங்கள் குடியிருப்பு
உங்கள்குலத் தொருவனியான் ஒண்ணுதலை வதுவைசெய்தால்
எங்கள்கிளைக்கு முன்கிளைக்கும் பிழைவாரா
தெனமொழிந்தார். (184)

### உரை

இத்தன்மையாய்த் தம்பிரான் அருளிச் செய்யக்கேட்டு மிகவும் பிரியப்பட்டு, "வாரீர்! திருவேடத்தாரே! உம்மை எங்கள் வமிசத்திலே ஒருவனாகப் பெற்றோம். அதிலும் திருவேடத்த ராகவும் பெற்றோம். ஆதலால், இப்பரதவருக்குண்டாகிய பரிதாபத்தை மாற்றவும், மகரத்தைப் பிடிக்க வல்லதொரு சக்தியை உடையவருமாயும் இருந்தீர். ஆதலால் இப்பேறு அடியேங்களுக்குக் கிடைப்பதொன்றல்ல. இனி நான், என்மகள் திரைசேர் மடந்தையரைத் தேவரீருக்கே தரக்கடவேன்.

மருங்குகின்ற பரதவர்க்கும் குறைவில்லை வாவதிரைப்
பெருங்கடல் மகரத்தைப் பிடித்தருளு மெனமொழிந்தார்.(185)

## *விருத்தம்*

வனவா ருதிசூழ் பரதவர்தம்
மரபி லொருவ ராயிருந்தீர்
சினவா ளரவற் கன்புசெயுந்
திருவே டத்தா ராயிருந்தீர்
தனிமா மகரந் தனைப்பிடிக்குஞ்
சக்தி யுடையீ ராயிருந்தீர்
இனிநான் பயந்த இளங்கொடியை
யுமக்கே தருவே னெனமொழிந்தார். (186)

### உரை

இவ்வண்ணமே அதியரையன் சொல்லக்கேட்டு, "வாராய்! பரதவராசனே! இம்மகரத்தைப் பிடிக்கவல்ல சக்தியுடையேன் என்று சொன்னாய். நீ என் வமிசத்தில் உள்ளவன் என்றாலும்,

எனக்குச் சக்தி நீ தரினுண்டாவதல்லது, வேறொரு சக்தி இல்லைகாண். இம்மகரத்தைப் பெருவலையாலே வளைத்துக் கைவலையாலே வீசிப் பிடிக்கக் கடவோம்!" என்று அருளிச் செய்யக்கேட்டு,பரதவரெல்லாரும் அதியரையனை நோக்கி, "வாராய்! பரதவராசனே! ஒருவர் ஒருவருக்குப் பெண் கொடுக்குமளவில், இன்னதேசம், இன்னஊர், இன்னவமிசம் என்று அறிந்தல்லவா பெண் கொடுக்கக் கடவது. நீ மிகவும் பேதையாய் இருந்தாய். வழிப்போவானொரு தேசாந்திரி தன்னிச்சையாலே வந்து, நான் உங்கள் வமிசத்தில் உள்ளவன் என்று சொல்ல, அவன் வார்த்தையைப் பிரமாணம் என்று கொண்டு, நம்முடைய பிள்ளையைக் கொடுத்தால், நம் குடி இழிவாகாதோ ?

பூமியில் எல்லாப் பொருள்களும் தொடலாயிருக்கும்; வமிசம் காண் ஒருவர் தொடவரிது. நாங்கள் இதற்குக் கூட்டல்ல! என்று சொல்லக் கேட்டுப் பரதவராசனும், பரதவரை நோக்கி, "வாரீர்! பரதவரே! நீங்கள் சொன்ன சிறப்பு, இவர்க்கு நாம் 'உம்' என்று சரிசொல்வதற்கு முன்பே சொல்லப்பெற்றதில்லை. நீங்கள் எனக்கு உண்டாக்கின தலைமை நிலைகுலைந்திடினும், யுகமது மாறிடினும், குடியிழிவு வரினும், நீங்கள் இதற்குக் கூட்டாகா தொழியினும் 'உம்' என்ற மொழி தப்புவதில்லை " என்று பரதவரை நோக்கி, மிகவும் கோபித்து,

யுகமது மாறினாலும் உம்மென்ற மொழிமாறேன்
மகரத்தைநீர் பிடியுமென்றான் மரணமும்
பிறப்புமற்றான். (187)

## *விருத்தம்*

வேதாவின் விதியொழிந்து மேதினிகீழ் மேலாய்ப்பின்
ஏதாகி விடினுமென் னாவிரண்டு சொல்லாதெனப்
பூதாதி யாகித்தோன்றிப் புலப்படு முயிர்கட்கெல்லாம்
மாதாவைத் தனக்குநல்ல மகளாகப்
பெற்றவள்ளல். (188)

**உரை**

இவ்வண்ணமே அதியரையன் (தன்) மகள் திரைசேர் மடந்தையாரைத் திருமணம் செய்துகொடுக்கச் சம்மதித்து, மற்றைப்[1] பரிசனங்களை நோக்கி, "மகரத்தைப் பிடிக்கும் படியான ஒருவலையும், படவும் சீராக்கிச் சமுத்திரத்தில் இரக்கும்" என்ன, அவர்களும் பரதவராசனை நோக்கி, "பன்னிரண்டு சங்கவற்சரமாகக் கரையிற்கிடப்பதொரு வலையும், படகும் உண்டோ? இத்துறையிலுள்ள படகுகளும், வலைகளும், கறையான் அரித்து, மங்கிப் பாழாய்ப் போய்விட்டன. ஆதலால் படகும், வலையும் இல்லை" என்று சொல்லக்கேட்டுத் தம்பிரானும், பரதவரை நோக்கி "வாரீர்! பரதவரே ! என்னை உங்கள் வமிசத்தில் உள்ளவனல்லவென்று சந்தேகப்பட்டு இருக்கின்றீர்கள். சந்தேகம் தீரும்படி உங்கள் முன்னே நான் ஒரு பெருவலை, கைவலை முடிந்து, ஒரு படகுஞ் சீராக்கிச் சமுத்திரத்திலே இறங்கிப் பெருவலையாலே வளைத்துக் கை வலையாலே வீசிப்பிடிக்கக்கடவேன்" என்று அருளிச்செய்து, வலைமுடிவதாகச் சம்மதித்துச் சந்திரனைச் சில்லாகக்கொண்டு, தருமதேவதையினைக் கதிராகக்கொண்டு, நான்கு வேதங்களையும் கதிர்முனையிற் கொளுவித்திருத்தி, துடையில் வைத்து (நான்கு) புரியாக முறுக்கி, அக்கதிரிற் சுற்றி, இந்திரனை ஊசியாகக்கொண்டு, அக்கயிற்றை அதிலே விட்டு, சூரியனை அடிவட்டமாக நியமித்து, கயற்றை அதில் கொளுவி, இருபத்தேழு நட்சத்திரங்களையும் கண்ணாக முடித்து, வாயுதேவனைப் பெருங்கயறாக்கி, முப்பத்து முக்கோடி தேவர்களையும் மிதப்பாக்கி, ஏழுகோடி தானவரையும் தாழ்வுக் கல்லாக்கி, இவ்வண்ணமே ஒரு வலைமுடிந்து, 'வலைமுடியும் தொழிலுக்கு இவரே வல்லவ' ரென்று பரதவரெல்லாம் கொண்டாடும்படி ஒரு வலை முடிந்தருளிப் பின்பு, சங்கபாலன் என்கின்ற நாகத்தை அடிவட்டமாகக்கொண்டு, சதுர்தேச புவனங்களையும் தாங்குகின்ற வாசுகியைக் கயறாக நியமித்து, அத்திரியிலேறிட்டு, ஐம்பத்தொரு அட்சரங்களையும் கண்ணாக

1. பற்றன என்றுளது.

முடிந்து, இருபத்தேழு[1] நட்சத்திரங்களையும் கண்ணாக முடிந்து, நவக்கிரகங்களையும் வலைக்கு மணியாகக் கோர்த்து, சக்தி சொரூபத்தை வாய்க்கயிறாகக்கொண்டு, இவ்வண்ணமே ஒரு கைவலை முடிந்தருளிச் சென்று, பழையதொரு படகைச் சீராக்குவார்போல, தாம் கரந்துகொண்டு வந்த திருவிளம் பிறையை ஒரு படகாக நியமித்து, தம்முடைய சிவ சொரூபத்தைப் பாய்மரமாக நியமித்து நிறுத்தி, அறுபத்து நான்கு கலைகளையும் (பாயா)க நியமித்து, சிவஞானத்தைச் சுக்கானாகச் சேர்ந்தருளி,

திருவலையைச் சீராக்கிப் படகின்மேல் வைத்துப்
பெருவலைப் படகுதன்னை யிறக்கினார்
பிறவாதார். (189)

## வகுப்பு

வடவையொத் தெரிசொரி விழக்கனல்
பன்மணிப் பணியணி புயத்தினர்
வளர்கயற் கொடிவழுதி மெய்த்திடும்
வகைநரி பரியிடு திறத்தினர்
அடல்மதக் கரிதனை யுரித்தெழ
கெழவரிப் புலியத ளுடுத்தவர்
அசுரர்வருக் கமுமமரர் வருக்கமும்
அடிதொழப் பதமருள் பதத்தினர்
தடவரைச் சிலைதனை வளைத்தெறி
தழலெழத் திரிபுர மெரித்தவர்
திமரமிக் கனல்பரி புரத்தொடு
தமரகப் பறையறை கரத்தினர்
படுபுனற் றிரை(யெதிர் பொருதிடுங்)
கருங்கடற் கடுபடு மிடற்றினர்
பரதவர்க் குறுபகை யொழித்திடும்
வகைதனக் கொருப்பட விளக்கினர். (190)

1. மறுமுறை என்றுளது.

### *விருத்தம்*

கரைகிடந்த வலைபடகு காணாரா தலினாலும்
திரைசுருக்கி வலைமுடிந்து பிறைபடகு நியமித்து
வரைக்குநிகர் மகரத்தை வலையொன்றால் வீசுதற்குத்
திரைக்கடலில் திருப்படவொன் றிறக்கினார் சிவலோகர்.(191)

### உரை

இப்பால் தம்பிரானார் திருப்படகைச் சமுத்திரத்தில் இறக்கக்கண்டு பரதவராசனும் தம்பிரானை நோக்கி யாது விண்ணப்பம் செய்தாரோ வென்னில்,

### அகவல்

எரியென்னக் கூற்றென்ன எழுந்தபெருங் காற்றென்ன
வரையென்னத் தோன்றுகின்ற மகரத்தின் பெருமையையுங்
கருவேடந் தரித்தருளிக் காரிகையை மணஞ்செய்யத்
திருவேடந் தரித்தவர்தம் திருமேனிச் சிறுமையையுங்
கண்டிரங்கி யதியரையன் கசிந்தவர்தம் முகநோக்கித்
தொண்டுபுனைந் தெனையாளுந் துணைவரே கேட்டருளீர்
எனையாள வரியவுமை யானேவிப் பணிகொளவோ
வனியாய மிகக்கொடுமை யடியேனுக் காகாது
அறிவொன்று மில்லாத வடியேனும் பரதவரும்
வறுமையொழிந் துண்டுடுத்து வாழ்ந்திருக்கும் படிநினைந்து
மகரத்தைப் பிடியுமென்று சொல்லிட்ட (காரணத்தால்)
மகரத்தால் மேனியிலே தீங்குவரின் (மேதினியில்)
தனித்துநின்று புவிவிளக்கும் சந்திரசூ ரியளவும்
எனக்குமென் கிளைக்கும் எழுபிறப்பும் நரகன்றோ
வெ...............யா மடியார்க் கடிமையன்றோ புவியெல்லாம்
அடியார்நா தனையேவிப் பணிகொள்வ தடைவல்ல
ஆதலா லிசையேனா னருந்தவத்தி னாற்பயந்த
தாதுசேர் குழல்மயிலைத் தருகின்றே னுமக்கென்றான்.
நெறிகொடிய மகரத்தின் நிலைகண்டுந் தேவரீர்
சிறியவுரு வதுவுண்டுந் திருவேடத் தியல்கொண்டும்
வறுமையொழிந் தடியோங்கள் வாழ்ந்திருக்கும் படிநினைந்து
மெறிகடலி லுளம்(வைத்துப் பெருமகரம் பிடித்தருளக்)
(குறித்திட்டீ) ரினித்திருவைத் தருகின்றே னுமக்கென்றான். (192)

**அன்றியும் - வேறு**

பாதி மதிபுனை பரமனார்
பரதர் கோமான் தனைநோக்கி
பேதை யாகி யிருந்தாயே
பெருமை சிறுமை யொன்றுண்டோ
குன்று போல வடிவுடைய
கோலக்கை வேழத்தின் கோடுதன்னைச்
சென்று தாவிப் பிடுங்கியது
சிறிய உருப்பெற்ற சிங்கமன்றோ
வாத யிரணிய னுடல்பிளந்து
அளைந்த கோபச் சிங்கந்தனை
பாத வுகிரால் கோத்தெடுத்துப்
பறந்த தொருசிறு சிம்புளன்றோ
ஆத லால்நீ யதுநினைந்து
அஞ்ச வேண்டாம் பரதவனே.
பேதை பாக ரடியார்தம்
பெருமை யதுகேட் டறியாயோ
முதலை யதுதின்று செரித்துவிட்டு
மூவாண் டளவில் முதலைதின்ற
மதலை தனைத்தா வென்றிசைத்துத்
தமிழால் தந்தா னொருமறையோன்
எலும்பு தனையொரு பெண்ணாக்கி
எண்ணா யிரவமண ருடைநெஞ்சம்
கலங்கும் படியிசை வாதுசெய்து
கழுவில் வைத்தா னொருசிறுவன்
புரத்தி லவுணர்கள் வெந்துவிழப்
பூவை பாகர் நகைத்துவிட்ட
எரிக்கு நடுவே யுடல்குளிர
யிருந்தார் கண்டாய் ஒருமூவர்
ஆல மற்ப மருந்தான்
பக்தி பூண்ட பரதவனே!
சிவனார்க் கன்பு பூண்டவர்க்குத்
தீங்கு வருமோ வெனமொழிந்தார். (193)

## விருத்தம்

பண்ணார் தமிழால் முதலைதின்ற
பாலன் தனையழைத்தா னொருமறையோன்
எண்ணா யிரம்வல் லமணர்கழு
வேற முனிந்தா னொருபாலன்
கண்ணார் புரத்தி லெழுந்தழலில்
நடுவே யிருந்தா ரொருமூவர்
பெண்ணார் பாக ரடியார்சீர்
பேசு மளவோ வெனமொழிந்தார். (194)

### உரை

இத்தன்மைத்தாய் அதியரையன் சொல்லக்கோட்டுத் தம்பிரான் திருப்புன்முருவல் செய்தருளி "வாராய்! பரதவ ராசனே! சிறுமை பெருமை யென்றில்லைகாண். பூமியில் யானையின் பெரியதொரு மிருகம் இல்லை. யானையின் மருப்பைப் பிடுங்கா நின்றது சிறியதொரு சிங்கம். அதுவன்றியும் இரணியவதம் செய்து கருவத்துடன் இருந்த நரசிங்கத்தை எடுத்துக் கொண்டு பறந்தது மிகவும் அற்பமானதொரு சிம்புள்[1]. ஆதலால் நீ சிறுமை பெருமை என்று சொல்லக்கடவையோ ? நீ மிகவும் பேதையாய் இருந்தாய்" என்று திருவாய் மலர்ந்தருளி யாது செய்தாரோ வெனில்:

### அகவல்

அதியரையன் தனைநிறுத்தி அருள்புனையும் நந்தியுடன்
மதிபுனையும் சடைமுடியார் வந்துகடற் கரைகுறுகிப்
பரிவினுடன் தனிச்சேலை பரிவட்ட மதுசாத்தித்
திருமருங்குல் தனிற்சனகச் சிறுசெட்டை புனைந்தருளி
முடிமீது தனித்தொப்பி முகமலரப் புனைந்தருளி
பொடிசுடுங் கனலென்னப் புதுநீறு மெய்க்கணிந்து

---

*1. இரணியனைக் கொன்ற நரசிங்கத்தினைச் சிவபெருமான் சரபங்கப்பறவை வடிவுகொண்டு அழித்தார். (நரக்காட்டகவரியை நற்சரபமாகச்சுருக்கினார் நஞ்சுண்ட சிவனார்.)*

மார்பதனிற் புனைகண்ட மதுமாலை மணம்வீச
வீரகற் பகரென்று விருதுசின்னம் பரிமாற
பொருகடல்மா முரசுடனே புகழ்வீர முரசதிரச்
செருவடிவாள் வேல்வில்லுஞ் செங்கைதனிற் புனைந்தருளி
வென்றிபுனை மகரத்தை வீசிவலை யாற்பிடிக்கச்
சென்றுபட வேறினராம் சேவேறும் பரதவனார். (195)

## வகுப்பு

மலைமக ளாரப் புணர்மாமுலை
வடுவிடு கோலத் திருமார்பினர்
மலரயன் மால்பெற சிரமாலைகள்
முதிர்(வெண்) ணீற்றணி தோளினர்
கொலைமத வேழத் துரிபோர்வையர்
குறுகல் லூரைச் சுடும்வாளியர்
பலதலை யாலப் பணிவேணியர்
பரதவ னாகிப் படவேறினர். (196)

## *விருத்தம்*

பணிமகரந் தயங்குகொடிப் பரதவர்கோன் பயந்தளித்த
கனமகரம் புனைகுழலைக் கைபிடிக்கக் கறைக்கண்டர்
இனமகரஞ் சொற்கடலி லியல்வனபோல் விளையாடும்
சினமகரம் பிடித்தருளச் சென்றுபட வேறினாராம். (197)

## உரை

இவ்வண்ணமே தம்பிரானுடைய மகரப்போரைக் காண வந்து நின்றவர்கள் பிறவிக்கடல் கடந்து கரையேறவும்; பரதவர் வமிசத்துக்குப் பிரதானமாகி விளங்குகின்ற மகரக்கொடி, அட்டகுல பருவதங்களின் கொடுமுடியின் சிகரமேறவும்; அதியரையனும் வருணவல்லியும் சிவலோகமேறவும்; குமாரக்கடவுள் மகரமான வடிவொழிந்து, மருவும் தோகை மயிலேறவும்; திரைசேர் மடந்தையாராகிய (தம்பிராட்டி) மானிடமாய (நிலை) மாறித் தம்பிரானுடைய இடப்பாகத்திலே

(குடியே)றவும்; தம்பிரானும், திருநந்திதேவரும் சென்று திருப்படவிலேரி நிற்கக்கண்டு, பரதவரும் அந்நகரிலுள்ளாரும், "என்னே ! என்னே !! ஒரு ஆண்டாருடைய செய்தியிருந்தபடி பாரீர்" என்று சொல்லச் சருவலோகங்களையும் சங்கரிக்கத் தக்கதொரு கோபத்தினையும், மகாமேரு ப(ருவ)தத்தை யொத்ததொரு ஆங்காரத்தினையும், சண்டமாருதமென்னத்தக்க விசைவினையும், காலன் என்னத்தக்க கொலைத் தொழிலினையும், உடையதொரு மகரத்தைப் பிடிப்பதாக விசையாநின்றார். இதற்கிசைந்து தானும் இவருடனே படவேறி நிற்கின்ற சிற்றாண்டியும் பேயனாயிருந்தானாதலினால் இவருடைய சரீரகதி மிகவும் அற்பமாயிராநின்றது. மோகம் என்கின்ற மயக்கம் இப்படிச் செய்விக்கும். ஆகாத 'இச்சை, போகம் இரண்டும் தவிர்த்துப் (பி)ச்சை யேற்றுண்ணப் பிறவியறுக்கும்' என்கின்ற பழமொழி கேட்டறியாரோ ?

அநேகம் புண்ணியம் செய்தவர்களுக்காகும் திருவேடந் தரிக்குங் கருத்துண்டாவது கிடையாதொரு பதத்தைப் பெற்று மீளவும் இவர் சங்கு[1] சார் போகத்திலே விழுவதாக இசைந்தார். இவர் நல்ல தவசியாக இருந்தாரே !" எனறு பலரும் நிந்தாத்துதி சொல்லக் கேட்டுத் தம்பிரானும் பரதவரை நோக்கி, "வாரீர்! பரதவரே!! இரண்டு அச்சு வகுத்துப் பின்பு அந்த (அச்சுக்களின்) நடு(வே உலோகங்களை) வைத்தடிக்கப் பணங்காசுகள் (ஆகி) அவையெல்லாம் இலாஞ்சினையாக இருந்தாற்போல, சகல, நிட்களமென்று யாவர்க்கும் அளவிடற்கரிய சிவலோகம் பரிபாலிக்கப் பெண்ணும் ஆணுமாயிருப்ப, உலகம் அத்தன்மையாய் இராநின்றது.

அதுவன்றியும் எல்லா உயிர்களையும் படைக்கத்தக்க, சரோருகமூர்த்தி[2], கலைமகளைத் தன் நாவிலே வைத்துக் கொண்டார். சருவ வியாபியாயிருக்கின்ற (திருமால்) விசயலட்சுமியைத் தன் மார்பில் வைத்துக்கொண்டான். ஆதலால் ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், என்கின்ற நான்கும் சரீரமெடுத்தாரொருவருக்கும் கைவிடலாகாது காணும்.

---

*1. = ?. 2. பிரம்மா*

என்றாலும் இத்தன்மை தபசிகளுக்கு ஆகாது. மிக்க(பசி)தாகம் தணித்துவிட்டுப் பின்பு தன்மேல் கருத்து வைக்காமல் இருக்க வேண்டும். முன்னே நான் உங்களுக்கு ஒரு வசனம் பெருக்கக் கெட்டியாய்ச்[1]சொன்னேன். இத்தன்மை நான் வந்த காரணம் உள்ளபடி சொல்லில் உங்களை ஒரு மகரம் பீடைப்படுத்துகின்ற செய்தியும், மகரத்தைப் பிடித்தவர்க்கு உன் மகள் திரைசேர் மடந்தையரைத் திருமணம் செய்து கொடுப்போமென்று முரசறைவித்த செய்தியும், எங்கள் இருப்பாகிய பரதாபுரியில் வந்து பலரும் சொல்லக்கேட்டு மகரத்தைப் பிடித்துப் பெண்ணுங் கொள்ளுவதாகச் சம்மதித்துப் போதுகின்ற அளவில், இவ்வழிப் போக வொண்ணாதபடியாலே வேடந்தரித்து வந்ததாயிருக்கும். ஆதலால் நீங்கள் வேடபங்கம் சொல்லக்கடவீரல்லர். அது வொழிந்து, என்னை அற்பனென்று சொன்னீர். அகத்தியன் ஒரு அங்குட்ட மாத்திரை சரீர கெதியாய் இருக்கச் சப்த சமுத்திரங்களையும் ஒரு கையாலே அடக்கினான்.

அதுவன்றியம் அகத்தியன் ஒருக்கால் சந்திராதித்திய பதமளவும் உயர்ந்துள்ள விந்திய பருவதத்தை ஒரு குன்று மாத்திரையாக ஒரு கையாலே அடக்கினான். ஆதித்தன், ஒரு கண்ணாடி மாத்திரைகலமாயிருந்தும் உலகங்களெல்லாம் நிறைந்து நிற்கின்ற இருளை மூடுகிறான். அதுவன்றியும் வாயு கண்ணுக்குப் புலப்படாதிருப்ப, ஒரு ஆங்காரத்தைக் கொண்டு மகாமேரு பருவதத்தின் கொடுமுடியை முறித்துத் தெற்குத் திக்கில சமுத்திரத்தில் எறிந்தான்.

ஆதலால் (அன்பர்) சிலரை உருக்கேடுகள் சொல்லக் கடவீர்களல்லர். இம்மகரத்தின் பெருமையையும், என் சிறுமையையும் கண்டீர். அமுத ககனம் செய்த மந்திர பருவதத்தின் தாம்பாகிய வாசுகியாலே வலை முடித்துக் கொண்டாலும்; இம்மகரத்திற்கு வலு நில்லாது. நான் இம்மகரத்தைப் பெருவலையாலே வளைத்துக் கைவலையாலே பிடிக்கின்றேன். இதுகாண்[2] பிரமாண மென்று திருவாய் மலர்ந்தருளித் திருநந்திதேவரைத் திருக்கண்சாத்தி, "வாராய்!

*1, கொரட்டியாய்ச் என்றுளது. 2. பீறாமபீ னென்று.*

நந்தி!! இப்படவை ஓட்டுவாயாக" என்ன அவரும் சம்மதித்து முன்பு பிரளையம் கோத்த காலத்தில் தம்பிரானும் பிராட்டியும் எழுந்தருளியிருந்த திருத்தோணியும், அத்தோணி செலுத்திய சலமயனும் தாமுமாய் வகுத்த வீரக்கொடியைப் பாய்மரத்தில் கட்டிச்சென்று நிற்க, அது அம்மகரத்தைக் காட்டி அழைப்பதுபோல் நின்றியங்கவும்." வேலா வேலா" என்று அனுகரணத்துடனே பாய்வலித்துத் திருப்படவைச் செலுத்தத் தம்பிரான் திருப்படவிற் கிடக்கின்ற கைவலையை எடுத்து முன் கையில் ஏறிட்டுக்கொண்டு, சமுத்திரத்தின் ஏழு யோசனை செல்லுமளவில், தம்பிரான் எழுந்தருளி வருகின்றதைக் கண்டு ஆச்சரியப்பட்ட (மகரம்), நம்முடைய சாபம் தீருதற்கெல்லை யின்றோவென்று கருதி மிகவும் களிப்பெய்திச் சமுத்திரம் சேறெழும்படிச் சுழன்றோடி மேலும் கீழும் சப்த லோகங்களும் ஊடுருவும்படிக் குதித்துப் பாய்ந்தது. கரையில் நிற்கின்ற நகரிசனமும் பரதவரும் பயந்தோடும்படி வாய்விட்டுத் திருப்படவை நோக்கி மகரம் ஓடிவரக் கண்டு தம்பிரானும் திருநந்திதேவரைத் திருக்கண் சாத்தியருளி, "வாராய் ! நந்தி !! படகைக் குறுகச் செலுத்து" என்று திருவாய் மலர்ந்தருள, அவரும் திருப்படகைக் குறுகச் செலுத்திச் சென்று மகரத்தைக் குறுகி,

திருவலையை ஒருதோளிற் சேர்த்திருத்தி (யேறிட்டு)
வருமகரம் வீசினார் மதிசூடும் பரதவனார். (198)

## வகுப்பு

உருவாய் உருபலவாய் அதிலுயிராய்
உயிரில்வா னவர்வெளிர்வா
ளரவொடு நாண்மதி உயர்வா
னதிபொதி வேணியர்
அருள்சேர் விழியுமை யாள்தனை
அமைநிகர் தோளினர்
அரிகோ டுகள்கொடு தேடிட
அரிதாகிய விருதாளினர்

பெருமத[1] னுடல்நீ ரெழநுதல்
வேல்விழி புரியோகினர்
புகர்மா மதவிடு போர்வையர்
பொ(றி)சேர்புலி யதளாடையர்
மருவார் திரிபுரம் நீறெழ
வகைமேவிய தனிவாளியர்
மதியா கியபட வோடிட
வலைவேலையில் வலைவீசினர். (199)

## *விருத்தம்*

அனுதினமாய் நிலம்புகழும் அதியரையன் திருமகளார்
புனல்முடியா ரிடுசாபம் போமென்றே மனமகிழ்ந்து
கனதிரைவா ருதிகலங்கக் களித்துவரும் மகரத்தைத்
தனிவலையால் வீசினராம் தழலேந்தும் பரதவனார். (200)

### வேறு

கொத்துத் தமிழ்சேர் புனற்கூடல்
கோலக் கதிர்வேல் மீனவர்க்கு
முத்துக் குளிப்பார் திருமகளார்
முலைப்பூந் தடத்துத்[2] தாங்குளிப்பச்
சுத்தப் பிறைத்திண் படவோடிச்
சுருதி வலையால் மகரத்தைப்
பத்துத்[3] திரைப்பார் கொண்டாடப்
படுத்தார் ஒன்றிற் படாதார். (201)

## (வகுப்பு)

விடமுமிழ்[4] பற்கட் செவிப்பணி
விதமொடு சுத்தும் புயத்தினர்
அருளொடு முற்றித் திருப்பதம்
அழகொடு வைத்துக் குளிப்பவர்

*1. பெருமாத என்றுளது. 2. தளத்து என்றுளது. 3. பாத்து என்றுளது.*
*4. இப்பாடலில் மூன்று வரிகளே உள்ளன.*

கடலமு (த)த்ததைக் கெடுத்தொரு[1]
கடுவுரை சுற்றக் களிற்றினர்
கனன்மழு வேற்றிக் குரற்பிணை
காவ சனத்திற் பொறுத்தவர்
வடவரை விறகைப் பிடித்தவர்
வகையழல் பற்றச் சிரித்தவர்
மறிகடல் சுற்றிக் குதித்தெதிர்
வருமக ரத்தைப் பிடித்தனர். (202)

### உரை

இவ்வாறே தம்பிரான் வீசியருளின திருவலையிற்பட்டுப் பாய்ந்து மகரம் வாய்விட்டபோது யாது நிகழ்ந்ததோ வெனில்:

### வகுப்பு

சிகரப்பொற் கிரிநின் றலைவுற எழுதரைச்
சுற்றிச் சுழல எண்டிசை வெருவிட
முகிலுட் டத்திக ழண்டர்கள் மறுகிட
முடிபற் றுத்திக வெம்பணி பயமுற
வகிலத் திலதந் தங்கிட உத்தியி
லணிமுத் தத்தொடு சங்குகொள் பரதவர்
மகளைக் கட்டி வருந்திடு மிறைவர்
தம்வலை யிற்பட்டு மறித்தது மகரமே. (203)

### உரை

இத்தன்மைத்தாய் தம்பிரான் வீசியருளிய திருவலை யுடனே பாய்ந்து மகரம் மறித்து வாய்விட்டபோது யாது நிகழ்ந்ததோ வெனில்,

### அகவல்

| | | | |
|---|---|---|---|
| குரைகட | லேழும் | குலைகு | லைந்தன |
| அருவரை | யெட்டு | மலைம | லைந்தன |
| மேகமோ | ரேழும் | விதுவி | துத்தன |
| நாகமோ | ரெட்டும் | நடுந | டுங்கின |

1. கொடுத்தொரு எனல் பொருந்தும்.

| | | | |
|---|---|---|---|
| பாதல | மேழும் | பதைப | தைத்தன |
| போதம | மெட்டும் | புடைபு | டைந்தன |
| இசைநதி | யேழும் | இரையி | ரைந்தன |
| திசைகளோ | ரெட்டும் | திகைதி | கைத்தன |
| மண்ணுல | கேழும் | மறும | றுகின |
| விண்ணுல | கேழும் | வெருவெ | ருவின |
| இகலுறு | மென்று | யிரங்கினன் | சேடன் |
| உகமுடி | யோவென் | றிரங்கினன் | நான்முகன் |
| காற்றெழுந் | துலகு | கலந்த | தோவெனப் |
| பாற்கடல் | பெருமாள் | பள்ளி | உணர்ந்தனள் |
| மேரு | மால்வரை | வேர்குலைந் | தனவென |
| வாருதி | நேமி | மால்வரை | யுடைந்தது |
| பதினெண் | கணமும் | பதறி | யோடினர் |
| மதியுங் | கதிரும் | வான்புக் | கொளிந்தனர் |
| கரையில் | நின்றவர் | கலங்கி | யோடினர் |
| அருளதி | யரையநின் | றுண்டார்க் | கிரங்கினன்.(204) |

## *விருத்தம்*

அலைகடல் படவதேறி ஆதிநா யகர்வீசும்
வலையுடன் பட்டுமோதி மகரம்வாய் விட்டபோது
நிலைகுலைந் தென்பரேழும்[1] நீரெழுந்தன வெ(வ)ற்பெல்லாம்
அலைகடல் கடந்ததும்பர் அம்பரம் நிறைந்துநின்றார். (205)

**உரை**

இவ்வண்ணமே மகரம் வலையிற்பட்டு வாய்விடுகின்ற செயற்பாடறியாமல் (அதி)யரையன் மிகவும் பயமுற்று "நான் சுகித்திருப்பது காரணமாக மேல் விளைவது கருதாமல் திருவேடத்தாரை மகரத்தின் முன்னே செல்லவிட்டேனே!" என்று உருகி:

அஞ்சு புலனும் நடுநடுங்க
அன்புடனே உயிர்நடுங்க

1. தன பாரேழும் எனல் பொருந்தும்.

நெஞ்சு நடுங்க நின்றா
னொன்றிப் பரதவர்கோன். (206)

## *விருத்தம்*

வம்பு செய்தே னருவினையேன்
வாழ்ந்துண் டிருக்கும் படிநினைந்து
தும்பை முடிப்பா ரன்பர்தமைச்
சுறாவின் முன்னே விட்டேனே
வெம்பி யெழுகின் றதுசுறாவும்
விளைவ தெவ்வா றறிகின்றிலேன்
இம்ப ருலகி லெனையொழிந்திக்
கொடுமை செய்வா ரிலையென்றான். (207)

## உரை

இவ்வாறே அதியரையன் வருந்துகின்ற காலத்துத் தம்பிரான், அற்பமான சிலந்தி நூலாலே ஒரு சிங்கத்தைப் பிடித்தாற்போன்று, மகரமாகிய மகாமேரு பருவதத்தைப் பிடித்தருளித் திருவலைக் கயிற்றைத் திருக்கரத்திற்கொண்டு, திரு(ப்பட)வைப் பாய்மாறி மீண்டும் கரைக்கே செலுத்த, மகரத்தின் குன்று பாதி உடன் உலககத்துக்குத் தோன்றுமளவும் திருக்கயிற்றை வாங்கித் திருப்படவினின்றும் இறங்கி;

பரதவர் பரிவுடனே யிரங்கிப்
பணிந்து புகழ்ந்தேத்தக்
கரையிலேறி வலையின் கயிற்றைக்
கைப்பிடித்து நின்றனராம். (208)

## *விருத்தம்*

கொந்தகராய் மதுரையிலே குதிரையிடுங் காலம்
குதிரைகொண்டு சாற்றவராய் வழியியற்றுங் காலம்
வந்தவண்ண மடியேனை வழிமாற்றுங் காலம்
வானுளவன் படவேறி வலைவீசுங் காலம்

சிந்தையிலே திருநீற்றுக் கொடிதோற்றுங் காலம்
தீவினையேன் கண்களிலே தேனூறுங் காலம்
அந்தமில்லா வானந்தக் கரைபுரளுங் காலம்
அடியனேன்[1] பணிகொளுங் காலமின்று கண்டேனே. (209)

**வேறு**

அணிமுடி யாதியமரர் பெம்மான்
ஆனந்தக் கூத்தன் அதுசமயப்
பணிவகை செய்யப் படவதேறிப்
பாரொடு விண்ணோர் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
பேரரு ளாளன் பெண்பாலுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
வகையறிவா ரெம்பிரான் ஆவாரே! (210)

**உரை**

இவ்வண்ணமே திருவாதவூரரும் திருவாசகம் பாடி யருளும்படியாகக் கொண்டு வந்த திருவலைக் கயிற்றை அதியரையன் கையிற் கொடுத்தருளி "வாராய்! பரதவராசனே! பரதவரெல்லாரையும் கூட்டி, இம்மகரத்தைக் கரையேற்றுக !" என்று திருவாய்மலர்ந்தருள, அதியரையனும் பரதவரெல்லா ரையும் கூட அழைத்து, "இக்கயிற்றைப் பிடித்து மகரத்தைக் கரையேற்றும்" என்று சொல்லப் பரதவர்கள் அதியரையனை நோக்கி, "மிகவும் அற்பமான கயிற்றைக் கொண்டு மகாமேரு பருவதத்தை ஏற்றலாகுமோ ?" எனறு சொல்லத் தம்பிரானும் பரதவரை நோக்கி, "வாரீர்! பரதவரே !! இக்கயிறு, பரமேசுவரி திருத்தாலிக் கயிற்றுக்குள்ள வலிமையாயிருக்கும். ஆதலால் இக்கயிற்றைக்கொண்டு மகாமேரு பருவதத்தைப் பூட்டி, நவகண்டப் பிருதிவியிலுள்ள பிராணிகள் எல்லாம் கூடி வாங்கினாலும், மகாமேரு பருவதம் வேர் பரிந்து வருமேயல்லாது, இக்கயிற்றுக்கு ஒரு சேதமும் வராது. நீங்கள் யாதொரு பிரகாரத்தால் இம்மகரத்தைக் கரையேற்றும்" என்று தம்பிரான் அருளிச்செய்யப் பரதவ ரெல்லாருங்கூடி வாங்க, ஒரு

1. அடியேன் மணிகொள்தில்லை கன்றேனே என்றுளது.

சற்றும் வாங்க வொண்ணாதாய், அனைவரும் கை சலித்து நிற்கத் தம்பிரானும் அதியரையனை நோக்கி, "தென்னகத்திலுள்ளார் இயற்றியர்[1] களாயிருந்தார்கள்; யாதொரு தொழிலும் இயற்றலல்லது பெலமுடி போகாது.

பரமேசுவரன் திரிபுரதகனம் செய்கின்றபோது மகாமேரு வில்லாகவும், வாசுகி நாணாகவும், மகாவிஷ்ணு கோலாகவும், முப்பத்து முக்கோடி தேவர்களும் தேராகவும், வாயு சிறகாகவும், பிறை முனையாகவும், அக்கினி கூர்மையாகவும், வேதம் நான்கும் புரவியாகவும், பிரம்மா சாரதியாகவும், (இருக்க) (நெற்றி) நேத்திரத்தாலேகாண்[2] திரிபுர தகனம் செய்தார். ஆதலால் யாவர்க்கும் பலத்தால் செயலாவதொன்றில்லை" என்று திருவாய் மலர்ந்தருளி, திருநந்திதேவரைத் திருக்கண் சாத்தியருளி, "வாராய்! நந்தி!! அதியரையன் மகரத்தைக் கரையேற்றுவாய்" என்று அருளிச்செய்ய, அவரும் சம்மதித்து, வலதிசை சிவமாகவும், இடதிசை சக்தியாகவும் தியானித்து, வலத்தும் இடத்தும் கயிற்றை முடிவாங்கியருள :

கடல்யோ சனைவற்றக் கரையில் நின்றார் பயந்தோட
வடவரை போலே மகரம்
வந்து கரையே றியதாம். (211)

## *விருத்தம்*

செறிவின் பயனாம் திருநந்தி
தேவர் சிவசத் தியைநினைந்து
முறுகுந் தேயத் திருக்கயிற்றை
முளரிக் கயிற்றால் பிடித்தருளி
எறியுங் கதிர்வேல் பரதவர்கள்
எல்லாம் திகைத்து நின்றிடவே
மறுகுங் கடல்யோ சனைவற்ற
மகரம் கரையேறி வந்ததுவாம். (212)

## உரை

இத்தன்மைத்தாய் மகரம் வந்து கரையேற அதியரையன் கண்டு பிரியப்பட்டுத் தம்பிரானுடைய திருவடித்தாமரைகளைப்

*1. விளங்கிற்றிலது, 2. யந்திரத்திலே என்றுளது.*

பூண்டுகொண்டு, "தம்பிரானே! இந்தப் பரதவர் சாதியை ஈடேற்றியருளினீர். இனித் திருக்கலியாணம் செய்யும்படி எழுந்தருளும்" என்று (வேண்டித்) தம்பிரானைக் கூட்டிக் கொண்டு தன் மனையில் செல்லுமளவில், தம்பிரான் மகரத்தைப் பிடித்துக் கரையேற்றித் திருக்கலியாணம் செய்ய வருகின்ற செய்தி கேட்டு, மிகவும் துயரம் எய்தி, "நாம் இன்று ஓர் ஆண்டாருக்கு நம்முடைய பிள்ளையைக் கலியாணம் செய்து கொடுத்தால், வமிசத்திலுள்ளார் எல்லாம் ஏசுவார்கள். அதனைக் கேட்டுக்கொண்டிருப்பதில் நானும் என் மகளும் மரிக்கக் கடவோம்" என்று துணிந்து வருணவல்லி, தானும் நஞ்சை யுண்டு, தன்மகள் திரைசேர் மடந்தையார்க்கும் கொடுக்க:

கஞ்சமா லயன்தேடு(ங் கடுக்கை)முடி யான்தானுண்ட
நஞ்சையமு தாக்கிவல்ல நாயகியு மமுதுசெய்தாள். (213)

## *விருத்தம்*

கஞ்சமா மடந்தைக் கோனும்
கலைத்தமிழ் மடந்தைக் கோனும்
செஞ்சொல்வா னவரும் நின்று
சிவசிவா முறையோ வென்ன
அஞ்சலென் றரனார் தாமன்
றமுதுசெய் தருளும் வஞ்ச
நஞ்சமு தாக வல்லி
நாயகி யமுது செய்தாள். (214)

தொண்டருய்த் திடவே வெற்பில்
தோன்றிய சுருதி யென்னத்
தெண்டிரை யுடனே வந்து
சேர்ந்தசெந் துவர்வாய்க் கிள்ளை
அண்டர்தம் பெருமான் முன்னா
ளாலநஞ் சமுது செய்யக்
கண்டிருந் தனமே யென்று
கடுகிநஞ் சமுது செய்தாள். (215)

## உரை

இவ்வாறாய் நஞ்சுதனைக்கொண்டு, தம்முடைய மாதாவாகிய வருணவல்லிக்கு பிராணவியோகம் பிறக்கக் கண்டு,

தம்பிராட்டியும் நம்மைவேண்டி நம்முடைய மாதா இறந்துவிட, நாம் இறந்துபடாமலிருக்குமது யோக்கியமல்ல வென்று கருதிப் பிராணவாயுவைச் சுழிமுனை நாடி வழியாகக் கொண்டுபோய் பிரம்மரந்திரத்திலே வைத்து, மாதாவின் அருகே தாமும் செத்தாரைப்போல் பள்ளிகொள்ளுகின்ற காலத்து, மிகவும் பிரியத்துடனே அதியரையன் சென்று பரிசனத்தாரை நோக்கித் திருக்காவணமிட்டு அலங்கரிக்கச் சொல்லித் தன்மனை புகுந்து, மனைவியும் மகளும் மாண்டு கிடக்கின்ற செயல்கண்டு யாது செய்தானோவெனில் :

## *விருத்தம்*

முத்துச் சலாமு முழுதுடைய
முதல்வ னுரைத்திடப் பரதவர்கள்
எத்திசையும் பவளக் கால்கள்
(எழிலாய்ப் பற்றி) நாட்டினராம்
முத்துப் படவே கயிறாக
முடிந்து பொன்னால் வேய்ந்தனாரம்
கொத்து மரகத மழுத்தினராம்
கோமே தகவடம் தூக்கினராம்.

வயிரத் தாலே வளைபோட்டு
வயிடூ ரியமாய்ப் பரப்பினராம்
பட்டுத் திருக்குடன் தேவாங்கால்[1]
பரந்த மேற்கட்டி கட்டினராம்
எட்டுத் திசையிலும் வாசலிலும்
இலங்கு தோரணம் கட்டினராம்
மாட கூடத்துங் கோபுரத்தும்
வண்ணப் பாவைகள் நிறுத்தினராம்.

அடல்மா மகரக் கொடிநிரைத்து
அயிரா பதமும் நிறுத்தினராம்
கடல்மா முரசு தன்னுடனே
கனக முரசும் நின்றதிர

---

1. = ?.

வர்க்க விற்கொடை பலதூக்கி
வாழை கமுகுஞ் சோலைசெய்து
திருக்கா வணமிட்டுப் பரதவனைச்
சென்று பரதவர் கண்டனராம்.

திருக்கா வணமிட்டுக் கொண்டாடி
செம்பொன் மாணிக்கப் பீடத்தின்மேல்
பெருக்கா றுடனே பிறைசூடும்
பெருமான் தன்னை யினிதிருத்தி
வளைந்த திருக்கடல் அரசாளும்
மான வீரன் அதியரையன்
விளைந்த காரிய மறியாமல்
விரைந்து சென்றுதன் மனைபுகுந்து. (216)

**உரை**

மனைவியும் மகளும் மாண்டுகிடக்கின்ற கிடைகண்டு யாது செய்தானோவென்னில் :

**அகவல்**

செய்வ தேது மறியாமல்
தியங்கி மயங்கித் திருமகளார்
கைக ளிரண்டுங் கண்ணில் வைப்பான்
கால்க ளிரண்டும் முகத்தில்வைப்பன்
என்னே விதியே எனத்தளர்வான்
ஏங்கி மயங்கிப் புரண்டழுவான்
அன்னே அன்னே மறந்தனையே
ஆற்றே னாற்றே னெனவழுவான்.

சாலத் தளர்ந்து நின்றழுதென்
தலையில் நெருப்பிட்டு வருந்தாமல்
மாலைக் குழலாய் என்னுடைய
வயிற்றில் நெருப்பை யிட்டனையோ
பேதா யுனைப்பெற்று வருந்தாமல்
பெறாதே யிருந்தே னாமாகில்
கோதா யுடல்நிற்க வுயிர்கனலாய்க்
கொளுத்தி எரிய வேண்டாமோ.

மானங் குடிகொண்ட பாவிக்குநீ
மகளாய் வந்து பிறந்தனையோ
யானும் வருவே னிப்பொழுதே
என்னே மகளே யெனவழுவன்
மன்னு மகரம் பிடித்துன்னை
வதுவை செய்ய வந்தவர்க்கு
என்ன மாற்றம் சென்றுரைப்பேன்
என்னே என்னே யெனவழுவன்.

நின்னைப் பயந்த பாவியைப்போல்
நீயும் வன்னெஞ் சாயினையோ
என்னைத் தளர்வித்த என்மகளே
ஈடே றேன்நான் ஈடேறேன்
அடியேன் வயிற்றில் நின்றெரியும்
அழல்நீ சற்று மறிந்திலையோ
பிடியே யனைய நடைமயிலே
இனியெப் பிறப்பில் காண்பேனான்.

எனக்கு நீர்க்கடன் தீக்கடன்நீ
செய்து விடுகின்ற இயலொழிந்து
உனக்கு நீர்க்கடன் தீக்கடன்நான்
செய்வ துலகுக் கடவோதான்
ஈன்ற பாவி நின்றழுதால்
மக்கள் இரங்கா திருப்பர்களோ
மூன்று திருக்கண் ணுடையானே
முறையோ முறையோ வெனவழுதான்.

நினைத்த மலர்கொய்து கறியாக்கி
நின்று திருமுகம் வேர்வரும்ப
எனக்கு மணச்சோ றிடுவாரார்
என்செய் வேனென் றரற்றிடுவன்
ஆவி தளர்ந்தேன் அறிவழிந்தேன்
ஆவி போகப் பிணமானேன்
பாவி மகளே எனக்கதறிப்
பதறி விழுந்தான் பரதவர்கோன். (217)

## *விருத்தம்*

வேர்த்த முகமும் மணச்சோறும்
விருந்துந் திருந்தா மென்மொழியும்
பார்த்த கண்கள் களிகூரப்
பார்த்தங் கிருந்தே நினவழிய
ஆற்றல் திருநீற் றண்ணல்தனக்
கடியே னாமன் றுரைத்துவந்த
வார்த்தை யிரண்டாக் கினையோ
மகளே மகளே யென்றழுவான். (218)

மான மதுவே நினைந்தடியேன்
வரத்தைச் சிறிதும் நினையாத
ஞான வமுதன் தனக்கிசைந்தேன்
நஞ்சை நீயும் உண்டனையோ
ஊன மில்லா நீறணியும்
ஒருவர்க் குங்கள் செயல்சொல்லி
யானும் வருவே னிப்பொழுதே
என்றா னிரண்டு சொல்லாதான். (219)

### உரை

இவ்வண்ணமே அதியரையன் மிகவும் அரற்றி மகளார் மேலே விழுந்து அழுது தன் மனையினின்றும் புறப்பட்டுச் சென்று, தம்பிரானுடைய திருப்பாதங்களிலே விழுந்து, "தம்பிரானே ! அடியேன் மகளும், அவளுடைய மாதாவும், விடங்கொண்டு குற்றவேல் பிழைத்தார்கள். படியோர் அறிய இன்று என் மகளைப் பரிவுடன் திருமணம் செய்துதர இசைந்தேன். அடியேன் நினைவின் முடிவின்படி அல்லவாகியிரா நின்றது. அம்புயன் அன்புடன் புவிபடைத்த அன்று முதல் இற்றை நாள்வரையாக என்தன் மரபிலுள்ளவர்கள் இரண்டு சொல்லியறியார்கள். அடியேன் தனக்கு வார்த்தை இரண்டாகி விட்டது. விதிவசத்தால் கொடியேன் பொய் சொல்லியும் ஆருயிரை விடாமல், கொண்டும் இருப்பேனோ ?

தேவரீருடைய திருவுளக்கருத்தை அடியேன் செய்து முடிக்கத் தவஞ்செய்திலேன். இத்திரு நிலந்தன்னில் இரண்டுரைத்திருந்து, இச்சரீரம் கொண்டிருப்பதில் பிராணனை விடுவதே தக்கது" என்று சம்மதித்துத் தன்னுடைய கட்டாயுதத்தை வாங்கிக் கழுத்திலே உற நாட்டிடவே கண்டு :

**அகவல்**

மட்டார் சடையார் தம்முடைய
மாம னார்தம் கையையும்
சொட்டை(க் கட்டா யுதத்தை)யும்
திருக்கை மலரால் பிடித்தருளி
(வருத்த முடனே சொல்தவறித்)
திகைத்த பரதவனை மிகநோக்கிப்
பொருத்த முடனே பயந்தெடுத்த
பூவை தனைநீ யெனக்களித்தால்

சாலக் குடிவிடி வாகுமென்று
சாவித் தாயவர் தங்களையும்
நீலத் தொடைபுனை பரதவனே
நீயுஞ் சாக நின்(றிட்டாய்)
பொய்யுங் களவுமோ கற்றதுநீ
போது மோயிது பரதவர்க்கு
மெய்யென் றுன்வார்த் தையைநம்பி
வீணே மகரத்தைப் பிடித்தேனே

செய்நன்றி சற்று மறியாத
திண்ண னாய்நீ யிருந்தாயே
வேடத் தவருடன் பொய்சொன்னவர்
மீளா நரகில் அழுந்துவர்காண்
புவியில் போதும் நெறிமுறைமை
புகழும் நல்ல குடிப்பிறப்பும்
தவமும் மானமும் மதிப்பிருந்தும்
சத்தியம் தப்ப லாகாது

சத்தியம் தப்ப மாட்டாமல்
தாம முடியான் அரிச்சந்திரன்
நற்றவ முனிக்கு யாகமது
நடத்தக் கொடுத்தோ மங்கொடுத்து
சேனை நான்கும் திசைநான்கும்
தேடும் பொருள்களும் (தான்)கொடுத்து
மான முடைய மனைவியையும்
மதலை தன்னையும் விற்றுவிட்டுத்

தானும் பரையனுக் காளானான்
சத்தியம் நிற்க வேண்டியன்றோ.
வேடந் தனைநீ பரதவனே
மிகவும் நிந்திப்ப தாயிருந்தாய்
வேடந் தனைநிந் தித்ததுகாண்
சிவத்தை நிந்தித் ததுவாகும்
வேட மெனவும் சிவமெனவும்
வேறு கூறா யிராதுகண்டாய்

வேடஞ் சிவமா யிருந்தபடி
விளம்பக் கேளாய் பரதவனே
தீது படாமல் சிறுத்தொண்டர்
திருவே டந்தனைப் பரிசிக்கவே
மாது பாகர் வேடத்தராய்
வந்தாட் கொண்ட தறியாயோ
காவி ரிப்பூம் பட்டினத்துச்
செட்டியார் இயற்பகை யாரைநோக்கி
ஒருதிரு வேடத் தார்வந்து
(உந்தன்) மனைவியை (மனமுவந்து)
எனக்குத் தருதல் வேணுமென்று
வேண்டக் கொடுத்து விட்டாராம். (220)

**அதுவன்றியும்**

மானக்கஞ்சாரரென்ற செட்டியார் தன் மகளை மருகனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப் பந்தலில் கொண்டு வருகின்ற

காலத்து, ஒரு வேடத்தார் வந்து, "உன் மகள் தலைமயிர் (நம்) பஞ்சவடிக்காம்[1]; தரவல்லையோ ?" என்று வேண்ட மாலை புனைந்த சுழியலுடனே அரிந்து கொடுத்தான். அத்தன்மையே சிவபக்தத் திருவேடத்தாரைப் பூசிக்க அது சிவபூசையாக முடிந்தது.

பூமியில் உன்னையே திருவேடத்தாரைத் தூடணிக்கக் கண்டோம். ஆதலால் நீ சிவபக்தன் அல்லவாயிருந்தாய். நமக்குத் தருவதாக இசைந்த உன் மகளுடைய சரீரம் கிடக்கின்றது. பிராணனுக்கு நீ கடவையல்லை. அவள் நடந்து திரிகின்ற நாளும் அவள் சரீரம் உனக்குப் புலப்பட்டதல்லது, பிராணன் உனக்குப் புலப்பட்டதுண்டோ ? அதனால் நீ கண்டு போதுகின்ற சரீரம் கிடந்ததாகில் சரீரத்தை நமக்குப் பாணிக்கிரகணம் செய்து தருவாயாக !" என்று அருளிச்செய்யப் பரதவராசனும் மிகவும் பிரியப்பட்டுக் கட்டாயுதத்தைப் போட்டுவிட்டுத் தம்பிரா னுடைய திருப்பாத கமலங்களைப் பூண்டுகொண்டு, "தம்பிரானே! மகரத்தைப் பிடித்தருளி என் வமிசத்தாரை ஈடேற்றியருளினீர். அடியேனை உலகத்துள்ளார் அசத்தியன் என்று சொல்லாமல் சத்தியவான் என்று சொல்லும்படி இரட்சித்தருளியிருக்கின்றீர். தம்பிரானாலே என் வமிசமும் பருவரலிற்றது. என் சத்தியமும் நிலைநிற்கப்பெற்றேன்" என்று (சொல்லித் துதித்துத்) தம்பிரானைத் திருக்காவணத்திலே எழுந்தருளச் செய்வித்து வணங்கி

மைப்படியுங் குழலாரை மணக்கோலஞ் செய்துகொண்டு
இப்பொழுது வருகின்றேன் எழுந்தருளி யிருமென்றான். (221)

## *விருத்தம்*

உருகி யன்பு கரைவழிய
உயிரும் உடம்பும் நடுநடுங்க
அருவி சொரியும் விழியுடனே
ஆதி முதல்வர் அடிபணிந்து

---

*1. பஞ்சஜடை (போலும்) - ஐங்குடுமி (ஆலம்பால் இட்டுத் திரிந்த சடை போலும். முனிவர்களும், யோகிகளும் கொண்டிருப்பது.)*

மருவ வரிய அருந்தவத்தால்
வருந்தேன் கிளையை மருங்கறுத்துத்
திருவை யடியேன் கொண்டுவரு
மளவுஞ் சிறிதிங் கிருமென்றான். (222)

**உரை**

இவ்வாறாய் பரதவராசனும் தம்பிரானைத் திருக்கா வணத்தில் எழுந்தருளப் பண்ணி வைத்துச் சென்று தன்மனை புகுந்து, மாண்டு கிடக்கின்ற மகளாரை எடுத்துத் தன் கண்ணீராலே நீராட்டி, முன்பே மணக்கோலஞ் செய்வதற்காக இருக்கின்ற வச்சிராபரணங்களும், சருவ பூஷணங்களும், மணப்பொருள் களும் கொண்டு (வந்து வைத்து, வண்ணமகளையழைத்து) "மணக்கோலம் செய்வாயாக!" என்று சொல்லிப்போக, வண்ண மகளும், தன் கண்ணிரண்டும் அருவி சொரியச் சென்றெடுத்துத், திருமஞ்சனம் செய்வித்து, மந்திரக்கோடியுடுத்து, பரிவட்டங் களும், ஆபரணங்களும் சாற்றி, சாந்து, புழுகு, கத்தூரி மற்றுமுள்ள மணப்பொருள்களும் பூசி, (சுழியல்களும்), மாலைகளும் இட்டு அலங்கரித்துப் பரதவராசனிடம் சொல்ல அவனும் வந்து, மகளாருடைய இயற்கையழகும், ஒப்பனையாலுண்டான செயற்கையழகும் கண்டு கைகளாலே முகத்திலரைந்துகொண்டு, மகளார் கைகளாலே தனக்கு நீர்க்கடன், தீக்கடன் முதலானவையும் செய்துகொண்டு, தன் மனைவிக்கும் அத்தன்மை செய்வித்து மகளாரைத் தன் கைகளார எடுத்துக் கொண்டு பரதவர் வமிசத்திலுள்ள திரிசனங்களும், பரிசனத்துள்ளாரும், தங்கள் கைகளிரண்டும் தலைமேலே வைத்துக்கொண்டு அழுது செல்லச் சென்று, திருக்காவணம் புகுந்து, பாவாடை[1] மருங்கோர் அணையிடச்சொல்லி, அணையுடனே சாய்ந்திருக்கும்படி திரைசேர் மடந்தையரைச் சேமஞ்செய்து, தம்பிரானை வணங்கிக் "கேட்டருளீர்! அடியேன் இச்சடங்கு முடித்துவிட்டு என் மகளுடனே மாண்டுவிடும்படி யாகக்கடுக எழுந்தருளீர்" என்று விண்ணப்பம் செய்யக் கேட்டுத் தம்பிரான் திருப்புன்முறுவல் செய்து வந்து பரதவருடைய

1. = ?

பாவாடையில் எழுந்தருளியிருப்ப, அதியரையன் தம்பிரானை நோக்கித் "தம்பிரானே! திருப்பூட்டுதற்கு நற்பொழுதாயிற்று என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரான், திருநந்திதேவரைத் திருக்கண் சாத்தியருளி, "வாராய்! திருநந்தி! அதியரையன் மகரத்தைப் பிடித்துப் பெண்ணுங்கொள்வதற்காக நம்முடைய ஊரான பரதாபுரியிலே நின்றும் போதுகின்ற அளவிலே, கயிலாயவதியரையச் சக்கரவர்த்தியைக்கொண்டு சமைப்பித்துக் கொண்ட மங்கிலியக்கயிற்றை, உன்னுடைய மாதாவுக்குத் தரிப்பாயாக" எனறு அருளிச்செய்யத் திருநந்திதேவர் திரைசேர் மடந்தையாரை வணங்கித் தம்முடைய கைகளாலே திருக்கழுத்தைத் தொடுமளவில்

திருந்த[1] வரனார் திருமார்பில் சிறக்க வடுவிட்ட
வருள்முலை போற்காந்துய கள்ளிருந்த
திருத்தாலி கதிர்விட் டிலங்கித் தோன்றியதாம். (223)

## *விருத்தம்*

கருத்தி னுடன்றிரு நந்திதேவர்
கரங்குவித் திறைஞ்சி நின்று
மருக்குழ லுமையாள் பூங்கழுத்தில்
மங்கிலியந் தனைநினைய
நெருக்கு மிருட்புயல் முடிநீங்க
ஒளிக்கதி ரவன்போலத்
திருக்க ழுத்தில் கரந்திருந்த
திருத்தாலி விளங்கியதாம். (224)

**உரை**

இப்படியாய் அதியரையன் திருமகளார் திருத்தாலியும் கழுத்தும் கண்டு தன் கைகளிரண்டாலும் முகத்தில் அறைந்து கொண்டு மிகவும் புலம்பி, "என்னே! மகளே! இக்கழுத்துந் தாலியும் மணக்கோலத்துடன் காணாமல் பிணக்கோலத்துடன் கண்டேனே!" என்று தன் கண்களிரண்டும் அருவி பாயச் சென்று

---

*1. இப்பாடல் சரியில்லை.*

தன் மருகனாருடைய திருக்கை மலரையும், மகளாருடைய திருச்சூடகத் திருக்கை மலரையும் தன்னொரு கையிலேந்திப் பிடித்துக் "கேளீர்! பரதவரே! வடபூமியின் தம்பி(ரானே)! உங்கள் பிதாவின் பெயர் அருளிச்செய்யும் என்னத் தம்பிரான் மாமனாரை நோக்கி, 'நான் பிதாவில்லாதான்' என்று அருளிச்செய்யப் பரதவராசனும், பரதவரெல்லாரையும் நோக்கி, "கேளீர்! பரதவரே! வடபூமியின் பரதவரில் பிதாவில்லாதான் சங்கரனாகிய கயிலாயவதியரையற்குத் தென் பூமியில் மங்கைப்பதியில் பரதவரில் காசிவப் பிரசாபதி புத்திரன் திரியம்பகனாகிய அதியரையன் மகள் திரைசேர் மடந்தையாரைத் திருமணம் செய்துகொடுக்கின்றேன்" என்று

மங்கலவாத் தியமுழங்க வலம்புரிகள் பலவிம்மத்
திங்கள்புனை சடைமுடியார் திருக்கரத்தில் நீர்வார்த்தார். (225)

## விருத்தம்

தெண்ணீர் மதியந் தனைச்சூடி
செம்பொற் கதிரோன் பல்லுதிர்த்த
விண்ணீர் புனைந்து மன்மதனை
வென்ற விழியார் தமைநோக்கிப்
(பண்ணீர்) மொழியை யுமக்கின்று
தந்தோ மென்று பரதவன்தன்
கண்ணீ ருடனே தண்ணீரும்
(வார்)த்தான் கைத்தா மரைப்போதில். (226)

### உரை

இத்தன்மைத்தாய் மகளாரைத் திருமணம் செய்வித்து நீர்வார்த்துப் பரதவரை நோக்கி, "நீங்கள் இவர்க்குச் சீதனம் கொடுப்பீர்களாக!" என்று சொல்லக்கேட்டுப் பரதவரெல்லாருங் கூடியிருந்து விசாரித்துத் தங்களில் சம்மதித்துத் திரைசேர் மடந்தையார் மணவாளப்பிள்ளை கயிலாயவதியரையற்குப் பாறு, படகு, கப்பல், சம்பான், சொங்கு, நாவாய், காவாய் என்கிற மரக்கலங்களும் அரசாங்த்தீர்வை[1] நீக்கி உள்ள முதலுக்கு

1. இராசகாந்திரவை என்றுளது.

நூற்றுக்கு இரண்டும், குதிரைக்கப்பலுக்கு நூற்றுக்கு ஒன்றும், ஆனை ஒன்றுக்கு கால்பணமும், நன்மைக்கு இரண்டு பணமும், தூணிபதக்கு அரிசியும், நானூறு பாக்கும், நான்குதட்டு வெற்றிலையும், தீமைக்கு ஒரு பணமும், பதக்கரிசியுங் கொடுத்து, ஆட்டைவரைகாறீணத்துக்கு[1] மூன்று பணமும், இளந்தாரியான புள்ளிற.........பற்கு பணம் ஒன்றும், கல்லுக்கு பணம் ஒனறும், கொடுப்போமாகவும். இந்நியமத்தின்படிச் செய்யாத பேர்களைத் தடுத்தும் மறித்தும், நீரிலே நிறுத்தியும், வேண்டும் தெண்டம் செய்து வாங்கிக்கொள்ளக்கடவர் என்று நீர்வார்க்கத் தம்பிரான் மிகவும் மகிழ்ந்து, திருநந்திதேவரை நோக்கி "வாராய்! திருநந்தி! அதியரையன் நம்முடைய தம்முடைய சாதியிலுள்ளார் நமக்குத்தந்த வரிசையை, இவ்வூர் நாயனார் கோயிலிலே கல்லில் வெட்டுவிப்பாயாக! என்று சொல்ல, அவரும் கல்லில் வெட்டு வித்த பிறகு, மீண்டும் அதியரையனை நோக்கி "நம்முடைய சாதியார் முன்னே உன் மகள் திரைசேர் மடந்தையாரை நீர் வார்த்துத் திருமணம் செய்து கொடுத்தாலும், இதுவே போதும் என்றாலும், நமக்கு அக்கினி சாட்சியாகச் சடங்கு செய்து தரவேண்டும்" என்று கூறித்திருநந்தி தேவரைத் திருக்கண் சாத்தியருளி "வாராய்! நந்தி! அதியரையன் காலமிருத்திய[2] மொழிய இப்படி வந்த அவமிருத்து மாற்றுவதாகத் தம்பிராட்டி தந்த திருநீற்றைக் கொண்டுவா" என்று சொல்லித் திருநீற்றுக் கோயிலை வாங்கித் திரைசேர் மடந்தையார் திருமேனியெங்கும் சாத்தியருளியவுடன் தம்பிராட்டியும், பிரம்மரந்திரத்தில் வைத்த பிராணவாயுவைச் சுழிமுனை நாடி வழியாக இரக்கித் திருமேனியெங்கும் பரப்புவித்து நிற்பத் தம்பிராட்டி தம்பிரானைக் கண்டு நாணமுற்று ஒடுங்கியிருப்பதைக்கண்டு தம்பிரானும் திருநந்திதேவரைப் பார்த்து, "வாராய்! நந்தி! அதியரையன் இந்த மணக்கோலம், இவளுடைய மாதாவும் காணும்படி நீ இந்தத் திருநீற்றைக் கொண்டு சென்று, இட்டு, நஞ்சை ஆற்றிக் கூட்டிக்கொண்டு வருவாயாக!" என்று அருளிச்செய்ய அவரும் சென்று மனை புகுந்து திருநீற்றாலே

---

*1. இத்தொடர்ச்சொற்கள் விளங்கிற்றில்லை. 2. இத்தொடர்ச்சொற்கள் தெளிவில.*

ஆற்றி "எழுந்தருளும்" என்று சொல்ல, வருணவல்லியும் உறக்கம் நீங்கி எழுந்திருந்து, பரிசனத்தாரை நோக்கி "என் மகள் திரைசேர் மடந்தையார் எங்கே?" எனறு கேட்க, அவர்கள் நடந்த செய்தி எல்லாம் சொல்லக்கேட்டு விரைவுடன் வந்து திருக்காவணம் புகுந்து, தன்னுடைய மகளாரும், மருமகனாரும் இருக்கின்ற திருமணக்கோலங்கண்டு மகிழ்ந்து வாழ்த்தக் கேட்டுப் பரதவராசனும் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டு கருணை வெள்ளத்துடன் ஆனந்த வெள்ளம் பெருகச் சென்று தம்பிரானை வணங்கி "அக்கினிச் சடங்கு முடித்தருளீர்" என்று விண்ணப்பஞ் செய்ய.

பையரவச் சடைமுடியார் பரதவரா சன்பயந்த
மொய்குழலைக் கைபிடித்து முக்காலும் வலம்வந்தார். (227)

## *விருத்தம்*

கரிவலம் புரிகள் விம்ம
(சிறந்தபல் லியங்கள்) முழங்க
கரிவலம் கவருங் கொள்கைக்
கனங்குழை மடவார் வாழ்த்த
அரிவலஞ் செய்யுங் கூந்தல்
அரிவையும் தாமு மாக
எரிவலஞ் செய்தார் செங்கை
எரிவலங் கொண்ட வீசர். (228)

வேரிமலர் மழைபொ ழிந்து
விண்ணவர் வானில் போற்ற
சூரியசந் திரர்கள் தோன்றி
மலரடி வணங்கி (நிற்க)
பாரியெனக் கொடைபு னையும்
பாதவர் (மருங்கு) சூழக்
காரிகை தனைக்கைப் பிடித்தார்
கனல்மழுச் செங்கைப் பிடித்தார். (229)

## அகவல்

பொற்புயத் துத்தலத் திடைபுக் கிருக்கப் பொறுத்தவர்
புற்கருப் பிறைக்குப் புகல்பொற் கடத்தைக் கொடுத்தவர்
விற்குறித் து(ப்)புறத் தெரிமெத்த விட்டுச் சிரித்தவர்
வித்தகப் பவனர்க்[1] காகவெற் புரித்துத் தரித்தவர்
பற்கடுக் கள்செவிப் பணிபற்றி யொக்கப் பரித்தவர்
பத்திசித் தத்தில் வைப்பவர் பற்றறப் புரப்பவர்
சற்பநித்[2] திரையரிக் கொருசக் கரத்தைக் கொடுத்தவர்
தத்துவத் தைப்படைத் தருள்தத் தையைக்கைப் பிடித்தவர். (230)

## உரை

இவ்வாறாய்த் திரைசேர் மடந்தையாரைக் கைப்பிடித்து எழுந்தருளியிருந்து, பரதவராசனை நோக்கி "மகரத்துடனே கிடக்கின்ற வலையை வாங்கிக்[3]குளத்து நீரிலே அலசிச் சுத்தம் செய்து(கொண்டு) மகரத்தை(யும்) இவ்விடத்தே எடுத்துக் கொண்டு வருவாயாக!" என்று அருளிச்செய்ய, அவனும் வணங்கி தம்பிரானே! பதினான்கு உலகமும் கூடினாலும் மகரத்தை எடுக்கவும், வலையை வாங்கவும் ஒண்ணாது[4]" என்று விண்ணப்பம் செய்யத் தம்பிரான் திருப்புன்முறுவல் கொண்டருளி, திருநந்திதேவரைத் திருக்கண் சாத்தியருளி, "வாராய்! திருநந்தி! நம்முடைய வலையை வாங்கிக் குளத்து நீரிலே அலசிச் சுத்தம் செய்து, மகரத்தையும் கொண்டு வருவாயாக!" என்று அருளிச்செய்ய, அவரும் சென்று, வலையை வாங்கிக் குளத்து நீரிலே அலசிச் சுத்தி செய்து, மகரத்தையும் கொண்டுவந்து தம்பிரான் முன் இட்டுவைக்கத் தம்பிரானும் மகரத்தைத் திருக்கண் நோக்கியருளக் குமரக்கடவுள் மகரமாகிய போர்வையை நீக்கி எவ்வண்ணம் தோன்றியருளினாரோ வெனில்

---

*1. பவனர்பபைக்கா என்றுள்ளது. 2. சற்பநித்தரிக்கொரு சக்கரத்தை என்றுளது. 3. குளத்தில் என்றுளது. 4. ஒன்றாது என்றுளது.*

## அகவல்

ஓராறு திருமுக(மு)ம் ஒளிவளரு மணிமுடியும்[1]
ஈராறு திருக்கரமும் எழுதரிய திருமார்பும்
தண்டைபுனை திருத்தாளும் தனிமருங்கும் உடைமணியும்
அண்டர்புகழ் வடிவேலும் அருள்விழிகள் பன்னிரண்டும்
செந்தமிழின் ம(ணநா)றுஞ் செம்பவளச் செவ்வாயும்
அந்திமதி பொதிசடையார் அகமகிழத்[2] திருவழகும்
கண்டவர்தம் மனங்கவரக் கலாபமயில் மேல்கொண்டு
தொண்டுசெய்து பரதவர்கள் தொழுதிறைஞ்சத்
தோன்றினராம்.[3] (231)

## விருத்தம்

செங்க ணாறோ டாறிலங்கச்
செய்ய முகமோ ராறிலங்க
வங்கை யாறோ டாறிலங்க
வணி(யு) மகுட மாறிலங்க
சங்கமே றித்தெண் டிரைவேலை
தன்னில் தோன்றும் தனிப்பவளத்
துங்க வரைபோ லெனையாளும்
தோகை மயில்மேல் தோன்றினராம். (232)

## உரை

இவ்வண்ணமே குமரக்கடவுள் புறப்பட்டருளி, முன்பு தம்பிராட்டி திருக்கையினின்றும் வாங்கிப் போட்டருளத் தாங்கூடக் கொண்டுவந்த திருக்கோபத்தைத் தம்பிரான் திருமுன்னே வைத்து வணங்கி நிற்கக் கண்டு, பரதவரும் அதியரையனும் மிகவும் அதிசயப்பட்டு, 'என்னே! என்னே! இவரொரு ஆண்டாரைத் தெண்டன் செய்து நிற்கின்றார்' என்று கருதியிருக்கின்ற காலத்துத் தம்பிரான் மானிட வேடம் மாறி எவ்வண்ணம் எழுந்தருளியிருந்தாரோ வென்னில்

---

1. நம்மணிமுடியும் என்றுளது. 2. ஆக மகிழ்ந் என்றுளது. 3. தொண்டீனராம் என்றுளது.

**அகவல்**

புலியத ளாடையும் புயங்கா பரணமும்
கொலைமழு வாளும் கொடுங்கூர் நவ்வியும்
செம்பொன் மகுடமும் திருவிளம் பிறையும்
அம்புயம் நான்கும் ஆல கண்டமும்
நெற்றியில் நீறும் நெருப்பு நயனமும்
வெற்றிவெண் முறுவலும் மெய்யிலுத்[1] தூளமும். (233)

சுற்றிய கடுக்கையும் வாசற்
றொங்கலு மார்புந் தோன்ற
நற்றவ மயிலுந் தாமும்
(நற்பெரு) நாயக ராயிருந்தார்.

## *விருத்தம்*

அண்டர்[2] புகழ்குன் றுருவ
அயில்வே லெறிந்த அறுமுகத்தோன்
மண்டு மகர வடிவேக[3]
வந்து கோசம் வைத்திறைஞ்சக்
கொண்டல் அனைய குழலாளைக்
கொள்ளக் கொண்ட வடிவொழிந்து
பண்டை வடிவாய்ப் பரதவனார்
பாவை பாகர் இனிதிருந்தார். (234)

**உரை**

இவ்வாறே மாணிக்கவரையிடத்து ஒரு மரகதக் கொடி படர்ந்தாற்போல பரமேசுவரி எழுந்தருளியிருக்கின்றது, நீலக்கடல் நடுவுதித்த அருண திவாகரனென குமரக்கடவுள் மயில்வாகனனாக வணங்கி நிற்க எவ்வண்ணம் எழுந்தருளி யிருந்தாரோ வென்னில்:

---

*1. மெய்யிளித் என்றுளது. 2. அன்றர் என்றுளது. 3. வடிவாகி என்றுளது.*

**அகவல்**

இந்திரனும் வானவரும் இலங்குநறு மலர்வாரிச்
சிந்தியர கராவென்று சேவித்து நின்றேத்த
கிம்புருடர் விஞ்சையர்கள் கின்னரர்வந் தியாழியற்ற
தும்புருநா ரதர்பாடச் சுருதியினந் தொழுதேத்த
மாமுனிவர் அடிவணங்க மதியிரவி வந்திறைஞ்ச
தேமலரி னினிதிருக்கும் திசைமுகநின் றடிவணங்க
மத்தளிசல் லரிபாடகம் அளிமுரசு வீணைபம்பை
சுத்தமுட்டு[1] நடுத்திமிலை துடிபணைதொண் டர்கள்முழங்க
விருதுசின்னந் தாரைகொம்பு வேண்டுகுழல் காளம்
பரதவர்தம் பிரானென்று பலதிசையும் பணிமாற
கணநாதர் முறைசெய்யக் கெங்கைநங்கை விசிறியிட
பணனாக மங்கையர்கள் பாவுடன்சோ பனங்கூறப்
பண்டயன்மால் தேடறியார் பரதவரும் பாரோரும்
கண்டுவிழி புனல்சொரியக் காட்சிகொடுத் தருளினராம். (235)

*விருத்தம்*

அரிபிரமர் காணாத அடியிணையுந் திருமுடியும்
பரதவர்தங் கோமானும் பரதவரும் கண்டுதொழ
விரிகடல்வெண் டிரையுடனே மிதந்துவந்த வெண்முறுவல்
கரியகுழல் மடந்தையுடன் காட்சிகொடுத் தருளினராம். (236)

**உரை**

இத்தன்மைத்தாய் தம்பிரானும் தம்பிராட்டியும் எழுந்தருளி யிருக்கின்ற பெருமையை அதியரையன் கண்டு மிகவும் களிப்பெய்தி யாது செய்தானோவெனில்.

**அகவல்**

செய்வ[2] தேது மறியாமல்
சிவனே போற்றியென் றடிவணங்கிக்
கைகள் குவித்துக் கூத்தாடிக்
கண்ணா றுருகிக் கருத்தழிந்து

---

*1. = ? 2. தெய்வ என்றுளது.*

திருமக ளார்தம் சீரடியைச்
சிந்தை யதனால் தொழுதிறைஞ்சி
மருக னார்தம் சேவடியை
மலர்க்கை யதனால் பூண்டுகொண்டு
மாலய னறியாச் சேவடிகள்
மறைகள் தேடுஞ் சேவடிகள்
தீயி லாடுஞ் சேவடிகள்
சிலம்ப லம்புஞ் சேவடிகள்
வெள்ளித் திருவம் பலத்தில் நின்று
விளங்க வாடுஞ் சேவடிகள்
புலிக்கால் முனியும் பதஞ்சலியும்
போற்றப் பொன்னம் பலந்தன்னில்
இலக்கா மனைத்தும் நின்றாட
வென்று மாடுஞ் சேவடிகள்
சிட்டர்க் கெளிய சேவடிகள்
தேவர்க் கெளிய சேவடிகள்
கட்டப் பிறப்பை யொறுத்துக்
கருத்தி லாடுஞ் சேவடிகள்
மகாதல மும்பா தலமும்
வாரித் தலமும் மாலயனு
மாக வாடுஞ் சேவடிகள்
(மொ)ழிய வாடுஞ் சேவடிகள்
படிமேல் நடந்து தாள்வருந்தப்
பாசக் களைகள் பற்றறவே
அடியேன் குடியில் எழுந்தருளி
அறவுஞ் சிவந்து நொந்தனையோ
நம்பி யெவர்க்குங் குலந்தன்னில்
நடந்து வருந்துஞ் சேவடிகள்
வெம்பு முயலகன் முதுகுதனில்
மிதித்து நடக்குஞ் சேவடிகள்
பறைய னாகிச் சோமாசி
பாச மறுக்குஞ் சேவடிகள்
குறுகுஞ் செயல்கள் கண்டு
கூற்றை யுதைக்குஞ் சேவடிகள்
காளி யுடனே பண்டரங்கம்
ஆடுங் கருணைச் சேவடிகள்

வொளிவென் னிட்ட விசையனுடன்
மற்போர் புரியுஞ் சேவடிகள்
பட்டைச் சோறுடன் கொண்டுபோய்ப்
பயந்து செய்தொரு வெள்ளிடைக்கே
மட்டுக் கமழ்தார் சுந்தரர்க்கு
வந்து கொடுத்த சேவடிகள்
படிமேல் நடந்து பரதவர்கள்
பாசக் களைதான் பற்றறவே
அடியேன் குடியில் எழுந்தருளி
அறவுஞ் சிவந்து நொந்தனையோ
மாயப் பிறவி வேரறுக்கும்
மருந்தே பிறவா வடிவினனே
நாயைச் சிவிகையில் வைத்தனையே
நாயேன் பெருமை தெரியுமதோ
குன்ற மெறிந்தார் கரந்திருந்த
கோல மகரம் தனைப்பிடித்துச்
சென்று கடலில் வலைவீசித்
திருக்கை மலர்கள் நொந்தனவோ
கண்ணுக் கெல்லாம் கண்ணாகிக்
காட்டுங் கண்மூன் றுடையானே
மண்ணில் பரதவர் செய்ததவம்
மாலும் பிரமருஞ் செய்திலரே
மன்று ளாடுஞ் சுடரொளியே
மணியே முத்தே மரகதமே
என்று போற்றி மகிழ்ந்திருதா
ளிறைஞ்சித் தொழுதான் பரதவர்கோன். (237)

## *விருத்தம்*

அன்று மாலுக் கரிதா யெமக்கெளிதாய்
வந்த (நல்ல) அடித்தா மரைமலர்
இன்று வாரி வலைவீசப் படவின்மே
லேறி நின்று வருந்திச் சிவந்தே

கொன்றை சூடும் படர்மா மரகதக்
கோதை பாகங் கொள்குன்றே தென்தில்லை
மன்று ளாடும் மணியே மதுரையில்
மாறி யாடக் கொடிபட்ட வள்ளலே. (238)

**வேறு**

செந்தமிழ்சே ரதியரையன் தேவர்களை நோக்கியிந்தப்
பந்தருமாய் நறுமலராய் பாவாடையுமாய்க்[1] கிடவாமல்
எந்தைபிரான் மணிமுடிக்கும் இருகமலத் தாளிணைக்கும்
அந்தமுமா தியுந்தேடி வருந்திலரே அயனெடுமால்! (239)

**வேறு**

சோறுதான் நாடோறும் திரிதந்து நோயுடன்
பிணிதுடங்கி ஒன்பது துணையாகப்
பீறி நாறிடப் பலமலஞ் சொறிந்துடல்
நடைப்பிண மிதுசுமந்து நானிளைத்தேன்
நீறு ........................ அக்கும்
மெய்க்கணியும் நித்தனே தந்துநீர்தாம்
ஆறு வார்சடை ......... நின்றாடும்
அய்யனே அம்பலத் தமுதே! (240)

மக்களும் குலமும் தாரமும் ..........
வாழ்வுமென் றெண்ணியே வருந்தும்
துக்கமும் பொய்யும் பாவமும் .............
.............. யே சுமந்து தானினைத்தேன்
பக்கவண் டணிசூழ் மரகத மாகப்
பவள.................. அப்பனே
அக்கு மம்புலியும் சூடிநின் றாடும்
அய்யனே அம்ப(லத் தமுதே)! (241)

இரவு நண்பகலு முழன்றிரை தேடி
எனதுன தென்றென்று கருதி
விர(வு)ம் பாவங்க..........ளறியா
விடக்கிது சுமந்து நானிளைத்தேன்

---

1. = ?

ப(ரவும் படி)யோர் தொழுதுநின் றேத்தும்
பரதனே நாதனே பரனே
அரவும் (பிறை)யுஞ் சூடிநின் றாடும்
அய்யனே அம்பலத் தமுதே ! (242)

காலு(டன் கையும் வாயும் பொரு)மிக்
கண்டவர் நகைத்திடக் கையில்
கோலுடன் விழுந்தழும் புழுக்(கூ டதனைப்
பேணிச் சுமந்துநா னிளைத்தேன்
மாலுமம் புயனும் செய்தொழி (லறியா
வருந்தி) முறையிட வாங்கி
ஆலமுண் டமரர்க் கமுதளித் தாடும்
அய்யனே அம்பலத் தமுதே ! (243)

நாயுட னோரி பிணங்குமோ ருடல்காண
நாட்டி ஓடியே ஊத்தை
வாயறி யாமல் மூக்கினைப் புதைக்கும்
மலப்பொதி மீது நானிளைத்தேன்
தீயுடன் வாயு நீர்விசும் பிலங்கு
திண்புவி யுடன்கடந் திரை(யும்)
(பேய)வை யோடப் புரிந்துநின் றாடும்
அய்யனே அம்பலத் தமுதே ! (244)

கூடிச் (சுற்றும்) பின்வரப் பல்லியங்
கொட்டவெண் சங்குகள் குறிப்பப்
பாடை (யேறிப்) பவனியே பொடியாம்
பாழிது சுமந்து நானிளைத்தேன்
தேடி (நாளும் வரு)ந்திட அடியார்
திரிந்திடத் திசையிரு நான்கும்
ஆடை தானாகப் (போர்த்தி)நின் றாடும்
அய்யனே அம்பலத் தமுதே ! (245)

விரவும் பல்லவமும் ... ... ... ... ...
வித்தையும் குத்திரங் கற்றும்
கருவிகள் தொண்ணூற் (றாருங்கொ) டமைந்த

கடமிது சுமந்து நானினைத்தேன்
உரகமும் மதியுங் கங்(கையுந் தரிக்கு)ம்
ஒருவனே இருவர்வந் தேத்தி
அரகரா வென்று நடம்புரிந் தாடும்
அய்யனே அம்பலத் தமுதே ! (246)

பாசிலை அடைக்காய் பெறாவிடில் வாய்தான்
........................ .... யெழுந்து
வீசிட இருந்தவர் மூக்கினை மாறும்விட
............ சுமந்துநா னிளைத்தேன்
மூசுமா ரரவுங் கங்கைமா நதியும்
முருகவிழ் கொன்றை(யும் வன்னியும்)
மாசறு பிறையுஞ் சூடிநின் றாடு
மய்யனே அம்பலத் தமுதே ! (247)

(நாய்களு)ம் பலவாய் ஓரியும் கழுகும்
நரிகளும் காகமும் பரு(ந்தும்)
(பேய்களும் இது)தான் வீழ்வதெப் போதெனும்
பிணமது சுமந்து நானிளைத்தேன்
(தூய)செங் கமலத் துறைமறைச்[1] சுருதியே
சுரும்பிறை நறுந்துள வணிதோள்
(ஆய)னுந் தேடி வருந்தநின் றாடும்
அய்யனே அம்பலத் தமுதே ! (248)

**வேறு**

குறும்பிவாழ் துளையும் பீளைசேர்
கூடும் கோழைவீழ் பாழியும்
சொறுவா[2] யிரண்டும் தொகுத்தவிப்
பிணமது சுமந்து நானிளைத்தேன்
சிறந்தவிரு நாழிநெற் கொண்டு
செகமெலாந் திரிந்திட விருந்தே
அறந்தான்[3] புரிந்தவன் நின்றாடும்
அய்யனே அம்பலத் தமுதே ! (249)

---

1. துறைமறையுஞ்சுருதியே என்றுளது. 2. சொறுபத வந்துரால் வாயும் சொருவாயிரண்டும் என்றுளது. 3. அறங்கள்தான் கற்றவன் தவளராள் என்றுளது.

## உரை

இவ்வாராய் நின்று போற்றி செய்த அதியரையனை நோக்கித் திருக்கண்சாத்தியருளி "வாராய்! பரதவராசனே! உன்மகள் திரைசேர் மடந்தையாரைத் திருமணம் செய்திருக்க, இந்நேரம் மோதிரமும், சுருளும் வரக்கண்டிலோம்" என்று திருவாய் மலர்ந்தருள, அதியரையன் தானும் தன் குடிமக்களும், தலைமை பெற்ற பரதவரும் சென்று, திருக்கைமலர்களைப் பிடித்துத் திருவாழிகள் சாற்றி வணங்கி நிற்கத் திரைசேர் மடந்தையாரின் தாயார் வருணவல்லியும் மோதிரமும் சுருளும்[1] (வாங்கி)க் காட்டி நாணி நிற்கத் தமக்குச் சம்பந்தக் குடியான பரதவர் குடிக்குத் தலைமை பெற்ற பரதவர்களைத் திருக்கண் சாத்தியருளி "நான் உங்கள் குடியிலே ஒருவனாதலினாலும், உங்கள் குடிப்பெண்ணைத் திருமணம் செய்துகொண்டதாலும், கார்த்திகை தோறும் விழாவெடுத்து, மோதிரமுஞ் சுருளும் (பெறக்) கடவீர்" என்று ஓமம்[2] கொண்டருளி, மீண்டும் அவர்களைத் திருக்கண் சாத்தியருளி, "குடியிற் பிறந்த பத்தினிகளுக்குக் கெற்பம் உற்பத்தி உண்டாமளவினவும், மஞ்சள், சிவப்பு, வச்சிராபரணம் முதலானவை குறைவற நடத்தக் கடவீர்!" என்று திருவாய்மலர்ந்தருளிப் பரதவரெல்லாருக்கும் விடைகொடுத்தனுப்பித் தம்பிரான் எழுந்தருளியிருக்கின்ற காலத்து அதியரையனுக்கும், வருணவல்லிக்கும் சிவலோகம் கொடுத்தருளிப் பின்பு குமரக்கடவுள் தம்முடைய (கையில்) முன்பே வைத்திருந்த திருக்கோசத்தைத் திரைசேர் மடந்தையார் திருக்கையில் கொடுத்தருள:

மருக்கோல மயிலைத்தம் மணிக்குறங்கின் மீதிருத்தித்
திருக்கோவில் தனில்புகுந்து வீற்றிருந்தார் சிவலோகர். (250)

---

*1. கையில் ஆள்காட்டி விரலிலாவது கட்டை விரலிலாவது வெள்ளியால் செய்த இரண்டு வளையங்கள் இடுவது போலும். வெற்றிலை பாக்குச் சுருளுமாம். 2. = ?*

## விருத்தம்

சோமக்[1] கனல்வெண் ணிலவெறிக்கும்
சுடர்மா மகுடம் வெயிலெறிப்ப
சேமக் கனல்வாள் விழிநுதலார்[2]
சிறந்தங் கொளித்து மாமயிலை
வாமக் கவணின் மீதிருத்தி
இருந்தார் மங்கைப் பெருமானார். (251)

**உரை**

இவ்வண்ணமே முன்பு பரமேசுவரி கேட்டருளின உத்தரத்துக்கு பிரதியுத்தரம் எழுதிக்கொடுத்த கோசம் கடலிலே போய் மீண்டும் வருதலால், அன்று முதல், திங்கள் சடையார் வலைவீசத் திரைசேர் மடந்தையார் அவதரித்த மங்கைப் பதிக்குத் "**திரு உத்தர கோச மங்கை**" என்று பேர் வழங்கியதாம்.

## விருத்தம்

ஆழின்[3] மொழியா ளுமைதனக்[4]
கீசன்திரு உத்தரகோச மங்கைக்கு
மானகரி தனில்மா மகரமாய்
அறுமுகவன் மீண்டருளிற் றதனால்
சூழும் பொழில்மா மங்கைக்குத்
தொல்லை யுலகி லன்றுமுதல்
வாழுந் திருவுத் தரகோச
மங்கை யெனும்பேர் வழங்கியதாம். (252)

---

*1. இப்பாடலில் 3 அடிகளே உள்ளன.*

*2. விழிநுதலாரைச் என்றுளது*

*3. இப்பாடல் சரியில்லை.*

*4. ளுமைதிருக் என்றுளது.*

## வாழ்த்து

வாழ்க சமைத்தவர் வாழ்க அந்தணர்
வாழ்க நற்புயம் வாழ்க மன்னவர்
வாழ்க முத்தமிழ் வாழ்க நான்மறை
வாழ்க உத்தர கோச மங்கையே ! (253)

### வேறு

சைவ வேடந் தழைக்கத் தழைத்துடன்
வையகம் எங்கும் மழைபொழிந் தோங்கிட
அய்யன் நாமம் அஞ்செழுத்தும் வழங்குக
தெய்வ நீறுஞ் சிறக்கச் சிறக்கவே. (254)

*முற்றும்*
**திருச்சிற்றம்பலம்.**
*வலைவீசு புராணம் முற்றும்.*

**"தென்னா டுடைய சிவனே போற்றி !**
**எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி !!"**



திருச்சிற்றம்பலம்

**வலைவீசு புராணம்**

# செய்யுள் முதற்குறிப்பு அகரமுதலி

*(பக்க எண்.)*


**அ**

| | |
|---|---|
| அங்கமிலா | 19 |
| அங்குநின்று | 99 |
| அஞ்சு புலனும் | 126 |
| அஞ்சுபுலன் | 82 |
| அடல்கங்கை | 98 |
| அடல்மாமகர | 131 |
| அடிமுடியுங் | 108 |
| அண்டர் புகழ் | 145 |
| அதியரையன் | 119 |
| அதிரு மகா | 104 |
| அம்மைப்பொரு | 61 |
| அம்மையு | 73 |
| அயனொடு | 68 |
| அய்யமேற் | 76 |
| அரிபிரமர் | 146 |
| அரிமுகம் | 100 |
| அருணக்கருள | 59 |
| அருணக்கிரி | 84 |
| அரும்பைவைக் | 1 |
| அலைகடல்சூழ் | 40 |
| அலைகடல்படவதேறி | 126 |
| அளவிடு | 72 |
| அற்கலை | 22 |
| அனுதினமாய் | 124 |
| அன்றிப்பெயர் | 2 |
| அன்றுமாலுக் | 148 |

**ஆ**

| | |
|---|---|
| ஆங்குனக் | 100 |
| ஆதலாற் செல்வம் | 75 |
| ஆதியிலிங்க | 18 |
| ஆழின் மொழி | 153 |
| ஆயிரவாய் | 81 |
| ஆரவளைகள் | 50 |
| ஆலைப்பழனத் | 17 |
| ஆறுசூடும் | 107 |

**இ**

| | |
|---|---|
| இடரற்றுத் | 110 |
| இந்த நெடுங் | 82 |
| இந்திரவைர | 83 |
| இந்திரனும் | 27, 146 |
| இந்துபுனைந்த | 12 |
| இமையமயி | 6 |
| இமையமயிலே | 44 |
| இரவிதன் | 98 |
| இரவு நண்பகல் | 149 |
| இருண் மலந் | 1 |
| இருநிதி | 15 |
| இருநிதிதேடி | 75 |
| இருவரடிமுடி | 29 |
| இரைபெறாமல் | 24 |
| இவ்வண்ண | 86 |
| இளமுலையாள் | 87 |

உ

உரகமும் 5
உரத்தெழு 28
உருகியன்பு 137
உருவாய் உரு 123
உரையற்றர 101
உரையாற்றா 96
உழையைச் 58
உள்ளத்தெழு 60

எ

எண்ணுங்கமல 31
எம்மையாளும் 59
எரியென்னக் 117
எனக்குநீர்க்கடன் 133
என்னே என்னே 106

ஐ

ஐயமுற்றும் 36
ஐயும் தோலுஞ் 57

ஒ

ஒளிவளர் 15
ஒற்றை மருப்பு 1
ஒன்றாயிரண்டா 18,26

ஓ

ஓடமிட்ட 76
ஓராறுதிருமுக 144

க

கஞ்சமா மடந்தை 130
கஞ்சமாலயன் 130
கடல்யோசனை 129
கடுவேதினை 23
கண்ணீரா 63
கரியும்புலியு 36
கரிவலம்புரிகள் 142
கருங்கமலம் 25
கருதித்தொழு 85
கருத்தினுடன் 139
கரைகிடந்த 117
கலைமாலை 38
கலை வீசும் 5
கற்றார்கலியு 19
கற்றைக் 89

கா

காமதமலை 48
காரினிற் 68
கார்வாய் 23
காலுடன் கையும் 150
காற்கடல்நீர் 79

கு

குரைகடலிற் 97
குரைகடலேழும் 125
குரைசேர் 67
குறும்பிவாழ் 151
குன்றாய் 44
குன்றிலசை 12

கூ

கூடிச்சுற்றும் 150
கூரும் வயிர 22

கை

கையில் எரி 61

கொ

கொத்துத்தமிழ் 124
கொந்தகராய் 127
கொலைக்கொண்டு 86
கொன்றைமணக்குஞ் 77

கோ

கோங்கினுடனே 90
கோலக்குழ 58
கோலமுடைய 51

**ச**

சக்கரபாணி 11
சங்கநெடுங்கடல் 100
சங்கரனென்பேர் 113
சதிரம்வில் 16
சத்தியம்தப்ப 136

**சா**

சாலக்குடி 135
சாலத்தளர்ந்து 132

**சி**

சிகரந்திகழும் 110
சிகரமுடியிற் 42
சிகரப் பொற்கிரி 125
சித்தம்நினை 66
சிந்தைகுவி 84
சிலையர்கணை 108
சினக்கண் 99

**சீ**

சீர்வரவார 108

**சு**

சுருக்கமாட்டேன் 80
சுற்றிய கடுக்கை 145

**சூ**

சூடும்பிறை 80,86

**செ**

செங்கணா 144
செஞ்சொற்றிகழ் 103
செந்தமிழ்சேர் 98, 149
செய்நன்றி 135
செய்வதேது 132, 146
செருவளர் 1
செறிவின் 129

**சே**

சேலாரும்விழி 106

**சை**

சைவவேடந் 154

**சோ**

சோமக்கனல் 153
சோழர்பதி 52
சோறுதான் 149

**த**

தண்கமுகாரம் 92
தந்தையார் 42
தருணவல்லி 63

**தா**

தாதகி 13
தாதுகமழுந் 34
தாதுற்றொளிரு 16
தாவுங்கனல் 86
தாவுமருவி 16
தானும்பரை 136

**தி**

திருக்காவண 132
திருந்தவரனார் 139
திருவடியை 86
திருவலையை 116, 123
திரையுடன் 111

**து**

துய்யபுகழ் 56
துளைவெயி 9
துள்ளும்மகர 50

**தெ**

தெண்ணீர் மதியம் 140

**தே**

தேங்கிய 2
தேவையிது 6

**தை**

தையலார் 104

**தொ**

தொண்டருய்ய 130
தொல்லைநில 47

**தோ**

தோண்புர 49
தோயுந்தோயு 103
தோலாவென்றி 59
தோன்றா 21

**ந**

நண்பு மருளும் 54

**நா**

நாட்டைமுழுதும் 72
நாயுடனோரி 150
நாய்களும் 151

**நி**

நினைத்த 79
நினைத்தமலர் 133
நின்னைப் பயந்த 133

**ப**

பங்கப் பிறையார் 61
பணிமகர 120
பண்டுமாலயன் 89
பண்ணார் தமிழால் 119
பண்பயில் 10
பத்திதுத்தி 82
பத்தியால் 25
பரதவர் 63
பரதவர்பரி 127
பரதவிக்கின்ற 74
பவளமலை 54
பள்ளியம் 13

**பா**

பாசிலை அடைக்காய் 151
பாதிமதி 118
பாராதெங்கும் 79

**பி**

பிறந்துவளர்ந்து 48

**பு**

புகவெஞ் 70
புதுமதன் 48
புயல்தாவுஞ் 7
புயல்வான் 35
புலியதளாடை 145

**பூ**

பூசல் விழியு 16
பூந்துகில் 102
பூவில்வரு 12
பூளையெருக்கு 82

**பெ**

பெண்டினை 10
பெருகாநின்ற 92
பெருநீர் 53
பெருமைதரும் 102

**பை**

பைரவர் சடை 142

**பொ**

பொருதிகிரி 57
பொற்புதைய 143
பொன்னடித்தாள் 88

**போ**

போற்றிப்பணி 77

**ம**

மக்களும் குலமும் 149
மங்கலவாத்திய 140
மங்கைப்பதி 61
மஞ்சுறத் 11
மடவாள்தன் 3
மட்டார் சடையார் 135
மணமுரசு 31
மண்ணானார் 26
மதியாலுண்டாம் 77

மதுரைவண் 13
மருக்கொண்ட 80, 103
மருக்கோல 152
மருங்குகின்ற 113
மருவும் நீரும் 79
மலைமகளார் 120
மலைமகள் 22
மல்லிகை 83
மறை பயிலும் 47

**மா**

மாணிக்கத்துடன் 83
மாதவரெல்லாம் 105
மாதாவுதரந் 74
மானங்குடி கொண்ட 133
மானமதுவே 134

**மு**

முதியதினா 62
முத்துச்சலாமு 130, 131
முருகனை 87
முற்றுச்சுர 90

**மை**

மைநாண் 66

**மொ**

மொத்திடும் 44

**யு**

யுகமது 114

**வ**

வடவையொத் 116
வண்டிணியுங் 12
வண்டுளப 108
வம்புசெய்தே 127
வயிரத்தாலே 131
வரங்கள் 31
வரியரவுஞ் 38
வலங்கொள் 1
வனவாருதி 113

**வா**

வாரண வெற்பை 88
வாழ்க சமைத்தவர் 154
வாழ்க நாற்பத்து 2
வாளையுகளத் 7
வானவரிருந்த 30

**வி**

விடமுமிழ் 124
விரவும் பல்லவ 150
விரிசொலு 85

**வீ**

வீசிக்கனன்று 24
வீரவாளை 13

**வெ**

வெங்காள 40
வெயிற்ப 2
வெள்ளிகொண்டு 60

**வே**

வேடஞ்சிவமா 136
வேதமுனிவரு 105
வேதாவின் 114
வேம்பார் 88
வேரிமலர் 142
வேர்த்த முகமும் 134

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்.